விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

33°c - 25°c தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 91 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 13, வியாழக்கிழமை 25.02.2016

## 25 வருடங்களின் பின் வெளியே வந்த நளினி

**தந்தையின் இறுதிக் கிரியையில் பங்கேற்றார்**

சென்னை, பெப்.25
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு வேலூர் சிறையில் அடைக் கப்பட்டுள்ள பக். 22

முச்சந்தி முரளி



எத்தின குற்றவாளிகளைப் பிடிச்சம் எண்டு சொல்ல முடியேல பாருங்கோ.....

# நேற்று அமைதியான அடைப்பு

## வடக்கில் இயல்புச் செயற்பாடுகள் கடும் பாதிப்பு
## வவுனியா மாணவியின் படுகொலையைக் கண்டித்து

யாழ்ப்பாணம், பெப்ரவரி 25
வவுனியா மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், இதற்கு உரிய நீதி வேண்டியும் வடக்கு மாகாணத்தில் நேற்று அமைதியான முறையில் அடைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது. இத னால் வடக்கில் மக்களின் இயல்பு வாழ்வு முடங்கியது.
நகர வியாபார நிலையங்கள் அனைத்தும் இழுத்து மூடப் பட்டிருந்தன. மாணவர் வரவு குறைவால் பாட சாலைகளும் செயலிழந்தன. எந்தவொரு பக். 22



## சமந்தாவுடன் மங்கள பேச்சு

நியூயோர்க், பெப். 25
வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நியூயோர்க்கில் இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலின்போது ஐக்கிய நாடுகளின் சமாதானம் பேணும் நடவடிக்கைகளில் இலங்கை வழங்கக்கூடிய பங்களிப்புப் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.
சமந்தா பக். 26

## நல்லாட்சி அரசில் 407 படுகொலைகள் 1078 வன்புணர்வுகள்

### நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, பெப். 25
நல்லாட்சி அரசு அமைந்த பின்னர் 407 படுகொலைகள், ஆயிரத்து 78 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள், 3 ஆயிரத்து 259 கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகச் சட்டம் ஒழுங்கு அமை பக். 26

## அமைச்சர் ஐங்கரநேசனுக்கு ஆதரவாகவும் பிரேரணை

### வடக்கு மாகாண சபையில் இன்று வருகின்றது

யாழ்ப்பாணம், பெப். 25
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது பதினொரு குற்றச்சாட்டுக்கள் சுமத் தப்பட்டு அது தொடர்பில் முதலமைச்சர் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று, மாகாண சபையின் கடந்த அமர்வில் சமர்ப்பிக் கப்பட்ட பிரேரணையை, சபைப் பதிவேட்டிலிருந்து (ஹன்சாட்) நீக்குமாறு கோரும் பிரேரணை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் மாகாண சபையின் எட்டு உறுப்பினர்களின் கையெழுத்துடன் சமர்ப்பிக்கப்பட் பக். 26

## முழங்காவில் பண்ணையை விடுவித்தனர் ராணுவத்தினர்

### ஏழு வருடங்களின் பின்னர் அது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது

கிளிநொச்சி, பெப். 25
7 வருடங்களாக இராணுவத்தினரால் ஆக்கிரமிக் கப்பட்டிருந்த 20 ஏக்கரைக் கொண்ட முழங்காவில் சுமன் விவசாயப் பண்ணை விடுவிக் கப்பட்டு பூநகரிப் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.
குறித்த காணிகள் விரைவில் உரிமையாளர்களிடம் பகிர்ந் பக். 22

## புதிய அரசமைப்பு மூலம் தீர்வுக்கான இணக்கப்பாடு

### அதனைக் குழப்பவேண்டாம் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, பெப்.25
புதிய அரசமைப்பினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.
இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த பணிகளைக் குழப்பவோ, தாமதப்படுத்தவோ கூடாது.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் பக். 22

## யாழ்ப்பாணம் வருகிறது பரணகம ஆணைக்குழு

### காணாமற்போனோர் குறித்து நான்கு நாள்கள் விசாரணை

யாழ்ப்பாணம், பெப். 25
காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் செவ்வாய்க் கிழமை வரை யாழ்ப்பாணத்தில் மீண்டும் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
காணாமற்போனவர்கள் தொடர்பில் பக். 26



## பஸ்ஸில் சிங்க லே ஸ்ரிக்கர்; வருந்துகின்றார் உரிமையாளர்

யாழ்ப்பாணம், பெப். 25
ஜனாதிபதி கலந்துகொண்ட தேசிய சாரணர் ஜம்போறி நிகழ்வில் 'சிங்க லே' ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட பஸ், சாரணர்களை ஏற்றி வந்தமை தொடர்பில், குறித்த பஸ்ஸை வாடகைக்கு வழங்கிய சமனல கப்ஸ் அன்ட் ருவேர்ஸ் நிறுவனம் வருத்தம் தெரிவித்துள்ளது.
இந்த ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டமையால் வேதனை அடைந்துள்ள அனைத்து உள்ளங்களிடமும் வருத்தம் தெரிவித்துக் கொள்வதாக, அந்த நிறுவனம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-
எமது நிறுவனத்துக்குச் சொந்தமான பஸ்ஸில் 'சிங்க லே' ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளது. அந்த ஸ்ரிக்கருக்கும் எமது நிறுவனத் துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதைத் தெரிவித்துக் பக். 26

## ஆடுகளைக் கையகப்படுத்த முயற்சிக்கிறது இராணுவம்

### கேப்பாப்பிலவு மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, பெப்.25
இராணுவத்தினரின் வசமுள்ள தமக்குச் சொந்தமான ஆடுகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்ல அவர்கள் முயற்சிக்கின்றனர் என்று கேப்பாப்பிலவு மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
போர் இடம்பெற்றபோது, தாம் வளர்த்த பெருந்தொகையான ஆடுகளைக் கைவிட்டு இடம் பெயர்ந்திருந்தனர் கேப்பாப்பிலவு மக்கள். போர் முடிவுற்ற பின்னர் அந்தப் பகுதியைத் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்துக்கொண்ட இராணுவத்தினர், ஏனைய வளங் களைப் பேரன்று பொதுமக்கள் விட்டுச் சென்ற ஆடுகளையும் கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.
இராணுவத்தினரால் கையகப் படுத்தப்பட்டிருந்த ஆடுகள் போர் முடிந்து 7 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் தற்போது பல்கிப் பெருகியுள்ளன. அவற்றையே இராணுவத்தினர் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப் படுகின்றது.

(விரிவான செய்தி 8 ஆம் பக்கத்தில்)

## பயணிகளை ஏற்றத் தகுதியற்ற 15 தனியார் பஸ்களுக்குத் தடை

### யாழ்.நீதிவான் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 25
பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கேற்ற நிலையில் இல்லாமல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த 15 தனியார் பஸ்களுக்கு யாழ்.நீதிமன்று தடை விதித்துள்ளது.
குறித்த பஸ்களுக்கு வழங்கப் பட்ட வழித்தட அனுமதிப்பத்திரங் களை இடைநிறுத்துமாறு உத் தரவிட்ட யாழ்.நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன், அவ்வாறு வைத்திருந்த குற்றத்துக் காக அபராதமும் பக். 26

## ஐ.நா. தீர்மானத்தில் சொற்பத்தையே நிறைவேற்றியுள்ளது மைத்திரி அரசு

### சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 25
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பாதிக் கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் [illegible] நடவடிக்கைகளே இதுவரை இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.
மனித உரிமைகள் தொடர்பான வாக்குறுதிகளை இலங்கை பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை பிரிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம்

## நேற்றைய சந்திப்பையடுத்து உள்நாட்டலுவல்கள் அமைச்சர் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 25
தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவை தென்மராட்சி மேற்கு மற்றும் தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படவுள்ளது. உள்நாட் டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததும் இது பற்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். தவிர அதனை இரண்டாகப் பிரித்து ஒரு பிரிவைத் தற்காலிக இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையில் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், மருதங்கேணி பிரதேச செயலாளருமான க. கனகேஸ்வரன், தென்மராட்சி மக்கள் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் 60 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன. இதனால் இந்தப் பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரித்து தென்மராட்சி மேற்குப் பிரதேச செயலகப்பிரிவாகச் சாவகச்சேரியையும் தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகப்பிரிவாகக் கொடிகாமத்தையும் பிரகடனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து நேற்றைய சந்திப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இணைத் தலைமைகளிடம் இந்த விடயம் முக்கிய விடயமாக வலியுறுத்தப்பட்டிருந்தது. சந்திப்பையடுத்து தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்ய அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தென்மராட்சி மேற்குப் பிரதேச செயலகப்பிரிவில் 32 கிராம சேவகர் பிரிவுகளும், தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 28 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டு அவை பிரிக்கப்படவுள்ளன. அடுத்த அமைச்சரவைக் கூட்டத் தில் அது பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்ததும் வர்த்தமானியில் அது பிரசுரிக்கப்படும். அத்துடன் தென்மராட்சி கிழக்குக்கான பிரதேச செயலகப் பிரிவுக்கென இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உரிய கட் டம் அமையும் வரை தற்காலிகமாக ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டு அதில் இயக்க வைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை பொதுநிர்வாக அமைச்சர் மத்தும பண்டாரவையும் இந்தக் குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதனையடுத்தே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுடான சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

### காலாவதியான பொருள்கள் விற்ற வர்த்தகர்களுக்கு அபராதம்

சாவகச்சேரி, பெப். 25
காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 14 வர்த்தகர்களுக்குச் சாவகச்சேரி நீதிமன்று தலா 9 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ். மாவட்டப்பாவனையாளர்பாதுகாப்பு அதிகார சபை அலுவலர்கள் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள கிருமி நாசினி விற்பனை நிலையம், ஆங்கில மருந்து விற்பனை நிலையம், தீந்தைப் பொருள்கள் விற்பனை நிலையம் உட்பட அனைத்து வணிக நிலையங்களிலும் நடத்திய திடீர்ப் பரிசோதனைகளின் போது திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ற-9)

### பூசனிக் கொடிகள் அழிப்பு: மேலும் ஒருவர் கைது

சாவகச்சேரி, பெப்.25
கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் தோட்டத்தினுள் அத்துமீறி நுழைந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட பூசனிக் கொடிகளைப் பிடுங்கி அழித்த சம்பவத்தடன் தொடர்புடைய மேலும் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபரை கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இந்த வழக்கில் ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டிலிருந்து வந்தவர் சுகவீன நிலையில் உள்ளவர் என்பதால் அவரைப் பிணையில் விடுமாறு நேற்றுமுன்தினம் சட்டத்தரணிமூலம்பிணை மனு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை நிராகரித்த நீதிவான் சிறைச்சாலையில் இந்த நபருக்குச் சுகவீனம் ஏற்பட்டால் உரிய சிகிச்சை பெற நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (ற-9)



உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீக்கு, ஜனாதிபதி செயலகத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

### தவறவிடப்பட்ட பேர்ஸ் உதயன் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ்.நகர் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் அமைந்துள்ள துவிச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு முன்பாக கடந்த வெள் ளிக் கிழமை, சிறு தொகைப் பணத்துடன் தவறவிடப்பட்ட பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும். (ற-5)

## குடிதண்ணீர்க் கிணற்றின் அருகில் மலக்கழிவு கொட்டும் சீருடையினர்

### தென்மராட்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, பெப்.25
தென்மராட்சிப் பிரதேசத்தில் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு அதிகரித்து வரும் நிலையில் வேம்பிராயில் உள்ள கிணற்றில் இருந்து பல கிராமங்களுக்குச் சாவகச்சேரி நகர சபையால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் குறித்த கிணற்றை அண்டிய பகுதியில் சீருடைத் தரப்பினர் மலக்கழிவுகளைக் கொட்டிச் செல்கின்றனர் என்று பொதுமக்களும், பொது அமைப்புக்களும் குற்றஞ்சாட்டுகின்றனர். மலக்கழிவுகளைக் கொட்டும் வாகனங்களின் இலக்கங்களும் தம்மிடம் உள்ளன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீருடையினர் மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவுகளைக் கொண்டு வந்து கொட்டுவதை அவதானிக்கும் அந்தப் பகுதிப் பொது மக்கள் பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸார் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஆகியோருக்கு முறையிட்டால் இது தொடர்பான நடவடிக்கை உரிய அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்படும் என்று இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தெரிவித்தனர். (ற-ஐ-9)

## போதைக் குற்றச்சாட்டில் 551 மாணவர்கள் கைது

கொழும்பு, பெப். 25
போதைப் பொருள் குற்றச் செயல்கள் தொடர்பில் 551 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாலக ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் புத்திக்க பத்திரண எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 551 மாணவர்கள் போதைப் பொருள் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்கள் மூன்று மாத கால உளவியல் சிகிச்சைக்காக கண்டியில் அமைந்துள்ள சிகிச்சை நிலையமொன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகள் சில தரப்பினரால் எடுக்கப்பட்டு வருகின்றது என்று அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய அமைச்சர் குறித்து கருத்து; மன்னிப்புக் கோருகிறார் தியாகராஜா

யாழ்ப்பாணம், பெப். 25
வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்குக் கோடிக்கணக்கான பணம் எவ்வாறு கிடைத்தது என்று, நம்பகத்தன்மையற்ற மின்னஞ்சலில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலை ஊடகவியலாளர் சந்திப்பில் பகிரங்கப்படுத்தியமை தொடர்பில் வருத்தம் தெரிவிப்பதாக, வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் வழங்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வவுனியாவில் கடந்த 12 ஆம் திகதி நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில், வடக்கு மாகாண விவசாய அமைச்சரால் 4 கோடிரூபா பணம் அவருடைய மகளின் படிப்புச் செலவுக்காக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னரே இது நடைபெற்றுள்ளது. இவ்வளவுபெருந்தொகை நிதி அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்று குறிப்பிட்டிருந்தேன். மின்னஞ்சல் ஒன்றின் அடிப்படையிலேயே குற்றச்சாட்டை முன்வைத்திருந்தேன். குறித்த மின்னஞ்சல் அரசியல் உள்நோக்கம் கருதி அநாமதேய மின்னஞ்சல் முகவரியிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டேன். தீர விசாரிக்காமல் பத்திரிகையாளர் சந்திப்பில் அதனைப் பகிரங்கப்படுத்தியமைக்காக மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா இருவரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சார்பில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## உயர் கல்விக்கான வெகுமதிக்கு விண்ணப்பிக்கலாம்

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியஅங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு,அவர்களின் உயர்கல்விக்கான வெகுமதிகள் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையால் வழங்கப்படவுள்ளன. அங்கத்தவர்களின் பிள்ளைகளில்10ஆயிரம் பேருக்கு, ஒவ்வொருவருக்கும் 12ஆயிரம் ரூபா பெறுமதியான வெகுமதிகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு பாடத் துறையிலும் மேற்படி பரீட்சையில் அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 10 ஆயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரியைக் கொண்ட 9X4 அளவுடைய தபால் உறையை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் இல.70, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு, அனுப்பிவைப்பதன் மூலம்தபாலில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அலுவலக நேரங்களில் நேரடியாக வருகை தருவதன் மூலமும், www.etfb.lk எனும் எமது இணையத்தளத்திலும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம் என ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியசபையினர் அறிவித்துள்ளனர். (ற-ரி4)

Galaxy Star
வெற்றி வாரம் 037 திகதி 24.02.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 09 16 51 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,794,020/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2743 திகதி 24.02.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
19 45 50 62 N
போனஸ் இல. 41
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ.13,766,800/-
2016.02.27 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

### யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை 200 ஆவது ஆண்டுவிழாவிற்கான

**யா/பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அறிவித்தல்**

மேற்படி 200ஆவது ஆண்டு விழா ஏற்பாடுகள் தொடர்பாக செயற்பாடுகள் மற்றும் குழுக்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 03/03/2016 வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளைச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்
யா/யூனியன் கல்லூரி

(c/29520)(15,17)

### காணி விற்பனைக்கு

இல.11, சோமசுந்தரம் அவனியு A9 வீதிக்கு அருகில் 1 ½ பரப்புக் காணி கிணறு சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
076 8353 719 (69568)(10.17)

### கடைத்தொகுதியுடன் காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலைக்கு முன்பாக 5 பரப்புக் காணி கடைத் தொகுதியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
076 8353 719 (69569)(10.17)

### Mobile Phone
திருத்தும் பாடநெறி



58th Batch Starts on 03-03-2016

- *Smart Phone கள் உட்பட அனைத்து Phone களிலும் ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும்.
- *சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி.
- *இலவசமாக தகவல்கள் அடங்கிய CD & Handbook
- *அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

iCS Education
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
Registration :- 021 7306000
076 7013060

### வேலையாள்கள் தேவை

ஸ்ரான்லி வீதியில் உள்ள உணவகத்துக்கு
- ரொட்டி தயாரிப்பாளர்
- உபசரிப்பாளர் (வெயிட்டர்)
- காசாளர் (பெண்) ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

உடன் தொடர்புகொள்ளவும்
077 410 3245, 077 42 13931
(69567)(10.17)

### வாடகைக்கு

பிஜாஜ்யோ (PIAGGIO) பொதிகாவி ஆட்டோ வாடகைக்குவிடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 076 886 5812

### வேலையாள்கள் தேவை

கொழும்பு நகரில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய அலுமினியம் பிற்றிங் வேலையாள்கள் தேவை.
தொடர்புக்கு: 077 3022 443

### பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்



21.02.2016 ஞாயிறு மாலை 7.00 மணியளவில் K.K.S. வீதியில் ஒரு லட்சத்து மூவாயிரத்து முன்னூற்று எழுபது (103370/-) ரூபாவும், தே.அ.அட்டை, வங்கி அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் போன்ற ஆவணங்கள் என்னால் தவறவிடப்பட்டது.

இதனை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை ஊழியரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் உபதலைவரும், நடுவருமான

**திரு. பீதாம்பரம் ஜெயவிந்தன்**

என்பவர் கண்டெடுத்திருந்தார். அதனை எனக்கு ஒப்படைப்பதற்காக என்னைக் கண்டறிந்து அப்பணத்தை கிடைக்கச் செய்ய உதவிய சுன்னாகம் நகர் மத்தி கிராம அலுவலர் (J/198) திரு. இ. எயுயீன் மசனைட் ஆகிய இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் பணம் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக பத்தாவது ஆண்டு விழாவில் 23.02.2016 செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணியளவில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

விக்கினேஸ்வரன் தனுசன்
(69563) (10.17.20)

### வர்த்தக அடையாள எச்சரிக்கை அறிவித்தல்
(இலங்கையில்)

எமது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை இல. K 228, MIDC, கைத்தொழில் பிரதேசம், வாலுஜ், அவுரங்காபாத், 431136, இந்தியா எனும் விலாசத்தில் கொண்டிருக்கும் ENDURANCE TECHNOLOGIES PRIVATE LTD. ஆகிய நாம் பின்வரும் வர்த்தக அடையாளத்தின் உரிமையாளர்களும் தனி உடைமையாளர்களும் ஆவோம் என்பதை இத்தால் அறிவித்தல் செய்கிறோம்.

ENDURANCE

மேலே உள்ள வர்த்தக சின்னம் தரை வாகனங்கள், தானியங்கு வாகனங்கள் மற்றும் தானியங்கு வாகன உதிரிப்பாகங்கள் வார்ப்பு, தொங்கல், பரிமாற்றம், உற்பத்தி, உடைப்பு, இலகுவான கலப்பு உலோக சக்கரங்கள், வாகனங்களுக்கான தொங்கு அதிர்ச்சி தாங்கிகள், சகல தானியங்கு வாகன பகுதிகள் மற்றும் துணை உறுப்புக்கள் உள்ளிட்டவை தொடர்பில் உபயோகிக்கப் படுகிறது.

நாம் எமது மேற்படி வர்த்தக அடையாளத்திற்கு ஏகோபித்த முக்கியத்துவம் கொடுப்பதுடன் இதன் உரிமையை துஷ்பிரயோகிக்கும் அல்லது சட்டவிரோதமாகப் பாவிக்கும் நபர் அல்லது நபர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை வர்த்தகத்துறையினதும் பொது மக்களினதும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

இலங்கையில் எமது தற்போதய அங்கீகாரம் பெற்ற விநியோகப் பங்காளர்கள் LEADER AUTOMOBILE (PVT) LTD. 208. கொழும்பு வீதி, வெலிகம்பிட்டிய, பொக்குணவிற்ற, ஹொறண, இலங்கை மற்றும் ZEENATH TRADING (PVT) LTD இல.116A, மாளிகாவத்தை வீதி, மாளிகாவத்தை, கொழும்பு-10 இலங்கை. ஆகியோர் ஆவர்.

ENDURANCE ரக தானியங்கி வாகன உதிரிப்பாகங்களை எமது விநியோகப் பங்காளர்கள் தவிர்ந்த ஏனைய விநியோகத்தர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் எவரும் இறக்குமதி செய்யவோ அல்லது விநியோகிக்கவோ அங்கீகாரமளிக்கப்படவில்லை என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகிறது.

இது தொடர்பான வீசாரணைகளுக்கு
தொ.பே. இல: +91240256960
மின்னஞ்சல் : marketing@endurance.co.in

ENDURANCE TECHNOLOGIES PRIVATE LIMITED
K 228, MIDC, INDUSTRIAL AREA, WALUJ, AURANGABAD: 431 136, INDIA.
Website: www.endurancegroup.com

### 75 ஆவது அகவை பிறந்த தின நல்வாழ்த்து

25.02.2016




**திரு. சபாரட்ணம் கனகசபாபதி**
(ஓய்வுநிலை கணக்காளர் MPCS நல்லூர்)

அகவை எழுபத்தைந்தாவது காணும் எங்கள் தந்தையே
ஆண்டுகள் நீண்டிட நீடுநீர் வாழ்கவே
இதயத்தில் தினம் வைத்து இன்புறும் உமக்கிங்கு
ஈடில்லை - இனிமையாய் வாழ்கவே வாழ்கவே

வாழ்த்துவோர்:
மனைவி :- திருமதி க.நாகேஸ்வரி
மகன்மார் :- க.பாலகொங்கன் (சுவிஸ்)
க. பாலவிசாகன் (ஆசிரியர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)
க.பாலசபேஷ்:-(ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)
மருமகள்மார்:- ரதி (சுவிஸ்),நிலோஜா (பிரதேச செயலகம்)
மற்றும் மாமி, சகோதரர்கள், சகோதரிகள், மச்சான் மார், மச்சாள் மார், பேரப்பிள்ளைகள்.
(c/29518)(10.17.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்கா தொடர்பில் பேச இந்தியக் குழு வருகிறது

## நாடாளுமன்றில் பிரதமர் தகவல்

கொழும்பு, பெப். 25
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை (எட்கா) குறித்துப் பேச்சு நடத்துவதற்காக எதிர்வரும் 4 ஆம் திகதி இந்தியத் தூதுக்குழு இலங்கை வரவுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இருதரப்பு உடன்படிக்கை வரைவை ஆராய்ந்து, இறுதி வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி ஜூனில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த உடன்படிக்கைக்கு எதிராக மகிந்த தரப்பினர் மற்றும் ஜே.வி.பி. ஆகியவை கடும் எதிர்ப்பை வெளியிட்டுவரும் நிலையிலேயே, பிரதமர் இந்தத் தகவலை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகள் குறித்த அறிவிப்பின்போதே மேற்கண்ட விடயங்களை சபைக்குப் பிரதமர் தெரியப்படுத்தினார்.

> சீபா உடன்படிக்கைக்குப் பதிலாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த உடன்படிக்கையின் உத்தேச வரைவு எமது தரப்பில் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

### அச்சம் வேண்டாம்

சர்வதேச நாடுகளின் சந்தையில் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அவற்றுடன் போட்டியிட்டு பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவும் இந்தியா, சீனா, சிங்கப்பூர், துருக்கி, தாய்லாந்து, மலேசியா உள்ளிட்ட நாடுகளுடன் உடன்படிக்கை செய்யவுள்ளோம். இந்த உடன்படிக்கைகள் குறித்து அச்சம்கொள்ளத் தேவையில்லை. தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பத் தேவையில்லை. சீபா உடன்படிக்கைக்குப் பதிலாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த உடன்படிக்கையின் உத்தேச வரைவு எமது தரப்பில் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இந்தியத் தரப்பில் உத்தேச வரைவொன்று உருவாக்கப்படவுள்ளது. எனவே, இரண்டையும் ஆராய்ந்த பின்னரே உடன்படிக்கையின் இறுதி வரைவு உருவாக்கப்பட்டு கைச்சாத்திடப்படும்.

### பாதிப்பு ஏற்படாது

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதால் இலங்கையின் தொழில் வாய்ப்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. முதலீட்டாளர்களுக்கு மட்டுமே இதனூடாக நாம் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளோம். இருநாட்டுத் தொழிலாளர்களும் சுதந்திரமாக இதனூடாக தொழில் வாய்ப்புகளில் ஈடுபடமுடியாது. எனவே, இலங்கையரின் தொழில் வாய்ப்புக்கு இதனூடாக பாதிப்பு ஏற்படாது. இலங்கை இந்திய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை குறித்து பேச்சு நடத்துவதற்காக எதிர்வரும் 4 ஆம் திகதி இந்தியத் தூதுக்குழு இலங்கை வருகின்றது. இதை யடுத்து, உடன்படிக்கை தொடர்பான இருநாட்டு வரைவுகளும் ஆராய்ந்து இறுதி வரைவு தயாரிக்கப்படும். பின்னர் இறுதி வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி ஜூனில் கைச்சாத்திடப்படும்.

எனவே, உடன்படிக்கை வரைவு தயாரிக்கப்படும் முன்னரே அது குறித்து தவறான விமர்சனங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லக் கூடாது. உடன்படிக்கை இறுதி வரைவு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது குறித்து உங்கள் கருத்தை வெளியிடுங்கள். அதைவிடுத்து, உங்களது தனிப்பட்ட கனவுகளை அடிப்படையாகக் கொண்டு கருத்து வெளியிடவேண்டாம் – என்றார்.

இதேவேளை, கப்பல் புனரமைப்பு மற்றும் உற்பத்தி தொடர்பில் மார்ச் இறுதியில் சீனாவுடன் பேச்சு நடத்தப்படும் – என்றார்.

(ற-5-சி)

# தமிழும் அரச மொழி என்பதை அரசமைப்பில் மாற்றியமைக்குக

## ஜே.வி.பி. வலியுறுத்துகின்றது

கொழும்பு, பெப். 25
தமிழும் அரச கரும மொழி என்று தற்போதைய அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பில் அதனை மாற்றியமைத்து, சிங்களம் – தமிழ் – ஆங்கிலம் ஆகிய மொழிகள் அரச கரும மொழிகளாக உள்வாங்கப்பட வேண்டும். – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதமருக்கு தன்னிச்சையான அதிகாரங்களை வழங்கக் கூடிய வகையில் புதிய அரசமைப்பை உருவாக்க அரசு முயற்சித்தது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்ததால், புதிய அரசமைப்புப் பணிகளில் இருந்து அரசு (ஐ.தே.க.) பின்வாங்கியது. புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அரசின் முழு இணக்கப்பாடும் இல்லை என்பது எமக்கு இதனூடாகத் தெரிகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் என்ற விடயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் அரசு பிற்போடுகின்றது. மேலும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையும் பிற்போடுகின்றது. இது முழுத் தவறாகும். புதிய அரசமைப்பில் தேசிய சமத்துவம், ஒருமைப்பாடு, சமய நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத் தக்கூடிய அத்தியாயங்களை உள்வாங்க வேண்டும்.

தற்போதைய அரசமைப்பில் சிங்களம் அரசகரும மொழி. தமிழும், ஆங்கிலமும் அரசகரும மொழியாகக் கருதப் படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழும் அரசகரும மொழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'மும்' என்ற வார்த்தையினூடாக அந்த (தமிழ்) மக்கள் தாம் இரண்டாம் தரத்தவராக எண்ணுகின்றனர். எனவே, புதிய அரசமைப்பில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் அரசகரும மொழிகள் என்று உள்வாங்கப்பட வேண்டும் – என்றார்.

(ற-சி)

# இணையத்தளத்தில் வெளியான ஒப்பந்த ஆவணம் போலியானது

## பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25
அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணையத் தளத்தில் போலியான ஒப்பந்த ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா, இந்தியாவுடன் இதுவரையில் எந்த ஒப்பந்தமும் மேற் கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவுடன் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ள ஒப்பந்தம் இதுவரையில் கைச்சாத்திடப்படவில்லை. அரச வைத்திய சங்கத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்த ஆவணம் போலியான தாகும். இதுவரையில் அப்படி ஒரு ஒப்பந்தம் கைச் சாத்திடப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தின் கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் பேச்சு நடத்துவோம். அவ் வாறு நடத்தப்படும் பேச்சில் இந்த நாட்டிலுள்ள தொழிற் சங்கங்கள், சகல அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொள்வோம். பேச்சுக்குத் தேவையான அடிப்படையை உருவாக்குவது தொடர்பிலேயே தற்போது கலந்துரையாடி வருகின்றோம். இது குறித்து எந்தவொரு ஒப்பந்தமும், உடன்படிக்கையும் இது வரையில் கைச்சாத்திடப்படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களுக்குத் தெரியாமல் மறைவாக எந்தவொரு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவில்லை. அவர் கைச்சாத்திட்டுள்ள சகல ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் வெளிப்படையாகவே கைச்சாத்திடப்பட்டுள்ளன. கட்சி தொடர்பிலோ, அரசு தொடர்பிலோ எதுவானாலும் பிரதமர் எதனையும் மறைத்து செய்ததில்லை. அவர் வெளிப்படையானவர். எதனையும் வெளிப்படையாகவே செய்வார் – என்றார்.

(ற-5)

**தவறிவிட்டது**

பருத்தித்துறை வீதி. நெல்லியடி நகரப்பகுதிக்குள் (21.02.2016 அன்று) கார் றிமோட் " கீ " (திறப்பு) சாயிபாபா கீற்ரெக்குடன் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 495 1942

**வீடு வாடகைக்கு உண்டு**

சாவகச்சேரி, நுணாவில் பருத்தித்துறை வீதியில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. பஸ்பாதை, கடைவசதி, நன்னீர்வசதி பாடசாலை வசதிகளும் உள்ளன.

(69556) (13,18,20)

தொடர்பு: 078 615 5929

**கார் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், வவுனியாவில்
புத்தம் புதிய கார்




வெள்ளை நிறம்
விற்பனைக்கு

(69407)
(14,18,20)

076 558 9752, 077 923 5465

# உள்ளூராட்சி எல்லை நிர்ணயம்; 2,000க்கும் அதிக முறைப்பாடு

கொழும்பு, பெப். 25
உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் மக்களின் முறைப்பாடுகள் மற்றும் மேன் முறையீடுகளைக் கண்டறியும் ஐவர் கொண்ட குழுவுக்கு இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தேர்தல்கள் கண்காணிப்பு குழுக்கள் மற்றும் மக்களிடம் இருந்து இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான உள்ளூராட்சிப் பிரிவுகளிருந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் குறித்த குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்றும், இது வரையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் முடிவுகள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் குறித்த அமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளதுடன் எதிர்வரும் ஜூலை மாதம் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் நடத்துவதை இலக்காகக் கொண்டே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

(ற-5)

# இலங்கை அகதிகளைத் திருப்பியது ஆஸி.

சிட்னி, பெப். 25
இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு வந்த அகதிகள் படகு ஒன்றை தமது கரையோரப் படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர் என்று ஆஸ்திரேலிய குடி வரவு, குடியகல்வு அமைச்சர் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் சில வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் சிறந்த உறவை கொண்டிருக்கும் நாடு என்ற வகையில் ஆஸ்திரேலியா குறித்த அகதிகள் என்று கூறப்பட்டோரை திருப்பியனுப்பியது என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசைப் போலவே இந்த அரசும் நடக்கின்றது

## பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 25
கடந்த அரசைப் போன்றே, தற்போதைய அரசும் பல்கலைக் கழக மாணவர்களை அணுகுகின்றது. பல்கலைக் கழக மாணவர்களின் பின்னால் புலனாய்வுத் துறையினரை அனுப்பி நாம் என்ன செய்கின்றோம் என்பதை அவதானிக்கின்றது. அரசுகள் இவ்வாறு செய்தாலும், மாணவர்களின் கல்விக்கான உரிமைப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். - இவ்வாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு விஜயசூரிய தெரிவித்தார்.

> அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் நாங்கள் எங்கள் உரிமைகளைக் கேட்டு, எமக்காகவும் எமக்குப் பின்வரும் சகோதரர்களுக்காகவும் போராட்டங்களை நடத்திக் கொண்டுதான் இருப்போம். இதைத் தடுக்க முடியாது.

பல்வேறு கருத்துக்களை முன்வைத்து அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்று நடத்தியது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-
தற்காலத்திலும் சரி, கடந்த காலங்களிலும் சரி பல்கலைக் கழக மாணவர்கள் மீது அரசு அடக்கு முறையைக் கையாள்கிறது. இந்த நல்லாட்சி அரசில் கூட பல்கலைக் கழக மாணவர்கள் எதிர்பார்க்கும் சுதந்திரம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.
பல்கலைக்கழக மாணவர்களைக் கொலை செய்த சம்பவங்கள் மூன்றும், 175 தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 2012 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட 2 பல்கலைக் கழக மாணவர்களின் உயிரிழப்புக்கும் இதுவரை எந்த நியாயமும் கிடைக்கப் பெறவில்லை. கடந்த அரசு மாணவர்களின் சாவை விபத்தாக மாற்றியிருந்தது.
நாங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காகவே போராடுகின்றோம். நாங்கள் எங்களது சுதந்திரக் கல்வியையே கேட்கின்றோம்.
கடந்த அரசும் தற்போதைய அரசும் மாணவர்களாகிய எங்களை அடக்குகின்றது. எங்களது உரிமைகளைக் கேட்டதால் தற்போதைய அரசு பல்கலைக் கழக மாணவர்களின் வீட்டிற்கு பாதுகாப்புப் படையை அனுப்பி மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. மேலும் இரகசிய புலனாய்வுப் பிரிவினரையும் அனுப்பி பொய்யான தகவல்களைக் கூறி மாணவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றது.
அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் நாங்கள் எங்கள் உரிமைகளைக் கேட்டு, எமக்காகவும் எமக்குப் பின்வரும் சகோதரர்களுக்காகவும் போராட்டங்களை நடத்திக் கொண்டுதான் இருப்போம். இதைத் தடுக்க முடியாது.
கடந்த அரசைப் போன்றே தற்போதைய அரசும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களை நடத்திவருகின்றமையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். மேலும் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் போராட்டம் ஒன்றை இன்று நடத்தவுள்ளனர்.– என்றார். (ற-5)



# மகிந்த மைதானத்தில் தற்போது திருமணங்கள்


## –தயாசிறி ஜயசேகர

கொழும்பு, பெப். 25
அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் பிரதான நுழைவரங்கு திருமண நிகழ்வுகள் நடத்துவதற்கு வாடகைக்கு விடப்படுகின்றது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறாத காரணத்தால் பிரதான நுழைவரங்கு திருமண விருந்துபசார மண்டபமாகச் செயற்பட்டு வருகின்றது. நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் திருமண நிகழ்வுகளுக்காகக் குறித்த அரங்கம் வழங்கப்படுகின்றது.
இந்த விளையாட்டு அரங்கம் மூடப்பட மாட்டாது. விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சர்வதேசப் பயிற்சிகளை நடத்தக் கூடிய ஓர் மைதானமாக இந்த மைதானத்தை மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.
சூரியவெளி பிரதேசத்தில் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு உசிதமான விடுதிகள் கிடையாது. அவ்வாறான விடுதிகள் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
இதேவேளை கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இலங்கையில் நடந்தபோது, அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ச கிரிக்கெட் மைதானத்திலும் போட்டிகள் நடத்தப்பட்டன. (ற-5)

# 99 ஆண்டு கால குத்தகைகளால் காலனித்துவ நாடாகும் இலங்கை

## எச்சரிக்கின்றார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, பெப். 25
வெளிநாடுகளுக்கு நீண்ட காலக் குத்தகைக்குக் காணிகளை வழங்குவது போன்ற தவறான



கொள்கைகளை அரசு பின்பற்றினால், இலங்கை மீண்டும் காலனித்துவ நாடாக மாறும் ஆபத்து இருப்பதாக, முன்னாள் அமைச்சரும், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.
சோசலிச மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அதுல் கெசாப் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு இது தொடர்பாக அனுப்பியிருந்த விரிவான அறிக்கை ஒன்றின் அடிப்படையில் தான், இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன்.
திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இராணுவத் தளங்களை உள்ளடக்கியதாக ஒரு அமெரிக்கத் தளத்தை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அதுல் கெசாப் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.
வெளிநாட்டவர்களுக்கு 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு காணிகளை வழங்குவது போன்ற தவறான கொள்கைகள் அரசால் பின்பற்றப்பட்டால், மீண்டும் இலங்கை ஒரு காலனித்துவ நாடாக மாறும் ஆபத்து உள்ஷளது என்றார். (ற-5)

# மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.25
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், வருடாந்த ஆய்வரங்கு நிகழ்வை முன்னிட்டும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளது
திருமுறையும் சைவத் திருநெறியும் பன்முக நோக்கில் பதினோராம் திருமுறை எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.
பாடசாலையில் ஜி.சி.ஈ. உயர்தரம் கற்கும் இந்து மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம்.
பாடசாலை மாணவர்களுக்கான போட்டித் தெரிவுகள், பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட வேண்டும். பாடசாலை மாணவர்கள் பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 500 சொற்களுக்கு மேற்படாமல் ஏ4 தாளில் கையெழுத்துப் பிரதியாகத் தயாரித்து, பாடசாலை அதிபரால் அத்தாட்சிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
பக்தி இலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையார், 11 ஆம் திருமுறையில் விநாயகர், 11 ஆம் திருமுறையில் முருகன், 11 ஆம் திருமுறையில் சம்பந்தர், 11 ஆம் திருமுறையில் அப்பர், நம்பியாண்டார் நம்பியின் கவித்திறன். பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மணவர்களது கட்டுரைகள் யாவும் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 1/1 காலி வீதி, கொழும்பு 4 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
திறமையை வெளிக்காட்டும் மாணவர்களுக்கு விருதுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆய்வரங்க நிகழ்வில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

மணிவிழா வாழ்த்துக்கள்



கடந்த 29 வருடங்களாக எமது கல்லூரியில் ஆசிரியராகவும், ஆலோசனை வழிகாட்டல் பொறுப்பாசிரியராகவும் அளப்பரிய சேவையாற்றி 25.02.2016 அன்று சேவையிலிருந்து ஓய்வுபெறும் விஞ்ஞான ஆசிரியர்
திருமதி இரத்தினபூபதி நாகேந்திரன்
அவர்கள் எமது கல்லூரியில் விஞ்ஞானக் கல்வியின் உறைவிடமாய் இருந்து மாணவர் கல்வியில் அபரீத கவனத்துடன் சேவையாற்றிய நல்லாசிரியர் அவர்களை வாழ்த்தி வணங்கி அவரது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு வேம்படி விநாயகரையும் இறைஞ்சுகின்றோம்.
சேவை விவரம்:
முதல் நியமனம் - 08.01.1979
யா/விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் - 08.01.1979 - 17.01.1982
ஆசிரிய கலாசாலை (பலாலி) - 18.01.1982 - 31.12.1983
மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் - 01.01.1984 - 01.04.1984
யா/உடுத்துறை மகா வித்தியாலயம் - 01.05.1984 - 31.12.1986
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி - 01.01.1987 - 25.02.2016
கல்லூரிச்சமூகம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
(60747) (13.18)

# வளலாயில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு மலசலகூடங்கள்

யாழ்ப்பாணம், பெப். 25
வளலாய் வடக்கில் மீள் குடியமர்ந்து தற்காலிக கூடாரங்களில் வதியும் மக்களில் 39 பேருக்கு தொண்டு நிறுவனங்களால் மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.
மீளக்குடியமர்ந்த 42 பேரில் முதற்கட்டமாக 31 பேருக்கு ஜெசாக் நிறுவனத்தாலும் அடுத்து 8 பேருக்கு சேவாலங்கா நிறுவனத்தாலும் மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டு அவற்றின் கட்டுமாணப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முதற்கட்டமாக 31 பேருக்கு வழங்கப்பட்ட மலசலகூடங்களின் கட்டுமாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.
இந்தத் திட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள அங்கவீனமான ஒருவருக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தினால் இருக்கை வசதியுடன் கூடிய மலசலகூடம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன – என்று தெரிவித்தார். (ற-ரி,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகரை மிரட்டியவரைப் பகிரங்கப்படுத்த வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்

கொழும்பு, பெப். 25
சபாநாயகர் கருஜயசூரியவுக்குத் தொலைபேசியூடாகக் கொலை அச்சுறுத்தல் விடுத்த நபரைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினராகிய எம்மை நாடாளுமன்றில் அங்கீகரிக்குமாறு, சபாநாயகராகிய உங்களிடம் கோரிக்கை விடுத்தபோது,உங்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவித்தீர்கள்.

அவ்வாறு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தி, தொடர்புபட்டவர்கள் பற்றி அறிவிக்குமாறு நாம் கேட்டிருந்தோம்.

ஆனால் தற்போது வரையில் அது தொடர்பிலான எந்தவிதமான தகவல்களும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. தங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலானது முழு நாடாளுமன்றத்திற்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகவே நாம் பார்க்கின்றோம்.

அவ்வாறு இருக்கும்போது, அது தொடர்பான விசாரணைகளை ஏன் இடைநிறுத்தினீர்கள்?

அச்சுறுத்தல் விடுத்தவரை நீங்கள் மன்னித்து விட்டீர்கள் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அவரது நண்பர் தொடர்புபட்டுள்ளமையினாலா விசாரணைகளை இடைநிறுத்தியுள்ளீர்கள் ? என்று வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பினார்.

எனினும், அவ்வாறு விசாரணைகள் இடைநிறுத்தப்படவில்லையென்றும், தாம் மன்னிப்பு அளித்ததாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் சபாநாயகர் கரு ஜய சூரிய பதிலளித்தார். (ற-5)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி லோஜினி
பார்த்தீபன் அவர்களின் பாசமிகு மாமனார்
**தம்பு சிவசுப்பிரமணியம்**
(உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)
அவர்கள் 23.02.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிகழகம்
யா/இணுவில் மத்திய கல்லூரி. (69409) (13.18)

**உங்கள் நினைவுகளில் நாம்**



பூமியில் 21.09.1921 — விண்ணில் 09.03.2004
பூமியில் 02.06.1926 — விண்ணில் 22.12.2006

**சோமசுந்தரம் நடராஜா** — திதி : திருதியை
**திருமதி அழகம்மா நடராஜா** — திதி : துதியை

பெற்றோர்களே ! எங்களைப் பாரினில் சிறப்புற வாழவைத்தீர்கள்
வையகம் போற்றிட வாழ்ந்து காட்டினீர்கள்
வறுமையிலும் செம்மை வாழ்விலும் உண்மை
தங்கள் வழியில் நாமும் கலட்டி அம்மன் அருள் வேண்டுகின்றோம்
தங்கள் விண்ணுலக வாழ்க்கைக்கு !

49/9, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
(69554) (14,18,20)
குடும்பத்தினர்.

# பிரகீத்தின் சட்டத்தரணியை அச்சுறுத்தும் சுவரொட்டிகள்

கொழும்பு, பெப். 25
பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி மற்றும் அரசதரப்புச் சட்டத்தரணி ஆகியோரை அச்சுறுத்திய வழக்கிலிருந்து, பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அரச சட்டத்தரணியை அச்சுறுத்தும் வகையிலான சுவரொட்டிகள் அரச சட்டத்தரணியின் வீட்டுக்கு அருகில் ஒட்டப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமல் போகச்செய்யப்பட்ட வழக்கின் அரச தரப்புச் சட்டத்தரணியான திலீப பீரிஸ், சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வாளர்களுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை நீதிமன்றில் வெளிப்படுத்தி வருகின்றார்.

இந்த நிலையில் ஹோகந்தரை பிரதேசத்தில் உள்ள திலீப பீரிஸின் இல்லத்தினருகிலும், அந்தப் பிரதேசம் முழுமையாகவும் அவரை அச்சுறுத்தி, கேவலப்படுத்தும் வகையிலான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணையின் போது பொலிஸார் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள சீசீரிவி கருவிகளைப் பரிசோதித்துப் பார்த்தபோது சுவரொட்டிகள் ஒட்டியவர்கள் தொடர்பான எந்தவொருகாணொளிப் பதிவும் அவற்றில் பதிவாகி இருக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது. சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் அந்தளவுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் அவற்றைஒட்டியிருப்பது பொலிஸாரை ஆச்சரியப்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ற-5)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

**அமரர் முருகேசு நல்லம்மா**



மண்ணுலகில் 04 . 12 . 1922
விண்ணுலகில் 27 . 01 . 2016

கடந்த 27.01.2016 இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் முருகேசு நல்லம்மா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 23.02.2016 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (25.02.2016) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் கண்ணீர் அஞ்சலி, மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 54/1, திருவையாறு,
கிளிநொச்சி.
குடும்பத்தினர்.
077 255 6004

# இந்து மதத்தின் மீதும் நம்பிக்கை இருக்கிறது

## அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25
பௌத்த மதத்தைப் போன்றே எமக்கு இந்து மத நம்பிக்கையும் காணப்படுகின்றது. - இவ்வாறு தேசிய நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பௌத்தத்தைப் போன்றே இந்து மதத்தையும் வழிபடுகின்றோம். இதன் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன உள்ளிட்டவர்கள் இந்து ஆலயத்துக்குச் சென்று தேங்காய் உடைத்தார்கள். இந்த நாட்டில் அனைத்து இன மதங்களுக்கும் பொருந்தக்கூடிய அரசமைப்பு உருவாக் கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அடிப்படை வாதக் கருத்துக்களை வெளியிடும் சில நாடாளுமன்ற உறுப் பினர்கள் சுதந்திரக் கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள். சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டி ருக்கா விட்டால் அவர்களுக்கு முகவரியிருந்திருக்காது. - என்றார். (ற-5)

# பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப். 25
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும்,தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும்,கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்), எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி சந்திரமணி சிவபாதசுந்தரம் நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும், மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என்று அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல் ஆகியோரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் காணிகள் கிடைத்தும் சோகத்தில் வலி.வடக்கு மக்கள்

## மீள்குடியமர்வுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படாதமையால்

யாழ்ப்பாணம், பெப்.25

கடந்த டிசெம்பர் மாதம் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 700 ஏக்கர் நிலப்பரப்பில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட மக்கள் தற்போதும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதி மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் அது குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தலோ - அனுமதிப் பத்திரமோ வழங்கப்படவில்லை. அதனால் குறித்த மக்களுக்கு மீள்குடியமர்வுக்குரிய கொடுப்பனவோ அல்லது அபிவிருத்தி உதவிகளோ இதுவரை கிடைக்கவில்லை. குறித்த மக்கள் உதவிகள் ஏதும் கிடைக்காது பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேசம் கடந்த 25 ஆண்டுகளாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதில் 700 ஏக்கர் நிலப்பரப்பு கடந்த ஆண்டு டிசெம்பர் 29ஆம் திகதி மக்களின் மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்வதற்குச் சுமார் 600 குடும்பங்கள் பதிவு செய்திருந்தன.

மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் உத்தியோகபூர்வஅறிவிப்புவிடுக்கப்பட்டு, அதற்குரிய அனுமதிப் பத்திரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா, காணிகளைத் துப்புரவு செய்யும் கொடுப்பனவு, காணிகளைத் துப்பரவு செய்வதற்கான உபகரணக் கொள்வனவுக் கொடுப்பனவு, உலர் உணவு நிவாரணம் என்பவற்றை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

> “மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டது தொடர்பில் உத்தியோக பூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டு, அதற்குரிய அனுமதிப் பத்திரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே மீள் குடியமர்வுக்கான கொடுப்பனவு மற்றும் இதர உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.”

குறித்த பகுதி மக்களின் பாவனைக்கு விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், மீள் குடியமர்வுக்கு அனுமதிக் கப்பட்டமை குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதனால் பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

இவற்றை விட - வீதி அபிவிருத்தி - மின்சார விநியோகம் - வீட்டுத் திட்டம் உள்ளிட்ட ஏனைய வசதிகளும் அங்குள்ள மக்களுக்கு வழங்கப்படவில்லை.

மீள் குடியமர்வுக்கான அனுமதி வழங்கி இரண்டு மாதங்கள் நிறைவடையும் நிலையில், உத்தியோக பூர்வ அறிவிப்பு தாமதப்படுத்தப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஜனவரி மாதம் 22 ஆம் திகதி, உத்தியோகபூர்வ விடுவிப்பு நிகழ்வு இடம்பெறும் என்று மீள்குடியேற்ற அமைச்சால் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது இறுதி நேரத்தில் இடைநிறுத்தப்பட்டது. இதன் பின்னர் இந்த நிகழ்வை மேற்கொள்வதற்கு எந்தவொரு முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பில் மாவட்டச் செயலக வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில், மீள்குடியேற்ற அமைச்சே இந்த நிகழ்வை ஒழுங்கு .செய்தது என்றும், ஜனாதிபதி கலந்து கொண்டு இதனை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்பதாலேயே இழுபட்டுச் செல்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-5-ரி-107)

# நூற்றாண்டு காணும் யாழ். சாரணிய பெருமையைப் பறைசாற்றும் பாடல்

## தேசிய ஜம்போறி நிகழ்வில் வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 25

நூற்றாண்டைக் காணும் யாழ். மாவட்ட சாரணியத்தின் பெருமையைப் பறைசாற்றும், "நல்ல சாரணரே, மிக நல்ல சாரணரே"என்ற பாடல் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முன்னிலையில், யாழ் . மத்திய கல்லூரியில் நடந்த ஜம்போறியின் நான்காம் நாள் நிகழ்விலேயே இது வெளியிட்டு வைக்கப்பட்டது.



ஒன்பதாவது தேசிய ஜம்போறியின் நிகழ்வுகள் கடந்த 20 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன. யாழ்.மத்திய கல்லூரி, மாநகர சபை மைதானம், கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் இவை இடம்பெற்று வருகின்றன. இதில் 8 ஆயிரம் சாரணர்கள் கலந்து கொண்டுள்ளனர்.



நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, யாழ்.மாவட்ட சாரணியத்தின் நூற்றாண்டை வெளிப்படுத்தும் விதமான நிகழ்வுகள் இடம் பெற்றன. யாழ்.மாவட்ட ஆண் மற்றும் பெண் சாரணர்களின் கலாசார நடனங்கள் மற்றும் திறமை வெளிப்படுத்தல்கள் என்பவை நடைபெற்றன.


ஆரம்ப நிகழ்வாக சென். அன்ரனிஸ் கல்லூரி மாணவர்களின் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்த உடற் பயிற்சியும், சிறு சாரணர்கள் மற்றும் மாணவர்கள்கலந்துகொண்ட வரவேற்பு நடனமும் நடைபெற்றது. தொடர்ச்சியாக மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

மும்மொழியிலும் “நல்ல சாரணரே மிக நல்ல சாரணரே..” என் னும் பாடலும் யாழ். மாவட்ட சாரணியத்தின் நூற்றாண்டை பறைசாற்றும் வகையில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து மாவட்டத் தில் சாதனைகள் புரிந்த சாரணர்கள் உயர்மட்ட பயிற்றுவிப்பாளர்கள், சாரண ஆசிரியர்கள், சாரணர்களுக்கு [illegible] பர்களால் பதக்கமும் [illegible] பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண கல்வி, விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, காங்கேசன் துறையைச் சேர்ந்த சாரண ஆசிரியர் இங்கே பரிசு பெறுகின்றார். ஆனால் அந்தப் பிரதேசத்தில் சாரணர்கள் இல்லை. சாரணியத்தின் நூற்றாண்டைக் கொண்டாடுகின்றோம். காங்கேசன்துறை சாரணக் குழந்தைகள் 25 ஆண்டுகளாக தம்முடைய சொந்த மண்ணையும் வீட்டையும் காணாமல் இந்த மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். எம்முடைய வரலாறு இப்படிப்பட்ட ஒன்று தான்.

யாழ். மாவட்டத்தில் பரியோவான் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட சாரணர் கற்கை நூற்றாண்டு காணுவதைப் பெருமையாகக் கருதுகிறேன். சாரணியம் மட்டுமல்ல, கல்வியிலும் எமது மாவட்டம்200 ஆண்டுகளைக்காணவுள்ளது. யாழ் கோட்டை தொன்மையான வரலாறு கொண்டது - என்றார்.

மேற்படி இரவு கலை நிகழ்வில் யாழ்மாவட்ட அரசஅதிபர், இலங்கை



சாரணியர் சங்கத்தின் ஆணையாளர் நிமல் டிசில்வா, உலக நாடுகளைச் சேர்ந்த சாரணிய ஆணையாளர்கள், யாழ் மாவட்ட சாரணிய ஆணையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாவட்ட பாடசாலை அதிபர்கள், சாரணர்கள், பொதுமக்கள் என்று பலரும் கலந்துகொண்டனர். (ற-5-ரி5)



### டிறிபேர்க் கல்லூரியில் மாணவர் விடுதி

சாவகச்சேரி, பெப்.25

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆண் மாணவர்களுக்கான விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சர்வதேச அமைப்புக்கள் 60 மில்லியன் ரூபா செலவில் மாடிக் கட்டடமாக ஆண் மாணவர் விடுதியை அமைக்கவுள்ளனர். மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-9)

### பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கான “ஓசோன் மண்டலத்தினால் ஏற்படும் தாக்கமும் அதனால் ஏற்படும் பாதிப்பும் ” தொடர்பான விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30மணிக்கு யாழ்.மாவட்டச்செயலகக்கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சால் நடத்தப்படவுள்ள பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் அறிவித்துள்ளார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுகளைக் கையகப்படுத்த முயற்சிக்கிறது இராணுவம்

## கேப்பாபிலவு மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்

முல்லைத்தீவு, பெப்.25
இராணுவத்தினரின் வசமுள்ள தமக்குச்சொந்தமான ஆடுகளை வெளி யிடங்களுக் குக் கொண்டு செல்ல இராணுவத்தினர் முயற்சிக்கின்றனர் என்று கேப்பாபிலவு மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

பொதுமக்களின் இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவது போன்று - கேப்பாபிலவு கிராம அலுவரிடம் இராணுவத்தினர் ஆடுகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கான அனுமதியைக் கோரியுள்ளனர்.

ஆடுகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கான அனுமதி கடிதத்தில் கையெழுத்திட்டுத்தருமாறு இராணுவத்தினர் கேட்டனர் என்றும், தாம் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டேன் என்றும் கேப்பாபிலவு கிராம அலுவலர் தெரிவித்தார்.

போர் இடம்பெற்றபோது தாம் வளர்த்த பெருந்தொகை ஆடுகளைக் கைவிட்டு இடம் பெயர்ந்திருந்தனர் கேப்பாபிலவு மக்கள். போர் முடிவுற்ற பின்னர் அந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்ட இராணுவத்தினர் ஏனைய வளங்களைப் போன்று பொதுமக்கள் விட்டுச் சென்ற ஆடுகளையும் கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த ஆடுகள் போர் முடிந்து 7 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் தற்போது பல்கிப் பெருகியுள் ளன.

அவற்றையே இராணுவத்தினர் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நாம் தொழில் வசதியின்றி இங்கு வாழ்வாதாரத்துக்கு அல்லாடுகின்றோம். இராணுவத்தினர் எமது ஆடுகளைப் பிடித்து வெளியிடங்களுக்கு ஏற்றுகின்றனர். ஆடுகளை இராணுவத்தினரிடம் இருந்து மீட்டு எம்மிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதை வைத்து நாங்கள் எங்களது நாளாந்த வாழ்க்கையைக் கடத்த முடியும். அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

ஆடுகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு கேப்பாபிலவு கிராம சேவகரிடம் இராணுவத்தினர் அனுமதிக் கடிதம் பெற பல தடவைகள் முயற்சித்துள்ளனர் என்ற தகவலையும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து நாம் கேப்பாபிலவு கிராம சேவையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இராணுவத்தினர் அனுமதிக் கடிதம் கேட்டது உண்மை என்று கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை கடமையின் நிமித்தம் முல்லை நகர் அலுவலகத்தில் இருந்த போது கேப்பாபிலவிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ராணுவ அதிகாரி ஒருவர் தமது ஆவணம் ஒன்றுக்கு ஒப்பமிட வேண்டும், எங்கு வந்து சந்திப்பது எனக் கேட்டார்.


நான் அவரை பிரதேச செயலகம் வருமாறு கூறியிருந்தேன். வாகனம் ஒன்றில் பிரதேச செயலகத்துக்கு சிவில் உடையில் வந்த இராணுவ அதிகாரி விடயம் எதனையும் விவரமாகக் கூறாது தான் ஆட்லறி பிரிவில் கடமையாற்றுகின்றேன் என்று தெரிவித்து கேப்பாவிலவில் இருக்கும் ஆடுகளை வெளியில் கொண்டு செல்வதற்கான அனுமதி வேண்டி சிங்களத்தில் எழுதப்பட்டு இராணுவ மேல் அதிகாரி ஒருவர் ஒப்பமிட்டிருந்த கடிதம் ஒன்றை தந்து கையெழுத்திடுமாறு கேட்டார். நான் மறுத்து விட்டேன்.

அவை மக்களுக்குச் சொந்தமான ஆடுகள். அவர்களிடம் தான் ஒப்டைக்க வேண்டும் என்று கூறித் திருப்பி அனுப்பி விட்டேன் - என்றும் கிராம அலுவலர் குறிப்பிட்டார்.

இவை மக்களின் ஆடுகள் என்பது யாவரும் அறிந்த உண்மை. மாடுகள் என்றால் குறிகளை வைத்து இனம் காண முடியும். ஆனால் ஆடுகளுக்கு அவ்வாறு இல்லை. உரிமையாளர்களை இலகுவாக இனம் காண முடியாது.

கேப்பாபிலவில் பல பெண்கள் கணவனை இழந்தும், பல குடும்பத் தலைவர்கள் அங்கவீனர்களாகவும் உள்ளனர். அவர்களுக்கு இந்த ஆடுகளை வழங்கினால் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை அவர்கள் உயர்த்திக் கொள்ள முடியும். இதுகுறித்து உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றும் அவர் தெரிவித்தார். (ற-21,102)

> “போர் இடம்பெற்றபோது தாம் வளர்த்த பெருந்தொகை ஆடுகளைக் கைவிட்டு இடம்பெயர்ந்திருந்தனர் கேப்பாபிலவு மக்கள். போர் முடிவுற்ற பின்னர் அந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்ட இராணுவத்தினர் ஏனைய வளங்களைப் போன்று பொதுமக்கள் விட்டுச் சென்ற ஆடுகளையும் கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.”


கோப்புப்படம்

## மூலிகை அப்பள உற்பத்தி நிலைய திறப்பு விழா

முல்லைத்தீவு, பெப்.25
புதுக்குடியிருப்பு, புதிய குடியிருப்புப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூலிகைகள் கொண்டு அப்பள உற்பத்தி மேற்கொள்ளவுள்ள அப்பள உற்பத்தி நிலையம் எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 5 மணிக்கு திறக்கப்பட வுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண தொழிற்திணைக்களத்தைச் சேர்ந்த க.சிவகரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரணவன் ஆகியோர் இதனைத் திறந்து வைக்கவுள்ளனர்.

சிறு உற்பத்தியாளர்களுக்கான போட்டியில் தேசிய விருது பெற்ற புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெண்ணொருவரது மூலிகை வகைகளைக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழிலை மேம்படுத்த சுவிஸ் நிறுவனம் 5 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்களை வழங்கியுள்ளது.(ற-9)

## பஸ் சேவைகள் இன்றி அல்லாடும் பொக்கணை, மாத்தளன் மக்கள்

### நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை

முல்லைத்தீவு. பெப். 25
போர் முடிவுற்று 7 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் முல்லைத்தீவு மாத்தளன் பகுதிக்கான பஸ் சேவைகள் எதுவும் இன்று வரை ஏற்படுத்தித் தரப்படவில்லை என்று பொக்கணை, மாத்தளன் கிராம மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

அதனால் சுமார் 5 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே பஸ் பயணம் செய்ய வேண்டியுள்ளது என்று குறிப்பிட்ட கிராம மக்கள், சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

“2009ஆம் ஆண்டு கடும் போருக்குள்கூட எங்கடை மாத்தளனுக்கு கப்பல் வந்தது. இப்ப எங்கடை ஊர்ப்பக்கம் பஸ் கூட வருவதில்லை. எல்லா பஸ்களும் இரணைப்பாலை சந்தியுடன் திரும்பி விடும். மாத்தளனில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றருக்கும், பொக்கணையில் இருந்து 5கிலோமீற்றருக்கும் அதிக தூரம் கடும் வெயிலில் நடந்து சென்றுதான் நாம் பயணத்தை மேற்கொள்கின்றோம்.

இரவு வேளையில் பெண் பிள்ளைகள் [illegible] தான் வருகின்றனர். [illegible] போட்ட பாதை இருந்தும் ஏன் இந்த பஸ்கள் இங்கு வருவதில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் .- என்று கூறினர் அந்தக் கிராம மக்கள்.

> “மாத்தளனில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றருக்கும், பொக்கணையில் இருந்த 5கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் கடும் வெயிலில் நடந்து சென்றுதான் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.”

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச பேரூந்து முகாமையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, காலையில் கொழும்பு செல்லும் பஸ் குறித்த பகுதிகளுக்குச் சென்று பாடசாலை மாணவர்களை ஏற்றியே செல்கின்றது என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாகபஸ்சேவைகளை வழங்குவதற்கு ஆளணிப் பற்றாக்குறை உள்ளது. 43 ஊழியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 32 பேர் மாத்திரமே உள்ளனர். ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பட்சத்தில் அந்தக் கிராமத்துக்கான பஸ் சேவைகளும் துரிதப்படுத்தப்படும்.- என்றார். (ற-21,433)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.25
வேலணை பிரதேச செயலகமும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்தும் 2016ஆம் ஆண்டுக்கான கண்காட்சி இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கோகுலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசனும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே. ஜே.சி பெலிபியன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன் உட்பட மதத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கண்காட்சியில் தையல், அழகியல் பொருள்கள், ஐசிங் கேக் வகைகள் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளலாய் வடக்கில் மின் இணைப்புகள் வழங்குவதில் தாமதம் எனக் குற்றச்சாட்டு

## வீட்டு மின்சுற்று பூர்த்தி செய்யப்பட்டால் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25
வளலாய் வடக்கில் மீள்குடியமர்ந்த 68 குடும்பங்களில், ஐந்து குடும்பங்களுக்கு மாத்திரமே இதுவரையில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதேவேளை இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில், ஆயிரம் பேருக்கு மின்சாரம் வழங்கப்பட வுள்ளது என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் ஞானகணேசன் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் மின்சார வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறு கிராம சேவையாளரூடாக அறிவுறுத்தபட்டிருந்தது. அதற்கு அமைவாக மின்சுற்று வேலைகள் முடிவுற்றுள்ள நிலையில் தற்போது வீட்டுக்குரிய மின் இணைப்பை வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தப் போக்குக் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின் இணைப்பு வேலைகள் முடிவுற்று நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில், 5 குடும்பங்களுக்கு மாத்திரமே இதுவரை மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளன எனவும், ஏனைய குடும்பங்களுக்கு இதுவரையிலும் மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதியாதலால், இரவு வேளைகளில் விசஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் சிறுகுழந்தைகளுடன் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதில் நாம் பல இன்னல்களை எதிர்கொள்கின்றோம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் அங்கு ஐந்து கால்நடைகள், பாம்பு தீண்டி இறந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

> கடந்த வருடம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்ட திட்டத்தில், முழுமையாக மின் இணைப்பு பூர்த்தி செய்திருந்த குடும்பங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டது.

இது தொடர்பில் கோப்பாய் பிரதேசபைச் செயலரிடம் கேட்ட போது –

கடந்த வருடத்தில் கோப்பாய் பிரதேசத்தில் இலவச மின்னிணைப்புத் திட்டம் 124 பேருக்கு வழங்கப்பட்டது. அதில் வளலாய் வடக்கில் வீட்டு மின் சுற்றுக்களைப் பூர்த்தி செய்திருந்த 5 குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ்மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஏனைய குடும்பங்கள் அவ்வேளையில் மின்னிணைப்பு வேலைகளை பூரணப்படுத்தாததால், அவர்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. தற்பொழுது அங்குள்ள குடும்பங்கள் அனைவரும் மின்னிணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளதால், அவர்களுக்கான மின் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு, அவர் அதனை ஏற்றுக் கொண்டு செயற்படுத்துமாறு மின்சார சபையினருக்குப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.– என்றார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பிரதேச மின்பொறியியலாளர். –

கடந்த வருடம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்ட திட்டத்தில் முழுமையாக மின் இணைப்பைப் பூர்த்தி செய்திருந்த குடும்பங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டது. இந்த நடைமுறையில் வளலாய் வடக்கில் மீள்குடியேறிய பகுதியில் மின் சுற்று பூரணப்படுத்தப்பட்ட 5 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங் கப்பட்டுள்ளது. எனினும் இலவச மின்சாரத் திட்டத்தில் அவர்களின் பெயர்ப் பட்டியல் வரும் பட்சத்தில், தங்களால் இவர்களுக்கு மின்சாரம் வழங்க பரிந்துரை செய்யப்படும். அவர்கள் தனியாக விண்ணப்பங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து மின்சார சபையினரிடம் கொடுக்கும் பட்சத்திலும் இந்த மின்னிணைப்பு வழங்கப்படும்.– என்றார்.

(ற-ஐ-ரி,107)

---

### மத்தியஸ்தர்களுக்கு விசேட பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.25
வடமாகாணத்தைச் சேர்ந்த மடு மற்றும் வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான மத்தியஸ்த சபைகளின்உறுப்பினர்களான மத்தியஸ்தர்களுக்குவிசேட பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

மத்தியஸ்தம் செய்வதற்கான திறன்களை மத்தியஸ்தர்களிடையே விருத்தி செய்யும் நோக்குடன், மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழு வடக்கில் பயிற்சிச்செயலமர்வுகளை நடத்தி வருகின்றது.

ஆசியாபவுண்டேசனின் நிதி அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் மத்தியஸ்தர் களுக்கான திறன் விருத்திக்கான பயிற்சி செயலமர்வுத் திட்டத்தின் கீழ் மடு, வவுனியா வடக்கு மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகள் நடைபெற வுள் ளன.

இந்தப் பயிற்சிச் செயலமர்வுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 3, 4, 5 ஆம் திகதிகளில்நடைபெறவுள்ளன என்று மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவின் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் எம்எஸ்.ஆர். ஜோன் பிலிப்தெரிவித்துள்ளார்.

மடு பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான இந்தப் பயிற்சிச் செயலமர்வு மடு பிரதேச செயலக மண்டபத்திலும், வவுனியா வடக்கு பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான பயிற்சிச் செயல மர்வுவவுனியா இந்திரன் ஹோட்டலிலும் நடைபெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-30)

---

# பிரதேசத்தை அழகுபடுத்த மக்கள் ஒத்துழைப்பு தேவை

### நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.25
நல்லூர்பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிக்குள் உயரமாக வளர்ந்துள்ள மரங்களின் கிளைகளை வெட்டி சீராக மின்சாரத்தை பெற்றுக் கொள் வதற்கும், பிரதேசத்தை அழகுபடுத்துவதற்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபைச் செயலர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

வடமாகாண சபையால் அறிவிக்கப்பட்ட 'நம்மை நாமே சீர்படுத்துவோம்' என்ற திட்டத்துக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசங்களில் உயரமாக வளர்ந்துள்ள கிளைகள் மின்கம்பிகளில் உராய்ந்து அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுவதால், நகரம் இருளில் மூழ்கும் நிலை ஏற்படுகின்றது. இரவு நேரத்தில் ஏற்படும் இவ்வாறான மின் துண்டிப்பால் மக்கள் பல அசெகளரியங் களை எதிர்நோக்குகின்றனர். மற்றும் சிலவேளைகளில் அதனால் எதிர்பாராத பாரதூரமான உயிராபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

எனவே கட்டுப்பாடற்ற வகையில் வளர்ந்துள்ள இந்த மரங்களின் கிளைகளை வெட்டிச் சீரான மின்சாரத்தைப் பெறுவதற்கும், உயிராபத்துக்களைத் தடுத்துக் கொள்ளவும், பிரதேசத்தை அழகுபடுத்துவதற்கும் பொது மக்கள் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

(ற-ஐ-ரி)

---

# புதிய அரசமைப்புக் குறித்து கருத்தறியும் அமர்வுகள்

அம்பாறை, பெப்.25
புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலான பொது மக்கள் கருத்தறியும்அமர்வுகள், அம்பாறை மாவட்டத்தில் இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

இந்த அமர்வுகள் எதிர் வரும் 27ஆம் திகதி சனிக்கிழமையும், 29ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையிலுள்ள மாவட்டச் செயலகத்தில் குறித்த இரு தினங்களும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இதன்போது புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகள் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் என்றும், பொது மக்கள் தமது முன்மொழிவு களை. வாய் மூலம் செய்யும் போதுமுன்மொழிவுகளின் சாராம்சத்துடன் கூடிய எழுத்து மூலமான பிரதியையும்வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ளபல்வேறுதமிழ், முஸ்லிம், சிங்கள அமைப்புக்களும் முன்மொழிவுகளைச் செய்வதற்குத் தயாராகி வருவதுடன், கல்விமான்கள், புத்திஜீவிகளும் தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-30)

---

# சிறுவர் மீதான வன்கொடுமைகளை உடனே தடுத்து நிறுத்தவேண்டும்

### மன்னார் மறைமாவட்ட பரிபாலகர் ஜோசப் கிங்ஸ்லி ஆண்டகை வலியுறுத்து

மன்னார், பெப். 25
நல்லாட்சியில், நாட்டில் பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சட்டவிரோத செயல்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கின்றது. வவுனியா மாணவி வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றேன். – இவ்வாறு மன்னார் மறைமாவட்ட பரிபாலகர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட பரிபாலகர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறுதெரிவித்துள்ளார். அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

நல்லாட்சியில் நாட்டில் வன்புணர்வு உள்ளிட்ட சட்டவிரோத செயல்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கின்றது. குறிப்பாக வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுசிறுவர்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்து வருகிறது. இது சமூகங்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மனதில் இரக்கமற்று காமுக அரக்கர்களால் செய்யப்பட்ட செயல் மிகவும் கொடூரமானது. இவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். நல்லாட்சியில் இவ்வாறான செயல்கள் நடப்பது கவலையளிக்கின்றது. பொலிஸார் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் இவ்வாறான குற்ற செயல்களை தடுக்கநடவடிக்கைஎடுக்கவேண்டும். சிறுவர்களே நாட்டின் எதிர்காலச் சிற்பிகள். எனவே இவ்வாறான குழந்தைகள் இரக்கமற்ற முறையில் அரக்கதனமாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவது கண்டு கவலையும் மிகுந்த வேதனையும் அடைகின்றோம் .மாணவியை இழந்து தவிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு மன்னார் ஆயர் இல்லம் சார்பாகவும், குருக்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றுள்ளது.

(ற-21)

---

### இலக்கிய விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.25
கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அரச இலக்கிய விருது வழங்கல் 2016 , தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி – 2015 மற்றும் 2016 என்பனவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றில்பங்குகொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலக செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறீ அறிவித்துள்ளார்.

(ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைப்புப் போராட்டத்தால் முடங்கியது வடக்கு



வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்களின் ஆர்ப்பாட்டம்







வவுனியா






மன்னார்







முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடைப்புப் போராட்டத்தால் முடங்கியது வடக்கு





யாழ்ப்பாணம்


சாவகச்சேரி


அச்சுவேலி


வடமராட்சி


யாழ்.வைமன் வீதியில் ஆறுதல் நிறுவனத்தினரின் ஆர்ப்பாட்டம்


நெல்லியடி




கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசமைப்பு நிர்ணய சபையேனும் தமிழர் நலன் நாடிச் செயற்படுமா..?

நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படும் அரசமைப்பின் மூலமாகவேனும், சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைக்குத் தகுந்த-உகந்த-நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட்டாக வேண்டும்.

ஜனாதிபதிக்குத் தாம் அனுப்பி வைத்துள்ள, அவசரக் கடிதம் ஒன்றில், மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார், ரன்முத்துகல சங்கரத்ன தேரர். இவர் அம்பாறை மாவட்ட சர்வமத அமைப்பின் உபதலைவரும் ஆவார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை, சிங்கள மக்களின் அரசியல் தலைவர்கள், சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பது குறித்து, பௌத்த மதத் தலைவர்களில் ஒருவன் என்ற வகையில், பெரும் கவலை கொள்வதாகவும் மனம் திறந்து தெரிவித்துள்ளார் அவர்.

தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின் விளைவுகளை, இந்த நாடு பெருமளவில் சந்தித்து விட்டது. இனியும் அத்தகைய கசப்பான சம்பவங்கள் தொடர்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும்--

சிங்கள மொழியை, இங்கு வாழும் தமிழ் மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதேபோன்று சிங்கள மக்களால் தமிழ் மொழியைப் புரிந்து கொள்ள இயலவில்லை. அதனால் மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும் என்றும்--தேரர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேவேளை-

இனப்பிரச்சினை சார்ந்த விடயங்கள் குறித்து, நாடாளுமன்றின் அவைத் தலைவரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, அங்கு வைத்து--

நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றும் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அர்த்தபுஷ்டி உள்ள கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவற்றை இங்கு தொட்டுக் காட்டுவது பொருத்தம்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு-வடக்கு, கிழக்கின் பிரச்சினைக்கான தீர்வை இப்போது கண்டாக வேண்டும். அதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவே--

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால், எமது நாட்டின் மீது முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்களுக்குப். பதிலளித்தே ஆகவேண்டும்--

அதன் பொருட்டு நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்ற வேண்டும்--என்றும் அவர் அழுத்தம் திருத்தமாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக், கருத்து வெளியிட்டிருக்கிறார்.

முன்னர் நாடாளுமன்றில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த வேளையிலும், அவர் ஏனையோரை விடவும் தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்கியாக வேண்டும் என்று பல தடவைகள் வற்புறுத்தி வந்துள்ளார் என்பது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

எனினும் மகிந்த சார்பு உறுப்பினர்கள், இன்றைய நல்லாட்சி அரசின், ஆக்கபூர்வமான, நாட்டுக்கு நலன் பயக்கும் முயற்சிகளைக் கழுத்தறுக்கும் போக்கில் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இதனை நாம் மட்டுமே இங்கே சுட்டிக்காட்டவில்லை. கொழும்பு கங்காராம விகாரையின் விகாராதிபதி வண.கலகொட அத்தே ஞானசார தேரரும் எடுத்தியம்பி உள்ளார். நல்லிணக்கத்தை மகிந்த காலால் இழுத்துவிடக் கூடாது என்று அவரிடம் நேருக்கு நேர் கூறியுள்ளார் என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

மொத்தத்தில்-

தான் கனத்துப் பெருத்த நிலையில், தமிழ் மக்களின் பிரிக்க முடியாத அரசியல் உரிமைகளை நல்லாட்சி அரசே வழங்க வேண்டும். நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாமா, என்ன....?

# நல்லிணக்கம் ஏற்படுவது எப்போது?

செ.உமாசுதன்

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே கடந்து சென்ற முப்பது ஆண்டுகளிலே ஏற்படாததொரு புதியதொரு அரசியல் திருப்பமும், ஆட்சிமாற்றமும் கடந்த ஆண்டின் ஆரம்பத்திலே தோற்றம் பெற்றன. இதற்கு முன்னர் இருந்து வந்த ஆட்சி பீடங்களோடு ஒப்பிடும் போது, தோற்றம் கொண்ட மைத்திரி என்ற புதிய முகம் நன்முறையில் ஆட்சியைக் கொண்டு நடத்துவதான தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிட்டிருக்கின்றது.

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பமான இந்த புதிய நல்லாட்சி அரசு என்ற நாமம் கொண்ட அரசின் மீதான நம்பிக்கையும் அதன் நகர்வும் வலுவானதாகப் பார்க்கப்பட்டு வருகின்றது. கடந்த செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் ஜெனிவாவில் இடம் பெற்ற மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தொடரின் போது மிகப்பெரிய நெருக்கடி இலங்கை அரசுக்கு ஏற்படுத்தப்படும் என்பதான எதிர்பார்ப்பு தமிழர் தரப்பிடம் இருந்தது. உண்மையில் அது சாத்தியப்படவில்லை. மாறாக அரசுக்குச் சார்பான, அதன் அனுசரணையுடன் கூடியதான, மென்போக்கான தீர்மானங்களைக் கொண்ட பிரேரணையே நிறைவேற்றப்பட்டது.

### வடக்கில் இடம்பெற்ற படுகொலைகள்

இந்த நிலையிலே 2009 களில் வடக்கில் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய மனிதப் படுகொலைகளுக்கும் மனித உரிமைமீறல்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு என்பது உள்நாட்டுப் பொறிமுறைகளுடன் பிரேரணைகளில் சொல்லப்பட்ட நல்லிணக்கம், பொறுப் புக்கூறல், இன சமத்துவம் ஆகிய முன்னெடுப்பு நிகழ்வுகளோடும், கருத் துத் திணிப்புக்களோடும் நகர்கின்றன. குறிப்பாக புதிய அரசு பதவி ஏற்றதில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரின் பின்பான தற்போது வரையான நகர்வுகளை நோக்குமிடத்து, இந்த விடயங்கள் தெளிவாகத் தென்படுகின்றன. கடந்த வருட இறுதியில் தேசிய நத்தார் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தன. அந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆறு மாதங்களுக்குள் முற்றாக விடுவிப்பதான அறிவிப்பை வெளியிட்டார்.

### தேசிய பொங்கல் நிகழ்வு

இதனையடுத்து, இரண்டாவது தேசிய நிகழ்வொன்றின் வருகையாக, உவர்ப்புக் கலந்த இனிப்பாக தேசிய பொங்கல் நிகழ்வு, வலிகாமத்தின் ஆக்கிரமிப்பு எல்லைகளுக்குள் [illegible] ஏற்படுத்து[illegible] தோற்றப்பாட்டோடு நிகழ்த்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுக்கு அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணாமற் போனவர்கள் அனைவரும் இறந்தவர்களாகவே கருதப்படுவர் என்ற கருத்துத்திணிப்பை முன்வைத்துவிட்டுச் சென்றார். இந்தச் செயற்பாடுகள் கூட போரினால் பாதிக்கப்பட்ட மக்களை உளவியல் ரீதியிலே மீண்டும் மீண்டும் சிதைப்பதான செயல் முனைப்பாகத்தான் அமைந்திருந்தன. போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் காணாமற் போனவர்கள் தொடர்பான எந்தவித தகவல்களையும் வெளியிடாத கடந்த அரசின் தொடர் நிலையில் இந்த அரசு வெறுமனே விசாரணை ஆணைக் குழுக்களை தெரிவு செய்வதிலும், அமர்வுகளை நடத்து வதிலும் மாத்திரம் மட்டும் செயல் முனைப்புடன் செயற்படுகின்றது.

> எல்லோரும் ஒன்றுபட வேண்டும். அனைத்துப் பிள்ளைகளிலும் ஒரே இரத்தம்தான் காணப் படுகின்றது. இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரக் கூடியவர் கள் இந்தக் கூட்டத்தில் உள்ள வர்களில் இருக்கக் கூடும் என்பதாக அவருடைய கருத் துக்கள் அமைந் துள்ளன.

அடுத்து அண்மைய நாள்களாக மூன்றாவது தேசிய நிகழ்வாக 09 ஆவது தேசிய சாரணர் ஜம்போறி நிகழ்வை வடக்கு நோக்கி நகர்த்தி அதனை நல்லிணக்கத் தோற்றப்பாட்டோடு நிகழ்த்தி வருகின்றது. இந்த நிகழ்வுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்காக விசேட அதிதியாக ஜனாதிபதி வருகை தந்திருந்தார். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தாண்டிய ஏனைய பிரதேசங்களில் இருந்தும் ஆயிரக் கணக்கான சாரண மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர். இது தவிர்ந்து சர்வதேச ரீதியிலும் சாரணியர்கள் கலந்து கொரண்டுள்ளனர். இந்த நிகழ்விலும் ஒரு கருத்தியல் திணிப்பு செயல் முனைப்புப் பெற்றுள்ளது.

சாரணர் இயக்கத்தில் இன, மத, குல வேறுபாடுகள் கிடையாது. சாரணர்கள் பிறருக்கு உதவிகளை வழங்குவதையும், தேவைகளை நிறைவேற்றுவதையும் பிரதானமான செயற்பாடுகளாகக் கொண்டிருக்கிறார்கள். சாரணர் இயக்கமானது இந்து, பௌத்த மதங்களில் கூறப்பட்டுள்ள தத்துவங்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. எல்லோரும் ஒன்றுபட வேண்டும். அனைத்துப் பிள்ளைகளிலும் ஒரே இரத்தம்தான் காணப்படுகின்றது. இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரக்கூடியவர்கள் இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களில் இருக்கக்கூடும் என்பதாக அவருடைய கருத்துக்கள் அமைந்துள்ளன.

### புதிய அரசின் நடவடிக்கைகள்

ஆக, புதிய ஆட்சிமாற்றத்தின் பின்பான வடக்கை நோக்கிய தேசிய நிகழ்வுகளின் நகர்வுகளும், அதன் போதான கருத்துக்களின் வெளிக்கிளம்புகைகளும் தமிழ் மக்களோடு ஒட்டி உறவாடுகிறோம், இன சமத்துவத்தைப் பேணுகிறோம், நல்லிணக்கச் செயற்பாடுகளை தேசிய நிகழ்வுகளை நடத்துவதன் ஊடாக ஏற்படுத்தி விடுகிறோம். நல்லிணக்கமான கருத்துக்களை வெளிப்படுத்துகிறோம் என்பதோடு அடக்கம் கண்டுவிடுகின்றன. கருத்தியல் ரீதியிலே மாத்திரம் காத்திரமாக வெளிப்படுத்தப்படுகின்றன. செயற்பாட்டு ரீதியிலே கனம் பெறவில்லை, வலுப்பெறவில்லை.

அரசின் திட்டமிட்ட அடக்கமும் இராஜதந்திர ரீதியிலான முடக்கமும் தடங்கலின்றி பயணிக்கின்றன. தமிழர் தரப்பின் அபிலாசைகளும் வேண்டுதல்களும் அடங்கி ஒடுங்கி முடக்கமாகிச் செயலற்று போயிருக்கிறது. காத்திருப்போடு கதிகலங்கி நகர்கிறது. இத்தகைய செயல் நிலைகள் அற்ற செயல் முனைப்பான முடக்கமற்ற நல்லிணக்கங்களின் வருகை எப்போது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரா



# சிதறு தேங்காய் உடைத்து அரசு கவிழுமா?

மகிந்த ராஜபக்சவுக்கும் அவரது தரப்பினருக்கும் கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்து கவலைப்படும் அளவுக்கு மைத்திரி-ரணில் அரசுக்கு வரவேற்புக் கிடைத்து வருகின்றது. பொதுவாக நாட்டுமக்களிடையே இந்த அரசுக்குக் கிடைத்துள்ள செல்வாக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அவரது அடிவரு டிகளுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. சர்வதேச அரங்கத்தில் இன் றைய அரசுக்கு எதிரான மக்கள் கருத் தொன்றை உருவாக்கிவிடவும் அதற்காக இந்த அரசின் மீது கசப்புணர்வு கொண்ட அனைத்துச் சக்திகளையும் ஒன்றுதிரட்டி கீழ் மட்டத்திலிருந்து நாடாளுமன்றம் வரையிலும் தமது கூட்டு எதிர்க் கட்சிக்கு வலுச் சேர்ப்பதற்கும் இவர்கள் படாதபாடுபடுகின்றனர். சுதந்திரக் கட்சியினுள் பிரிவொன்றை ஏற்படுத்தி புதிய கட்சியொன்றை உருவாக்கி அதன் தலைமைத்துவத்தை மகிந்தவுக்கு வழங்கும் இவர்களது முயற்சிகள் யாவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சுதந்திரக் கட்சி மீதான கூர்மையான அவதானிப்புக்கள் மூலமாகப் பிசுபிசுக்கச் செய்யப்பட்டுள்ளன. மகிந்த குடும்பம் மற்றும் அவருக்கு மிக நெருக்கமானவர்கள் மீதான பல்தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள், கைதுகள், விசாரணைக் கெடுபிடிகள், அரசுக்குள் சரத் பொன்சேகாவின் பிரவேசம் என்பவை மகிந்த தரப்பு அரசியல்வாதிகளைக் கதிகலங்கச் செய்துள்ளன. இவ்வளவுக்கும் மகிந்த ராஜபக்சவின் கடந்த பத்தாண்டு கால எதேச்சாதிகார ஆட்சியில் அதிகார மமதை கொண்டு இவர்கள் ஆடிய ஆட்டங்களை முற்றிலுமாக மறந்து, மக்களைத் தம்பக்கம் திசை திருப்ப இவர்கள் அவிழ்த்துவிடும் கதைகள் மக்களிடம் எடுபடுவதாகத் தெரியவில்லை. மாறாக, குறிப்பிட்ட ஒரு தரப்பினரைத் தவிர, நாடும் மக்களும் அவற்றைத் துடைத்தெறிந்துவிட்டு சுமுகமாக இயங்கி வருவது தெரிகிறது.

இத்தகைய பின்புலத்தில் மகிந்த தரப்பினர் அண்மையில் மைத்திரி-ரணில் அரசுக்குச் சாபமிட்டு கோயில்களில் லட்சக்கணக்கான சிதறு தேங்காய்களை உடைத்துள்ளனர். மங்கலப் பொருளான தேங்காய் நல்லதொரு ஆரம்பத்துக்கும், சுபீட்சத்துக்கும் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து மங்கலத்தை உண்டாக்கி வெற்றியைத் தருவதற்கே சுபவேளைகளில் சிதறு தேங்காயாக உடைக்கப்படுகிறது. இது தெய்வீக மரபொன்றாக சமூகத்தில் நிலைத்துள்ளது. ஆனால் நிலை கெட்டுப்போன இந்த முன்னாள் அரசியல்வாதிகள் அரசு கவிழ வேண்டுமெனச் சாபமிட்டு அந்த நல்ல மரபையே தலைகீழாக்கி விடும் விதமாக நாட்டுக்கும் மக்களுக்கும் கேட்டை விளை விக்குமாறு பிரார்த்தனை செய்து சிதறு தேங்காய் உடைத்திருப்பது உண்மையில் கோமாளித்தனமான செயலொன்றே. சிதறு தேங்காய்களை உடைத்து அரசொன்றைக் கவிழ்த்து விட்ட வரலாறு உலகில் எங்கேயும் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. நகைப்பதற்கு இது நல்ல தொரு விடயமே. ஆனாலும் இந்த அரசின் மீது சாபமிட்டு மேன்மேலும் சிதறு தேங்காய்களை உடைப்பதற்கு இவர்கள் இன்னமும் நாட்டில் கோயில்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் மத்தியில் புதிய ம்ாயைக் கருத்தொன்றை உருவாக்கி விடுவதற்கு இவர்கள் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ள போதிலும் அது எ்டுபடப் போவதில்லை. இந்த அரசுக்கு எதிரான கருத்துக்களை நாட்டில் உருவாக்கி விடுவதற்கு பெரிதும் முயன்று வருவோர்களுள், உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல, குமார வெல்கம, பந்துல குணவர்த்தன, வாசுதேவநாணயக்கார, கோத்தபாய ராஜபக்ச, நாமல் ராஜபக்ச போன்றோரை முக்கியமானவர்களாகக் குறிப்பிடமுடியும்.

> மகிந்த குடும்பம் மற்றும் அவருக்கு மிக நெருக்கமானவர்கள் மீதான பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள், கைதுகள், விசாரணைக் கெடுபிடிகள் அரசுக்குள் சரத் பொன்சேகாவின் பிரவேசம் என்பவை மகிந்த தரப்பு அரசியல்வாதிகளைக் கதிகலங்கச் செய்துள்ளன.

மறுபுறத்தில் இந்தக் கூட்டு எதிர்க்கட்சி, மைத்திரி அரசுக்குச் சவாலாகவும் தலையிடியாகவும் இருந்தாலும் கூட, நாட்டின் நலன் கருதி உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு நாட்டு மக்கள் அனைவரினாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தொன்றாக பாராட்டக் கூடிய தாக அமையும் பட்சத்தில் அர சுக்கு எதிரான சிதறுதேங்காய்ச் சாபம் நிச்சயம் தேங்காய் அடித்தவர்களையே சென்று சேரும்.

## புனிதம் கடைப்பிடித்து மனிதத்தை மதிப்போம்

கடந்த 5 வருடங்களின் பின்னர் நான் கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்துக்கு திருப்பயணம் சென்றேன். பல சமயத்து மக்களையும் கண்டேன். மகிழ்ச்சி அடைந்தேன். ஆனாலும் இவ்வளவு தூரம் கடல் கடந்து ஏன் வருகின்றோம். என்ற எண்ண அலைகள் எழத்தொடங்கியது.

இருக்கும் இடத்தில் உள்ள புனித அந்தோனியாரை சென்று வணங்க நேரம் இல்லாத மனிதர்கள்கடல் கடந்து இங்கு அந்தோனியாரை வணங்க வருகின்றார்களா? இல்லை, அந்தோனியாரை காவலுக்கு வைத்துக் கொண்டு வர்த்தகம் செய்கின்றார்கள். எதற்காக பண்ட மாற்றமும் குடிவெறி, பைலாவும் இவைதான் அந்தோனியாருக்கு இவர்கள் கொடுக்கும் பரிசா, யாத்திரை செல்பவர்கள் ஏன் வருகின்றனர். நல்லது கிடைக்க வேண்டும். நல்லது செய்ய வேண்டும் என்றுதானே.

அப்படி இருக்க இயலாதவர்களுக்கு சரீர உதவிகூட செய்ய இயலாத பக்தன், புண்ணியம்தேட கடல் கடந்து வணங்க வருவது ஏன்? மனிதம் இல்லாமல் வாழும் மனிதமே. புனிதம் தேடி என்ன பயன்? மனிதத்தைப் பேணு, புனிதம் தானாகவே வரும். புனித அந்தோனியார் ஒரு கோடி அற்புதர். திருச்சபையின் கண்ணாடி, பல புதுமைகளால் பிரபல்யம் அடைந்தவர், ஒருமுறை இவர் மக்களுக்குப் போதிக்க சென்றபோது இவரது போதனையைக் கேட்க மக்கள் விரும்பாததால் இவர் கடற்கரைக்குச் சென்று மீன்களுக்குப் போதித்தார்.

இது புனைகதை அல்ல. உண்மை கத்தோலிக்கர்களால் மட்டுமன்றி ஏனைய சமயத்தவர்களும் புனித அந்தோனியாரில் நம்பிக்கை கொண்டவர்கள். வரங்களை ஏராளம் கொடுப்பவர், இவரில் நம்பிக்கை வைத்துத்தானே நாம் இதுவரை கடல் கடந்து செல்லுகின்றோம். புனிதம் பேணுவோம். மனிதம் மதிக்கப்பட வேண்டும்.

இயன்றவரை பிறருக்கு நாதி அற்றவர்களுக்கு சரீர உதவி செய்வோம். ஏழ்மையான வாழ்க்கையைப் பின்பற்றிய புனித அந்தோனியாரை வணங்குவது மட்டும் கடமை அல்ல. அவருடைய உண்மை, ஏழ்மை வழியைப் பின்பற்ற முயற்சிப்போம். திருத்தலத்தில், சாதி, சமயம் இன்றி சமஉரிமை அளித்து புனிதம் கடைப்பிடித்து மனிதத்தை மதிப்போம். புனிதர் வழி நடப்போம்.

ஜே. எப். கிறிஸ்ரி வடலாக்கே
தலைமன்னார் ஊர்மனை

## ஆடை தயாரிப்பாளர்களுக்கான அன்பான வேண்டுகோள்!

ஆள்பாதி ஆடை பாதி என்பார்கள். அந்த வகையில் ஒரு மனிதனின் பூரணத்துவம் அவனது நடை உடை பாவனையில் தங்கியிருப்பதைச் சகலரும் அறிவர்.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் எமது சமூகத்தில் வாழ்ந்தவர்களின் நடை உடை பாவனையை நாம் அறிவோம். தற்போதுள்ளவர்களில் சிலர் நாகரிகம் என்ற போர்வையில் அலங்கோலமான ஆடை அணிகலன்கள் அணிவதையும் பார்க்க முடிகின்றது. அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் சீருடையின் வடிவமைப்பு மாணவர்களுக்கு மாணவர்கள், பாடசாலைக்குப் பாடசாலை வேறுபட்டிருப்பதையும், நாகரிகம் என்ற போர்வையில் அலங்கோலமான இறுக்கமான சீருடைகளை மாண வர்கள் அணிந்து, செல்வதையும் காண முடிகின்றது.

சீருடை என்பது சீராக நேர்த்தியாக ஒரே அமைப்பில் ஆக்கப்படும் ஒன்றாகும். உதாரணமாக காவல் துறையினரின் சீருடை, இராணுவத்தினரின் சீருடை மற்றும் தாதி உத்தியோகத்தினரின் சீருடை போன்றே பாடசாலை மாணவர்களின் சீருடை என்ற குறித்த வடிவமைப்புக்குள் அமைய வேண்டும். பாடசாலை மாணவர்களது சீருடை சீரற்று அதாவது ஒழுங்கற்றிருப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

எனவே ஆடை தயாரிப்பாளர்களாகிய உங்களுக்கு பாடசாலை மாணவர்களுக்குரிய அளவுப் பிரமாணங்களுக்கேற்ப ஆடைகளைத் தளர்வாகவும் நேர்த்தியாகவும் அமைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு உள்ளது. மாணவர்கள் தமது வயதின் பால் மற்றும் திரைப்படங்களைப் பார்த்து, கூத்துக்காக வேடம் போடும் நிலையை நாகரிகமெனக் கருதி அநாகரிகமாகத் தைக்கும்படி கூறுவார்கள். ஆனால், நீங்கள் ஆடையைத் தைக்கும்போது, இடுப்புப்பகுதி இடுப்பிலும் கைகள் தளர்வாகவும் மேற்சட்டையின் இறக்கம், காற்சட்டைக்குள் நன்கு உட்புகுத்தக்கூடிய வகையிலும், காற்சட்டையின் கால்கள் தளர்வாகவும் அமைக்க வேண்டும். அவ்வாறே ஆடைகளை மாணவர்களுக்கு அமைப்பதன் மூலம் அவர்களின் ஒழுக்க விழுமியங்களில் சீரான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான தார்மீகப் பொறுப்பில் தங்களின் பங்கும் முக்கியமானது.

எல்லாத் தையல் கலைஞர்களும் மாணவர்களின் சீருடை தயாரிப்பதில் ஒரே அமைப்பைப் பின்பற்றுமாறும், சீருடைகளை சீருடைகளாகத் தயாரிக்கும்படியும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். அமைப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளார் சிறுமி



தமஸ்கு, பெப்.25
ஈராக்கின் வட பகுதியில் ஐ.எஸ். அமைப்பில் இருந்த சிறுமி ஒருவர் குர்திஷ் படையினரால் மீட்கப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

சுவீடனைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியொருவரே இவ்வாறு மீட்கப்பட்டவர் ஆவார். நேற்று முன்தினம் இந்த மீட்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஐ.எஸ். அமைப்பின் பகுதியான மொசூல் நகருக்கு அருகில், மார்லின் ஸ்ரிவானி எனும் சிறுமியே குர்திஷ் படையினரால் மீட்கப்பட்டார். சிறுமிக்கு உதவி வழங்கச் சிறப்புப் படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டனர் என குர்திஷ் பகுதி பாதுகாப்பு பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐ.எஸ்ஸில் எவ்வளவு காலம் அந்தச் சிறுமி இருந்தார் என்பது குறித்த தகவல்கள் அந்தக் குறிப்பில் குறிப்பிடப்படவில்லை.

சுவிஸின் போராஸ் பகுதியை வதிவிடமாகக் கொண்டவர் அவர். மார்லின், ஐ.எஸ். அமைப்பின் உறுப்பினர் ஒருவரால் தவறாக வழிநடத்தப்பட்டுச் சிரியாவின் மொசூல் நகருக்கு அழைத்து வரப்பட்டுள்ளார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மார்லினின் குடும்ப அங்கத்தவர்கள் சுவீடன் அதிகாரிகளிடம் தங்களது மகளை மீட்டுத் தருமாறு கேட்டுக்கொண்டதை அடுத்து குர்திஷ் படைகளின் உதவியுடன் இந்த மீட்பு இடம்பெற்றுள்ளது. குர்திஸ்தான் பகுதியில் சர்வதேச சட்டங்களுக்கு இணங்க அவர் பராமரிக்கப்பட்டு வருகிறார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மார்லீன் மீண்டும் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. குர்திஷ் படைகள் என்பது மத்திய கிழக்கு நாடுகளின் ஓர் இனம் சார்ந்த படைகளாகும். இந்தப் படைகள் ஈரான், துருக்கி, ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் வியாபித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

## பல மில்லியன் டொலர் கப்பம் வாங்கி 40 கிறிஸ்தவர்களை விடுவித்தது ஐ.எஸ்.

தமஸ்கு, பெப்.25
ஐ.எஸ். அமைப்பு, 230 அசீரிய கிறிஸ்தவப் பணயக் கைதிகளில் 40 பணயக் கைதிகளை விடுவித்துள்ளது. பெருந்தொகையான பணம் கொடுக்கப்பட்ட பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என கிறிஸ்தவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ். அமைப்பின் வருமான உத்திகளில் ஆட்கடத்தலும் ஒன்று. கடத்தப்படும் நபர்களை மீட்பதற்குக் குறிப்பிட்டளவு பணத் தொகையைப் பேரம் பேசுவர். கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட இவர்களை மீட்க 18 மில்லியன் அமெரிக்க டொலர் தருமாறு ஐ.எஸ்ஸினால் மிரட்டல் விடப்பட்டது. பேச்சின் பின்னர் தொகையில் சிறிய மாற்றம் ஏற்பட்டது.

ஆனால் துல்லியமான தொகை பற்றி தகவல் வெளியாகவில்லை எனத் தெரிவித்தனர். அசீரிய மனித உரிமை ஆணையத்தின் தகவலில், 42 கிறிஸ்தவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும்,அவர்களில் அதிகமானோர் பெண்களும் சிறுவர்களும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் மனித உரிமை ஆணையம் குறைந்தது 17 பெண்கள் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளது. (த-ரி4)

# வரலாறு கா
# கடல்மட்டம்
# கடந்த நூற்ற
## விஞ்ஞானிகள் ஆய்வில்



வோஷிங்டன், பெப்.25
புவியியல் வரலாற்றில் 27 நூற்றாண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடல் மட்ட உயர்வு கடந்த நூற்றாண்டில் அதிகரித்துள்ளது. கடந்த 3000 ஆண்டுகளில் கடல் நீர் மட்ட உயர்வு பல்வேறு அளவுகளில் காணப்பட்ட போதிலும், இந்த நீர் மட்ட உயர்வு மிக அதிகம் என காலநிலை விஞ்ஞானி போப் கோப் தான் நடத்திய ஆய்வுகளின் அடிப்படையில் தெரிவித்தார்.

95 சதவீதமான கடல் மட்ட உயர்வு 19 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்றுள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த உயர்வு கி.மு. 800 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்றதைவிட வேகமானது என அந்த ஆய்வில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மனித செயற்பாடுகளே கடல் மட்ட உயர்வுக்குக் காரணம் என அறியப்பட்டுள்ளது. 20 ஆம் நூற்றாண்டில் 14 சென்றி மீற்றர் அளவுக்கு கடல் மட்டம் உயர்ந்துள்ளது. கால நிலை விஞ்ஞானிகள் 10 பேர் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆய்வில் உலக அளவில் 1000 ஆய்வாளர்களின் தகவல்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. புவியின் 24 பிரதேசங்களில், ஆயிரத்து 300 பூகோளக் கடல் மட்டங்களில் இருந்து அலையின் அளவை அவதானிக்க 66 கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தாட்டிக்கா , கிறீன்லாந்தில் அதிகளவில் பனியுருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

20ஆம் நூற்றாண்டில் ஒவ்வொரு வருடமும் 1.4

மில்லி மீற்ற
ளதாகத் தெ
நாசா வெள
3.4 மில்லி
நூற்றாண்ட
கடல் மட்ட
ஆய்வில் ெ
ஐ.நாவின்
காலத்தில்
நிலை மாற்
பிடப்பட்டுள்
இவற்றைக்
பாரிஸில் ம
195 நாடுக
ஒவ்வொரு
தனிக்கும் ெ
கைகள் குறி
னைச்செயற்

# 72 மில்லியன் அமெரிக்க டொலரை தண்டமாகச் செலுத்தும் ஜோன்சன்ஸ்

## பேபி பவுடர் மற்றும் ஷவர் ரூ ஷவர் ஆகியவை புற்றுநோய் ஏற்பட ஊக்கிகளாக இருந்தமையால்




அலபாமா, பெப். 25
பிரபல குழந்தைகள் பாவனைப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஜோன்சன்ஸ் அன்ட் ஜோன்சன்ஸ் நிறுவனத்தின் முகப் பூச்சுப் பவுடரைப் பாவித்த பெண் ஒருவர் புற்றுநோயால் உயிரிழந்ததை அடுத்து அந்த நிறுவனத்திடமிருந்து 72 மில்லியன் டொலர் தண்டப் பணம் நீதிமன்றத்தால் அறிவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் பல தசாப்த காலமாக பேபிபவுடர் மற்றும் ஷவர் ரூ ஷவர் என்பவற்றைப் பாவித்துள்ளார். இந்த நிலையில் அவர் கர்ப்பப்பை புற்று நோய்க்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அவருக்குக் கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கு ஜோன்சன்ஸ் நிறுவனத்தின் தயாரிப்புக்களான பேபி பவுடர், ஷவர் ரூ ஷவர் பூச்சு என்பவை ஊக்கிகளாக இருந்துள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது குடும்பத்தினர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் விசாரணையை அடுத்தே இந்த மிகப்பெரிய தொகை தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணுக்கு நேரடியாக ஏற்பட்ட பாதிப்புக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர்களும், ஜோன்சன்ஸ் அன்ட் ஜோன்சன்ஸ் நிறுவனம் தனது பாவனையாளர்களுக்கு செய்த மோசடி, சதி, புறக்கணிப்பு ஆகிய குற்றங்களுக்காக 62 மில்லியன் அமெரிக்க டொலர்களும் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முசோரி நீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பாதிப்படைந்த பெண்ணின் குடும்பத்தினர் உரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து குற்றச்சாட்டை முன்வைத்ததை அடுத்து இவ்வாறான ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுகள் ஜோன்சன்ஸ் அன்ட் ஜோன்சன்ஸ் நிறுவனத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டபோதிலும் இவ்வாறான தீர்ப்பு வழங்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

அலபாமாவில் வசிக்கும் பொக்ஸ் எனும் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். இவர் 35 வருடங்களாகக் குறித்த நிறுவனத்தின் பேபி பவுடர் மற்றும் ஷவர் ரூ ஷவர் என்பவற்றைப் பாவித்துள்ளார். இவர் கடந்த வருடம் தனது 62 ஆவது வயதில் உயிரிழந்தார்.

பெண்ணின் சார்பில் [illegible] கறிஞர் ஜெரி பெஸ்லி தெரிவிக்கையில், பொதுமக்களுக்குப் பொய்யானவற்றை வழங்குகின்றனர் எனத் தெரிவித்தார்.

ஜோன்சன்ஸ் அன்ட் ஜோன்சன்ஸ் ஊடகப் பேச்சாளர் கோரல் குட் ரிச் தெரிவிக்கையில், எமது உற்பத்திகள் மூலம் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் நாம் வழங்குகிறோம். இவ்வாறான ஒரு மோசமான எதிர் விளைவுக்காக நாம் மனம் வருந்துகிறோம். உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். ஆயினும் பல தசாப்தங்களாக உற்பத்திகளை மேற்கொண்டுவரும் நாம் எமது நுகர்வோரின் பாதுகாப்பை அதி [illegible] அதன [illegible] பத்திகள் பாதுகாப்பானவை என நம்புகின்றோம்- என்றார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்
# கூட்டு இ
## வடகொரியாவை



சியோல், பெப்.25
அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து இராணுவப் பயிற்சி நடத்தத் திட்டமிட்டுள்ளன. இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையான துருப்புகள் பங்கேற்கும் இந்த இராணுவப் பயிற்சி, வடகொரியாவின் ஐதரசன் குண்டுப் பரிசோதனைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் இடம்பெறவுள்ளது.


இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. மேலும் அவ்வாறான ஒரு பயிற்சி இடம்பெறின் அமெரிக்காவைத் தாக்குவோம் என வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்க-தென்கொரியப் படையினர் 3 லட்சம் பேர் இணைந்து இராணுவப் பயிற்சியில் ஈடுபடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் பயிற்சியை முன்னிட்டு வடகொரிய அதிபர் கிம் யோங் உன் மிகவும் கோபத்தில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவப் பயிற்சி இடம்பெறுவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலும் முதலில் தென்கொரிய புளூ ஹவுசையும், இரண்டாவதாக ஆசியா, அமெரிக்காவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களையும் தாக்குவோம் எனவும் வடகொரிய பியொங்யாங் தலைமையகம் எச்சரித்துள்ளது.

இராணுவப் பயிற்சியில் அமெரிக்காவைச் சேர்ந்த 15 ஆயிரம் படையினரும், தென்கொரியாவைச் சேர்ந்த 290 ஆயிரம் படையினரும் கலந்து கொள்ளவுள்ளனர். போவல் ஈகிள் எனும் இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சி சுமார் 50 நாள்கள்வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாத
# ம் உயர்வு
# றாண்டில்
## வில் தகவல்



ல்லி மீற்றர் அளவு கடல் மட்ட உயர்வு ஏற்பட்டுள் தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ாசா வெளியிட்ட அறிக்கையின்படி வருடத்துக்கு .4 மில்லி மீற்றர் உயர்வு ஏற்பட்டுள்ளது. 19 ஆம் ாற்றாண்டில் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அளவு டல் மட்ட மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

.நாவின் அறிக்கையில், அரை நூற்றாண்டு ாலத்தில் ஏற்பட்ட 95 சதவீத மாற்றங்கள் கால லை மாற்றத்துக்கு வழிவகுத்தன எனக் குறிப் டப்பட்டுள்ளது.


வற்றைக் கருத்தில் கொண்டு கடந்த டிசெம்பர் மாதம் ாரிஸில் மாநாடு இடம்பெற்றது. இந்த மாநாட்டில் 95 நாடுகள் பங்கெடுத்தன.

வ்வொரு நாடுகளிலும் சூழல் வெப்ப நிலையை னிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கும் நடவடிக் கைகள் குறித்து ஆராயப்பட்டதுடன், பல நாடுகள் அத ணச்செயற்படுத்தவும் ஆரம்பித்துள்ளன. (கு-ரி4)



பிஜி தீவில் இடம்பெற்ற சூறாவளியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக உயர்வடைந்துள்ளது. பசுபிக் பிராந்தியத்தைத் தாக்கிய மிகக் கடுமையான சூறாவளி இது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து அருகில் உள்ள நாடான ஆஸ்திரேலியா தனது றோயல் சிறப்புப் படையினரை மீட்புப் பணிக்காகச் சிறப்பு விமானத்தில் அனுப்பியுள்ளது. கிட்டத்தட்ட 34 ஆயிரம் மக்கள் வீடுகள் இன்றி, அத்தியாவசிய வசதிகள் இன்றித் தவிப்பது குறிப்பிடத்தக்கது. (கு-ரி4)

# க்கா-தென்கொரியா
# இராணுவப் பயிற்சி
## வை மிரட்டும் வகையில்



முன்னர் இவ்வா றான கூட்டுப் பயிற் சிகள் இடம் பெறும் போது கொரிய தீப கற்பத்தில் பதற்ற நிலை நிலவும். இந்த நிலையில் நேற்று முன்தினம் தென்கொரியத் தலைநகர் சியோ லில் அமெரிக்கா வின் எப்-22 பிரிவுப் போராளிகள் இரகசி யமாகத் தரையி றங்கியிருப்பதாகத் தகவல் வெளியாகி யுள்ளது.

பயிற்சி தொடர்பில் வடகொரிய இராணு வத் தலைமையகம் தெரிவிக்கையில், முன் கூட்டிய திடீர்த் தாக்குதலுக்கு ஏற்ற விதத்தில் படைகள் தயார் செய் யப்பட்டுள்ளன. பயிற்சிக்கான அறிகுறிகள் ஏதேனும் இலேசாகத் தெரிந்தாலும் தந்திரோபாய வழிமுறையைக் கையாள்வோம் எனத் தெரிவித்துள்ளது.

சர்வதேச விதிகளை மீறி ஐதரசன் குண்டுப் பரிசோதனை இடம்பெற்றதும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்ததும் வடகொரியாவுக்கு மேலும் நெருக்கடிகளை அதிகரித்துள்ளது. ஐ.நாவின் கொள்கைப் படி இவ்வாறான பரிசோதனைகள் தடை செய்யப்பட்ட வையாகும். (கு-ரி4)

> **பயிற்சிக்கான அறிகுறிகள் ஏதேனும் இலேசாகத் தெரிந்தாலும், தந்திரோபாய வழிமுறையைக் கையாள்வோம் எனத் தெரிவித்துள்ளது. சர்வதேச விதிகளை மீறி ஐதரசன் குண்டுப் பரிசோதனை இடம்பெற்றதும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்ததும் வடகொரியாவுக்கு மேலும் நெருக்கடிகளை அதிகரித்துள்ளது.**



## அறுவைச் சிகிச்சை மூலம் கெரில்லாவுக்குப் பிரசவம்

லண்டன், பெப்.25

பிரிட்டன் விலங்குக்காட்சிச்சாலையில் கெரில்லா குரங்கு ஒன்றுக்கு அறு வைச்சிகிச்சை மூலம் பிரசவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான அறுவைச்சிகிச்சைகள் மிக அரிதானவை எனவும், தாயும் சேயும் நலமாக இருப்பதாகவும் மிரு கக் காட்சிச்சாலையினர் தெரி வித்தனர்.

தாய்க் குரங்குக்கு உடல் உபாதை ஏற்பட்ட காரணத்தால் குட்டி ஈன முடியாமல் இருந்தது. இதனை அடுத்து அவசர அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அறுவைச் சிகிச்சையின் மூலம் வெளியே எடுக்கப்பட்ட குரங்குக் குட்டி மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டது. மருத்துவர்களின் உதவி மூலம் செயற்கைச் சுவாசம் கொடுக் கப்பட்டுக் காப்பாற்றப்பட்டது.

தாய்க் குரங்கான கேரா, பெண் குட் டியை ஈன்றுள்ளது. அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர் தெரிவிக்கையில்,

மனிதர்களுக்கு செய்யும் அறுவைச் சிகிச்சை முறையேகையாளப்பட்டமை எனது அனுபவத்தில் இதுவே முதல் முறை எனத் தெரிவித்தார்.

தற்போது இந்தக் குரங்கு குட்டி மருத்துவரின் கண்காணிப்பில் உள் ளது. (கு-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலியையே பலி கொள்ளும் கீர்த்தனைகள்



கே.எஸ்.சிவஞானராஜா

ஆன்மிக வாலாயம் நிறைந்த இவ்வுலகம் வலிகளினாலே நொந்து போய்க் கண்ணீரைச் சுமக்கின்றது. இந்த வலிக்கு 'யாரும் பொறுப்பில்லை' என்று தப்பித்துக் கொண்டால்,அதை நாம் வேண்டுமென்றால் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இந்தப் பூமி ஏற்றுக் கொள்ளாது.ஏனென்றால் நாம் இந்தப் பூமியையோ, சுற்றாடலையோ, சுற்றத்தவரையோ, குடும்பத்தவரையோ, இயற்கை வனப்புக்களையோ, ஆகம நியதிகளையோ, நோகாமல் கொள்ளாமல் வென்றிருக்கிறோமா? என்ற கேள்விக்கு (உங்களைத் தவிர) மற்றையோர் அனைவருமே இல்லையென்றுதான் சொல்வர். ஆம் என்று சொன்னால் அவர்களோடு நாம் அவதானமாக இருக்க வேண்டும். அவர்களுக்கும் தெரியாமல், பார்ப்பவர்களுக்கும் புரியாமல் நோதல்கள் இடம்பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. எல்லாமே மாயைகளாகக் கண்களைக் கௌவி இழுத்து விடுவதனால்,மற்றவர்களின் வலிகள் எமக்குப் புலப்படுவதில்லை. இதன் பிரகாரம் ஒட்டுமொத்தமாகப் பூமாதேவியானவள் சகல நோதல் வலிகளையும், பொறுத்தருள்கிறாள். அவளது பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. எல்லையானது மீறப்படும் பட்சத்தில் திடீர்ப் பாதிப்புக்கள் ஏற்பட்டே தீரும். இதை எவராலும் தடுத்து விட முடியாவிட்டாலும்,இறைவனது நாமாவளி அர்ச்சனை மூலம் வென்று விடலாம். எந்த மதமானாலும், அவரவர் மதத்துக்குரிய பக்திரசம் சொட்டும் பாடல்களை உளம் கனிய மனம் வைத்துப் பாடுவோமாக இருந்தால், எந்த வலியையும் போக்கிட முடியும்.

இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து, பௌத்த மதம் சார்ந்த ஏராளமான கீர்த்தனைகள் மனதை உருக்குவனவாக அமைந்துள்ளன . எல்லாவற்றிலும் சந்த அமைப்பு, இசை, தாளம், பக்தி, கருணை,இரக்கம், நிவாரணம், மருந்து, வரங்கள், வாழும் வழிகள்,தடை நீக்கம், நோய்நீக்கம்,வலிநீக்கம், துன்பநீக்கம், மரண பயநீக்கம், பிறவிநீக்கம், விடுதலை, வறட்சி நீக்கம், வறுமைநீக்கம், கள்வர் பயமின்மை, கள்வருக்குச் சிறைவாசம், அடாவடிகள் நீக்குதல், அட்டகாசங்களைத் தணித்தல், விபத்துக்களைத் தவிர்த்தல், பேராசையை ஒளித்தல், நயவஞ்சகர்களை விரட்டி அடக்குதல், குள்ளத்தனங்களைத் திருத்துதல், கொடூரங்களை அறவே ஒழித்தல், பேராபத்தைத் தடுத்தல்,பிறர்மனை புகாமை, பொதுநிதியைக் கையாளாமை (சுருட்டாமை), கல்வியை வர்த்தகம் செய்யாமை, வைத்தியத்தை வர்த்தகம் செய்யாமை, இறைவன் அடியார்களைத் துன்புறுத்தாமை, பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்காமை, போதைகளை உண்டு பண்ணாமை, விலைமகளோடு சேராமை,போர் மேகங்களுக்கு வித்திடாமை, அடிமைகளின் வாழ்க்கையில் சவாரி செய்யாமை, பெண்களை விளம்பரங்களில் ஆபாசமாகப் பயன்படுத்தாமை,பெண்கள் மற்றும் குழந்தைகளைத் துஷ்பிரயோகம் செய்யாமை, ஓரினம் சேராமை, காமகுரோத விரோத மோகச் செயற்பாடுகளில் ஈடுபடாமை, நிதி, நீதி, நிர்வாகக் கட்டமைப்பைக் குலைக்காமை போன்ற இன்னோரன்ன பொறுப்புக்களிலிருந்து சமூகத்தைத் தொடர்ந்தும் செப்பனிட்டுக் கொண்டு செல்வதென்பது பக்திரசம் சொட்டும் கீர்த்தனைகளாலேயே முடியும் என்பதே ஆன்மிக வரலாறு. உலகமானது கவர்ச்சியிலும், சிற்றின்பத்திலும் மூழ்கி, மேற்குறிப்பிட்டவற்றில், பாதகங்களை உள்வாங்கிச் சாதகங்களை வெளிவிடும் தன்மையினால் வலிகளை வீடுகளிலும், வீதிகளிலும், மற்றும் வாய்ப்பான வாலாயமான இடங்களிலும் விட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ளும் மானிடம், இனிமேலாவது தழைப்பதற்கு இறைபக்தியையூட்டும் பாடல்களை,திருமுறைகளை, திருமறைகளை, கீர்த்தனங்களைப் பாடியோ, கேட்டோ, உணர்ந்தோ, ரசித்தோ, எழுதியோ, பார்த்தோ, தியானித்தோ, பசியாறுவார்களாக இருந்தால், இது வரைகாலமும் ஏற்பட்ட வலிகள் ஒழியும். இதில் சந்தேகப்பட வேண்டாம். பிரார்த்தனையே விடுதலை. பிரார்த்தனையை ஆராய வேண்டாம். அது உங்கள் கடமையே.

### அடானா

'டானா' என்பது சிறை. அடானா என்பது விடுதலை. சம்பந்தப்பெருமானின் அடானா இராகவைரமென விளங்கும் யாழ்முரிப்பண்ணில் அமைந்திடும்- மாதர் மடப்பிடியும்-என்ற தேவாரத்தை எவர் மெய்யன்போடு ஓதுகிறார்களோ அவர்களுக்கு வலிகள் யாதொன்றும் செய்வதில்லை. வலிகளிலிருந்து விடுதலை கிடைக்கும். இதை அனுபவத்தினாலேதான் உணரமுடியும்.

> சற்குரு தியாகராஜ சுவாமிகளருளிய பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஐந்தும் இரத்தினங்களேயாம். நாட்டை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி, கௌளை ஆகிய ஐந்து இராகங்களிலுமாக, தேன் சொட்டும் சாகித்தியங்களும், இராக பாவம் ததும்பும் வர்ண மெட்டுக்களும், பக்தி ரசம் பாயும் பல்லவி, அனுபல்லவி, சரணங்களும் மனிதப்பிறப்பின் வலிகளை ஆற்ற வல்லன.

### பஞ்சரத்தினம்

சற்குரு தியாகராஜ சுவாமிகளருளிய பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஐந்தும் இரத்தினங்களேயாம். நாட்டை, ஆரபி, ஸ்ரீராகம்,வராளி, கௌளை ஆகிய ஐந்து இராகங்களிலுமாக, தேன்சொட்டும் சாகித்தியங்களும், இராக பாவம் ததும்பும் வர்ணமெட்டுக்களும், பக்தி ரசம் பாயும் பல்லவி, அனுபல்லவி, சரணங்களும் மனிதப் பிறப்பின் வலிகளை ஆற்றவல்லவை.

ஜகதானந்த காரகா-நாட்டைஇராகம், துடுகு கல நன்-கௌளை இராகம், சாதிஞ்சனே-ஆரபி இராகம் ,கனகனருசி-வராளிஇராகம், எந்த ரோ மஹானு-ஸ்ரீராகம் மேற்படி ஐந்து கீர்த்தனைகளும், தியாகராஜ உற்சவத்தின் போது ஆராதனை செய்யப்படும். இந்தியா, இலங்கை, கனடா, இலண்டன் ஆகிய இடங்களில் மிகவும் சிறப்பாக இந்த உற்சவம் இடம்பெற்றுவருவது அந்தந்த நாட்டின் வலிகளைத் தணிக்க வல்லது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கீர்த்தனைகளில் பொதிந்துள்ள பொருள் யாதெனில்:- எத்தனையோ துர்க்குணங்களோடு கூடிய என்னை எந்த அரச குமாரன் காப்பாற்றுவான்? ஹே! ராமா! நீ தான் என்னைக் காக்க வேண்டும் மானிட ஜன்மம் கிடைப்பது அரிது என்று நினையாமல், பரமானந்தத்தை எண்ணாமல் காம, குரோத, மத,மது, மோக, உலோப, உல்லாச, பேராசை குணங்களுக்கு அடிமையாக வீண் காலம் கழித்து மோசம் போனேனே! ஸ்ரீராமா நீ யல்லாது என்னை எவர்தான் காப்பாற்றுவார்? பிறருடைய தனத்துக்கும், தானத்திற்கும் ஆசைப்பட்டவனாய், ஈஸ்வர பஜனாம்ருதத்தைப் பருகாமல், வீணான வாதப்பிரதிவாதங்களைச் செய்தவனாகிய எனக்கு ஸ்ரீராமா! ஜானகிராமா! நீயன்றி வேறுயார் தான் துணை?

நாட்டிட வலிகளை ஆற்றுவாயாக. பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் எந்த [illegible] எவர் பாடினாலும், எந்த நாட்டில் பாடப்பட்டாலும், அவரவர்க்கும், அந்த நாட்டுக்கும், கேட்பவர்க்கும், ஏற்பட்ட அத்தனை துன்பங்களும், வலி களும் அறவே நீங்கும் என்பதாகும். அந்தக் கீர்த்தனைகளில் வருகின்ற அத்தனை வார்த்தைகளும் மகிமை தருகின்ற மந்திரங்களாகும். மந்திரங்களும், சாஹித்தியங்களும் வலிகளைப் போக்கவல்லவை.

### சிறப்பு

வட இலங்கைச் சங்கீத சபை, கம்பன் கழகம், இளம் கலைஞர் மன்றம் யாழ்.பல்கலைக்கழக நுண் கலைப் பீடம், மருதனார்மடம் ஆஞ்ச நேயர் தேவஸ்தானம், காரை நகர் கிழவன் காடு கலாமன்றம், ஆகிய மன்றங்கள் தியாகராஜ உற்சவமூலம் நாட்டின் வேதனைகளுக்குப் பரிகாரம் தேடியுள்ளன. இன்னும் சில அனுபூதிமான்கள் தேவநாமங்கள் மூலமாக வலிகளிலிருந்து இன்பமடைந்துள்ளார்கள். பெரியண்ணை என்று இணுவிலில் எல்லோராலும் பக்தியாக அழைக்கப்படும் இரத்தின பூபாலன் அவர்களுடன் நாம் உரையாடினால், எந்தவலியாயினும் தானாகப் பைய விலகுவதைக் கண்கூடாக அவதானிக்கலாம். அதே போல கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த சமயங்களிலும், பெரும் பெரும் அருளாளர்கள் கீர்த்தனைகளை இயற்றி மக்களின் வலிகளையும், தேசத்தின் ஆன்மிக இடர்ப்பாடுகளையும் நீக்கி, தேச ஒளியைப் பிரகாசிக்கச் செய்திருக்கிறார்கள். கீர்த்தனைகள் எவரால் இயற்றப்பட்டு, பக்தியோடு யாரால் படப்படுகின்றனவோ, அவற்றில் பொதிந்துள்ள நிவாரணங்கள், கேட்பவர்க்கும், சமூகத்துக்கும் பயன்பட்டேதீரும்.

"இறைவனிடம் கையேந்துங்கள்-அவன்
இல்லையென்று சொல்லுவதில்லை
பொறுமையுடன் கேட்டுப்பாருங்கள்-அவன்
பொக்கிசத்தை மூடுவதில்லை"

இந்தப்பாடல் உலக அரங்கில் வலம் வருவதை நாம் பக்தியோடு உணர்கிறோம்.

"தேவபாலன் பாரினிலே
ஆவலாய் அவதரித்துப்
பாவநாசம் செய்த கதை
பாடுவோம்-ஜேசு
பாதமலர் போற்றி நாளும்
வாழுவோம்"

"கேளுங்கள் தரப்படும்
தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற இந்தப் பாடல்களின் ஜீவன் என்றும் உலகை வெல்ல வைக்கும். வலிகளைப் போக்கியே தீரும். கண்ணீரைப்போக்கும். ஆன்மிகம் சார்ந்த கீர்த்தனைகள் எதுவாயினும், தனிமனித, குடும்ப, சமூக, நாட்டு, உலக வலிகளைப் போக்குவதாகவே அமைந்துள்ளன. வாய்திறந்து பாடினால் வலி பறந்து போய்விடும். பாடுங்கள்.

நேற்றைய தினம் புதன் பொய்கையில் 20ஆவது பக்கத்தில் வெளியான 'பண்ணும் பரதமும்' என்ற ஆக்கத்தை எழுதியவர் மு.க.மாசிலாமணி ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ப.வயோர்தன்

# தேசிய ஜம்போறியின் சர்வதேச இரவு

## உலக சாரணியத்தின் கலைப் பாரம்பரிய வெளிப்பாடுகள்





தனித்துவம்மிக்க சாரணியத்தின் கண்கவர் கலை வண்ணமாய் ஆடல், பாடல், நடன நிகழ்வுகள் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தி, சாரணர்களே பாரம்பரியத்தின் பாதுகாவலர்கள் என்னும் அடையாளத்தை பட்டைதீட்டும் வகையில் அரங்கேற்றப்பட்டன, ஒன்பதாவது தேசிய ஜம்போறியின் சர்வதேச இரவு கலை நிகழ்வுகள்.

நட்புரிமையும் புரிந்துணர்வும் என்பதன் அடிப்படையாகக் கட்டி எழுப்பப்பட்ட சாரணியம், இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் வியாபித்து நிற்கின்றது. சாரணியத்தைக் கொண்டாடும் வகையில் ஒன்பதாவது தேசிய சாரணியர் பயிற்சிப்பட்டறை (ஜம்போறி) முதல் முறையாக வடக்கில், சாரணியத்தில் நூற்றாண்டு காலத்தைக் கடந்த பாடசாலைகளைத் தாங்கி நிற்கும் யாழ் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் சிறப்பை மேலும் மெருகூட்டும் வகையில் இலங்கையின் 37 சாரணர் மாவட்டங்களைச் சேர்ந்த எட்டு ஆயிரத்துக்கும் அதிகமான சாரணர்களும், பதினொரு வெளிநாடுகளைச் சேர்ந்த சாரணர் தலைமை அதிகாரிகள் மற்றும் 150க்கு மேற்பட்ட சாரணர்களும் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வுகள், யாழ்.மாநகர சபை மைதானம், கோட்டை மற்றும் கோட்டையைச் சூழவுள்ள பகுதி, யாழ்.மத்திய கல்லூரி ஆகிய பகுதிகளில் நடைபெறுகின்றன.

கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி நாளை, 26ஆம் திகதியுடன்நிறைவடையஉள்ளஇந்தப்பயிற்சிப்பட்டறையில் பல்வேறு திறமை வெளிப்பாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன, சிறப்பு வைபவமாக இரவு நேர கலை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதன் ஒருகட்டமாக கடந்த திங்கட்கிழமை இரவு வெளிநாட்டுச் சாரணியர்களின் சர்வதேச இரவு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. சர்வதேச இரவு நிகழ்வுகள் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த ஆண், பெண் சாரணியர்களின் கோலாகல கலை நிகழ்வுகள், கண்கவர் காட்சிகள் என்பவற்றைத் தாங்கியதாக கடற்படையினரின் ஒருங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

திங்கள் இரவு 8 மணிக்கு, மதியின் ஒலியும் மின் ஒலியும் மின்ன, யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் அதிகமான சாரணர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டதுடன், ஆடல் பாடல்நிகழ்வுகளிலும்ஈடுபட்டனர். திறமை வெளிக்காட்டலில் சாரணர்கள் பெற்ற சுமைகளை இறக்கும் வகையில் அமைந்த இரவு நேரக் கலை விருந்து சாரணர்களுக்கு இனிய படையல் என்பதில் ஐயமே கிடையாது. இலங்கை கடற்படையினரால் முன்னெடுக் கப்பட்ட இந்த நிகழ்வில் கடற்படையினரின் இசைக் குழுவால் சிங்களப் பாடல்கள் இசைக்கப்பட்டதுடன், சிங்கள பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையிலான நடனங்களும் நடத்தப்பட்டன. சர்வதேச இரவு நிகழ்வின் ஆரம்பமாக கடற்படை நங்கைகளால் வழங்கப்பட்ட வரவேற்பு நடனம் பெரிதும் தனித்தன்மை கொண்ட கலைப்படைப்பாகும்.

இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு, பாகிஸ்தான், ஓமான், மலேசியா, ஜப்பான் உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த சாரணர்கள், தத்தமது நாடுகளின் கலாசாரத்தைப் பறைசாற்றும் பாரம்பரிய நடனங்களை அரங்கேற்றினர். நிகழ்வுகளுக்கு முன்னதாக தமது நாட்டின் சிறப்பு, தேசிய சின்னம், சாரணியத்தின் தன்மை என்பவற்றை அறிமுகப்படுத்தியதுடன், இலங்கையில் தாம் பெற்ற சிறப்பான அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

சிறுவர்கள் மெல்லிய அசைவுகளால் தாய் நாட்டின் பெரும் பொக்கிசமான பாரம்பரியத்தை சிந்தாமல் சிதறாமல் கலைவடிவாக அரங்கேற்றியமை தத்தமது நாட்டின் மீது சாரணர்கள் கொண்ட பற்றை வெளிப்படுத்துவதாய் அமைந்தன. அசைவுகளில் கலை விதை விதைத்த இந்தியாவைச் சேர்ந்த ஆண், பெண் சாரணர்களின் கலை நிகழ்வுகள் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தன. ஜப்பான் நாட்டு சாரணர்களின் கலாசார நடனம் பார்வையாளர்களை ஜப்பான் நாட்டுக்கே அழைத்துச் செல்வது போன்ற உணர்வைத் தந்தது.

அத்துடன் சாரணியம் சார்ந்த நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்று கூடிய சாரணர்கள், தனித் தனியாக தாம் பிரதிநிதித்துவப்படுத்திய நாடுகளின் கலாசார நடனங்களை முன்வைத்தனர்.

முன்பதாக இலங்கையின் சாரணர் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சாரணர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இவற்றில் கரகாட்டம், பொம்மல் ஆட்டம், அம்மன் நடனம், கோலாட்டம் என்பவைதமிழ்ச்சாரணர்களால் நிகழ்த்தப்பட்டன. இது போன்று சிங்களச் சாரணர்களும் தம்முடைய மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கலை நிகழ்வுகளை முன்வைத்தனர். இவற்றில் முக்கியமாக நாடகப்பாங்கில் அமைந்த நடனங்களும், ஆளுக் கொரு மரம் நடுவோம் என்ற கருப்பொருளை வெளிப்படுத் திய நாட்டிய நாடகமும் சிறப்பாக அமைந்திருந்தன.

> ஜம்போறி சாரணிய நிகழ்வில் முதன்மை பெற்ற இந்தக் கலை இரவில், தமிழ் மக்களும் தமிழ் மொழியும் செறிந்த வடபிராந்தியத்தில் தமிழ் மொழியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படவில்லை. எனினும் மாவட்டரீதியாக தெரிவுசெய்யப்பட்ட தமிழ் சாரணர்களால் தமிழ்ப் பாரம்பரியம் சார்ந்த ஆடல்கலைகள் முன்வைக்கப்பட்டன.

ஜம்போறி சாரணிய நிகழ்வில் முதன்மை பெற்ற இந்தக் கலை இரவில், தமிழ் மக்களும் தமிழ் மொழியும் செறிந்த வடபிராந்தியத்தில் தமிழ் மொழியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படவில்லை. எனினும் மாவட்டரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் சாரணர்களால் தமிழ் பாரம்பரியம் சார்ந்த ஆடல்கலைகள் முன்வைக்கப்பட்டன. இரவு 8 மணிமுதல் நள்ளிரவு 12.30 மணி வரையில் நடைபெற்ற சர்வதேச இரவு கலை நிகழ்வுகளில் நேரம் கருதி சாரணர்களின் கலைநிகழ்வுகள் சில முழுமை பெறாத நிலையிலும் நிறுத்தப்பட்டன. எனினும் வேறுபட்ட மொழி, கலாசாரம், பண்பாடு என்பவற்றைக் கொண்ட சாரணர்களை இணைக்கும் நிகழ்வாகவும், யாழ். மாவட்ட சாரணியக் கலைகளை உலகளவில் எடுத்துச் செல்லும் முக்கிய நிகழ்வாகவும், ஒன்பதாவது ஜம்போறியில் ஒருங்கமைக்கப்பட் சர்வதேச இரவு நிகழ்வுக்ள் அமைந்திருந்தன.

மேற்படி நிகழ்வில் வெளிநாடுகளைச் சேர்ந்த சாரணியத் தலைவர்கள் மற்றும் சாரணர்கள், இலங்கை சாரணிய சங்கத்தின் மூத்த பிரதிநிதிகள், சாரணிய மாவட்டப் பிரதிநிதிகள், சாரணர்கள், பொதுமக்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரம் எல்லோரிடமும் பலிக்காது

முன்னொரு காலத்தில் மிகவும் தந்திரமுள்ளநரிஒன்றுஒருபண்ணையின் அருகில் உள்ள சிறிய மலைக் குகை ஒன்றில் வசித்தது. ஒருநாள் மாலை அது அந்தப் பண்ணைக்குப் போனது. பண்ணைக்குள் இருந்த வீட்டுச் சமையலறையில் பாத்திரங்கள் கழுவும் சத்தமும் பேச்சுக்குரல்களும் கேட்டன.

அந்த வீட்டுக் காணியின் வாசல் கதவு சிறிது திறந்திருந்தது. நரி அதன் வழியே உள்ளே புகுந்தது. அங்கே ஓரிடத்தில் செடிகள் அடர்த்தியாயிருந்தன. நரி அவற்றின் பின்னே ஒளிந்து கொண்டது. அது கோழிக் கூட்டுக்குள் சென்று ஒரு கோழியைப் பிடித்து உண்ண எண்ணியது.

இரவு வந்தது. மறைவிடத்திலிருந்து நரி வெளியே வந்தது.

“ஏய் திருடா! சீக்கிரம் ஓடிவிடு. உன்னைக் கடித்துக் குதறி விடுவேன்!” என்ற குரல் கேட்டது.

“வணக்கம் நாயாரே, என்னைத் தவறாக எண்ண வேண்டாம். நான் சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன். அதிக களைப்பாயிருந்தது. அவ்வளவுதான்” என்றது நரி.

“உன்னைப் பார்த்தால் களைத்துப் போனவன் போலத் தெரியவில்லை. ஏதோ திருடத்தான் நீ வந்துள்ளாய்”

“இல்லை இல்லை எனக்கு உடல் நிலை சரியில்லை. இந்த இரவு ஓய்வு எடுத்துக்கொண்டு காலையில் போய் விடுகிறேன்”

“சரி இங்கு இரவில் நீ தங்கலாம் ஆனால் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். ஜன்னல் வழியே சமையல் அறைக்குள் நுழைந்து எனக்கொரு இறைச்சிக் கறித்துண்டு கொண்டு வரவேண்டும். சம்மதமா?”

“சரிகொண்டு வந்து தருகிறேன்” என்று கூறிய நரி, சமையல் அறைக்குள் புகுந்து பெரிய இறைச்சிக் கறித்துண்டு ஒன்றை எடுத்துவந்து கொடுத்தது.

நாய் அதற்கு நன்றி கூறி உழவுக் கருவிகள் உள்ள அறைக்கு அதை அழைத்துப் போனது. கதவில் இருந்த ஓட்டையின் வழியே உள்ளே அனுப்பியது.

“இரவு முழுவதும் இங்கேயே தங்கியிரு. வெளியில் வராதே. அதிகாலையில் ஓடி விடு! நான் உன்னைக் கவனித்துக் கொண்டு தான் இருப்பேன்”என்றுஎச்சரித்து விட்டுப் போனது நாய்.



நாய் இறைச்சி கறித்துண்டை தின்று தண்ணீர் குடித்தது. பிறகு நரி இருக்கும் அறையைப் பார்த்துக் கொண்டே படுத்திருந்தது. சற்று நேரத்தில் அது உறங்கிவிட்டது.

நரி மெதுவாக வெளியில் வந்து கோழிக் கூட்டுப் பக்கம் போனது.

“நரியே! எங்கேபோகிறாய்? நில்!” குரல் கேட்டுத் திரும்பியது நரி. கொட்டிலில் இருந்த குதிரைதான் அப்படிக் கேட்டது.

“குதிரையாரே, தொண்டை வறண்டு விட்டது. தண்ணீர் குடிக்கப் போகிறேன். நாய்தான் என்னை இங்கு தங்க அனுமதித்தது”

“நான் கனைத்தால் ஆள்கள் வருவார்கள். நீ மாட்டிக் கொள்வாய் எனக்கு ஒரு உதவி செய்தால் நான் உன்னைக்காட்டிக்கொடுக்க மாட்டேன்”

“என்ன வேண்டும் சொல். உடனே செய்கிறேன்”

“அதோ தெரியும் கொள்ளுப் பையை இழுத்துவந்து கொடு. எனக்குப் பசி தாளவில்லை.

“வந்த நேரம் சரியில்லை” என்று முணுமுணுத்துக் கொண்டே, நரி கொள்ளுப் பையை இழுத்து வந்து குதிரையிடம் கொடுத்தது.

“குதிரையாரே! நான் போகலாமா?

“கூடாது நீ கோழி திருடப் போகிறாய். இங்கேயே படுத்துக்கொள்”

நரிபடுத்துக் கொண்டது. குதிரைகொள்ளைத் தின்று முடித்தது. பக்கத்திலிருந்த நீரைக் குடித்தது. சற்றுநேரத்தில் தூங்கிவிட்டது.

நரி, கோழிக் கூட்டை நெருங்கியது. கோழிகள் தூங்கிக்கொண்டிருந்தன. கூட்டின் அடியில் உள்ள மண்ணைத் தோண்டிவளை செய்து நுழைய முடிவு செய்தது நரி. உடனே செயலில் இறங்கியது.

“நரியே வா! வெளியில் வா! மற்றவர்களிடம் சொன்ன பொய்களை என்னிடம் சொல்லாதே!” என்று ஒரு குரல்கேட்டது.நரி திரும்பிப் பார்த்தது. பளபள வென்று மின்னும் கண்களுடன் பூனை ஒன்று நின்றது.

“உன்னால் என்ன செய்ய முடியும்” என்று கேட்டது நரி.

“நான் கத்தினால் நாய் விழித்துக் கொள்ளும். என் எசமானும் வந்து விடுவார்.எனக்கொருஉதவிசெய்தால்...”

“சொல்! என்ன வேண்டும்?”

“எனக்குப் பால்வேண்டும். அதோ தெரியும் கதவில் உள்ள தாழ்ப்பாளைத் திறந்து விடு. பிறகு உன் விருப்பம் போல் நடந்து கொள்”

“தாழ்ப்பாளை எப்படித் திறப்பது?”

“நிமிர்ந்து நின்று முகத்தால் அதைத் தள்ளு. அது திறந்து கொள்ளும்!”

நரி தாழ்பாளைத் தள்ளியது. கதவு திறந்துகொண்டது.

“நீயும் வா! கொஞ்சம் பால் குடிக்கலாம்!” என்றது பூனை.

“எனக்குப் பால் பிடிக்காது. நீ போ!”

“முடியாது நீயும் வா. முதலில் நீதான் உள்ளே போக வேண்டும்!”

“நீ முதலில் போ. பின்னால் நான் வருகிறேன்” என்றது நரி.

“நீ என்னைவிட வலுவானவன். பயப்படாமல் போ! உன்னை யாரும் ஒன்றும் செய்யமுடியாது”

நரி உள்ளே நுழைந்தது. உடனே பூனை கதவை மூடித் தாழிட்டது.

நரிசுற்றும் முற்றும் பார்த்தது. இப்போதுதான்.பண்ணைக்கு வெளியே உள்ள பாதையில்தான் இருப்பதைப் புரிந்து கொண்டது. பூனை தன்னை ஏமாற்றி வெளியே அனுப்பியதை உணர்ந்துகொண்டது.

“நரியே! பால் சுவையாக இருக்கிறதா? தாழ்வான கதவுகளிடமும், பணிவான சொற்களைப் பேசுவோரிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை இப்பொழுதாவது தெரிந்துகொள். போய்வா” என்று பூனையின் குரல் கேட்டது.

“என் தந்திரங்கள் பூனையிடம் பலிக்கவில்லையே!” என்று எண்ணி வெட்கத்துடன் சென்றது நரி.



# வரலாற்றில் இன்றைய தினம்

1797 – பிரித்தானியரின் படையெடுப்பை அடுத்து கேணல் வில்லியம் ரேற்றும் அவரது படைவீரர்களும் சரணடைந்தனர்.

1836 – சாமுவல் கோல்ற் அமெரிக்காவில் கோல்ற் சுழல் துப்பாக்கிக்கான காப்புரிமத்தைப்பெற்றுக்கொண்டார்.

1856 – கிரிமிய போரைத் தொடர்ந்து பாரிஸில் ஒரு சமாதான மாநாடு தொடங்கப்பட்டது.

1932 – அடொல்ப் ஹிட்லர் ஜேர்மன் குடியுரிமை பெற்றுக்கொண்டார். இதன் மூலமே அவரால்1932 பொதுத் தேர்தலில் போட்டியிட முடிந்தது.

1933 – அமெரிக்காவின் முதலாவது விமானம் தாங்கிக் கடற்படைக் கப்பல் யூஎஸ்எஸ் றேஞ்சர் செயற்படத் தொடங்கியது.

1945 – இரண்டாம் உலக மகாயுத்தம். ஜேர்மனி மீது துருக்கி போர்ப் பிரகடனம் செய்தது.

1954 – எகிப்தின் தலைமைப் பதவியில் கமல் அப்துல் நஸார்.

1991 – வளைகுடாப் போர். ஈராக் ‘ஸ்கட் ஏவுகணை’ சவூதி அரேபிய டஹ்ரான் அமெரிக்க படை முகாமைத் தாக்கியதில் 28 அமெரிக்க றிசேவ் படையினர் கொல்லப்பட்டனர்.

1992 – 613 வரையான குடிமக்கள் அஸர்பைஜான் நாகோர்னோ கறபாக் பகுதியில் அமெரிக்க ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டனர்.

2014 – நவிப்பிள்ளையின் அறிக்கையில் உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் பற்றி எடுத்துரைப்பு.

2014 – வடக்கு மாகாண சபையை அரசு முடக்கி வருவதாக முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

2015 – வட கிழக்கு ஆப்கானிஸ்தானில் நிலச் சரிவில் 310 பேர் வரை சாவு.

# பலரகங்கள் பத்து

1.கிவி (Kiwi) என்ற பறவையைத் தனது தேசியச் சின்னமாகக் கொண்டுள்ள நாடு - நியூசிலாந்து

2.மனிதர்களைக்கடிப்பதுபெண்நுளம்புகளே.

3.மீன்களுக்கு வாசனை அறியும் சக்தி உண்டு. அவற்றுக்குக் காது வெளியில் தெரியும்படி இருக்காது. தலையின் உட்புறம் காது போன்றதொரு அவயவம் உள்ளது.

4. கண், காது, கால்கள் இல்லாத கடல் வாழ் பிராணிகடல்பஞ்சுமீன்கள்.(Songe Fisheries)

5. உலகின் முதலாவது பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயகா 1960 ஆம் ஆண்டில் பதவி ஏற்றார்.

6. இந்திய நெப்போலியன் என அழைக்கப்பட்டவர் சந்திரகுப்த மன்னன்.

7. தமிழகத்தில் கல்லினால் ஆலயங்கள் அமைத்துப் புகழ் பெற்ற சோழ மன்னன் - ராஜராஜசோழன்.

8. எட்டாம் ஹென்றி என்ற ஆங்கிலேயே மன்னருக்கு ஆறு மனைவிமார் இருந்தனர்.

9.சூரியப் பாதையில் மிகச் சிறிய கிரகம் ஜூபிடர்.

10. ஆர்க்டிக், அண்டார்க்டிக் வட்டங்களுக்கு உட்பட்ட நாடுகளில் நள்ளிரவில் சூரியன் தெரியும்.

# விடுகதைகள்

1. எல்லையில்லா அழகி, எட்டி நிற்கும் இரும்பையும் கவர்ந்து தன்பால் இழுப்பாள் - அவள் யார்?
காந்தம்

2. எல்லோருக்கும் கிடைக்காத மதி எல்லோரும் விரும்பும் மதி - அது என்ன?
நிம்மதி

3. எலும்பில்லாத மனிதன் கணுவில்லாத மரத்தில் ஏறுகிறான் - அது என்ன?
பேன்

4. எழுந்து அருகில் சென்றால் - காலில் விழுந்து வணங்குவாள்! எழுந்து அணைத்துக் கொள்வாள் - அவள் யார்?
கடல் அலை

5. எழுந்து விழுந்து தாவிடும், இரவும் பகலும் இரைந்திடும், எண்ணில்லாத உயிர்களை இதமாய் வயிற்றில் அடக்கிடும். கனத்தைக் கொடுத்தால் விழுங்கிவிடும். கட்டையைக் கொடுத்தால் உமிழ்திடும் - அது என்ன?
கடல்

6. என் காளை குட்டைக் காளை. கிட்ட வந்தால் முட்டித் தள்ளும் - அது என்ன?
நெருஞ்சி முள்.

7. என் தம்பி சின்னத் தம்பி ஓடியோடி முள்ளடைக்கிறான் - அவன் யார் ?
தையல் ஊசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



# சிரியப் பிரச்சினையில் சர்வதேசம் பாராமுகம்

சிரியாவின் உள்நாட்டுப் போருக்கு முடிவு காண்பதற்கான சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் அருகி வருகின்றன. கடந்தவாரம் முனிச் நகரில் நடைபெற்ற சிரியப் பிரச்சினையில் அக்கறை கொண்ட வல்லரசு நாடுகளின் சந்திப்பின்போது ஒருவார காலத்தில் போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், தற்பொழுது உருவாகிவரும் களநிலைமை ஜனாதிபதி அஸாத்துக்கு சார்பாக மாறிவருவதால் போர் நிறுத்தம் உடனடியாக ஏற்படாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்ய விமானங்களின் குண்டுவீச்சுடன் சிரிய அரசுப் படைகள் சில நகரங்களைக் கைப்பற்றியுள்ளன. அதனால் சிரியாவை தனது கட்டுப்பாட்டில் முழுமையாகக் கொண்டுவந்த பின்பே பேச்சு என்று அஸாத்தின் நிலைப்பாடு மாறிவருகின்றது.

போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பையும், நுஸ்ரா முன்னணியையும் ஒப்பந்தம் கட்டுப்படுத்தப்போவதில்லை. இந்த இரண்டு அமைப்புகளும் இல்லாமலேயே சமாதானப் பேச்சுகளை நடத்த முடிவுசெய்யப்பட்டிருப்பதால் யுத்தநிறுத்தம் ஏற்பட்டாலும் சிரியாவில் குண்டுச் சத்தம் ஓயப்போவதில்லை. இராணுவரீதியில் ரஷ்யா தலையிட்ட பின்பு போர்நிறுத்தத்துக்கான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன என்பதே யதார்த்தம்.

சிரியப் படைகளின் முன்னேற்றம் காரணமாக உள்நாட்டில் இடம்பெயரும் அகதிகளின் எண்ணிக்கையும், எல்லை கடந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மாபெரும் அகதிகள் பிரச்சினையை உலகம் எதிர்நோக்கி உள்ளது. போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் அகதிகள் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுவரும் என்று எதிர்பார்க்க முடியாது. சிரியாவில் ஒருகோடியே 35 லட்சம் மக்கள் மனிதாபிமான உதவிகளை எதிர்நோக்கி உள்ளனர் என்றும், 66 லட்சம்பேர் உள்நாட்டில் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர் என்றும், 46 லட்சம்பேர் எல்லை கடந்தும், கடல்மார்க்கமாக ஆபத்தான பயணங்களை மேற்கொண்டும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படியான பயணங்களின்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைமட்டும்3700ஆகும். பெரும்பாலான அகதிகள் துருக்கி, லெபனான், ஜோர்தான், ஈராக் மற்றும் எகிப்து போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளனர். பத்துச் சதவீதமானோர் மட்டுமே ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். மத்திய கிழக்கிலும், ஐரோப்பிய நாடுகளிலும் நிலவும் மோசமான காலநிலை காரணமாக சிரிய அகதிகள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன. குறிப்பாக லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கில் தங்கியுள்ள சுமார் நான்கு லட்சம் அகதிகளின் நிலைமை குறித்து இந்த அமைப்புகள் கரிசனை வெளியிட்டுள்ளன. அகதிகளில் பலர் கடும் குளிரால் மரணமடையும் ஆபத்துக் குறித்து சர்வதேச உதவி நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஆகவே, இரண்டாவது உலகப் போரின் பின்னர் பெரும் அகதிகள் பிரச்சினையை உலகில் ஏற்படுத்தியுள்ள சிரியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உலகநாடுகள் முன்வரவேண்டும். ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டுக்குப் பின்னர் சிரியப் பிரச்சினை வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியாக மாற்றமடைந்து வருவதே தீர்வுக்கான சாத்தியங்கள் அருகிவருவதற்கு முக்கிய காரணமாகும்.




# எழுத்தாற்றலும் மாணவர்களும்

திருமதி விஜயவாணி ஜெயதேவன்

எழுத்தாற்றல் ஏற்படுத்தும் நன்மைகள் சம்பந்தமாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருவர் தன்னைப்பற்றி, தனது அனுபவங்களைப் பற்றி எழுதுவதானது, அவரது உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தக் கூடியதாக இருப்பதாக ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஒருவர் தனது சொந்தக் கதையை எழுதுவதானது, அவரது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி சந்தோசமான வாழ்க்கைக்கு அவரை இட்டுச் செல்கிறது. நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது வாழ்க்கையை எழுத்துக்களால் விமர் சிக்க முற்படும்போது, இந்த உலகம் பற்றிய எங்களது பார்வை மாற்றம் அடைகிறது. ஏனெனில் எங்களது சொந்த அபிப்பிராயங்கள் முழுமையாகச் சரியானவை அல்ல. ஏனெனில் என்னைப் பற்றிய கதையை நான் எழுதும்போது என்னிடமுள்ள பலவீனங்களை நான் இனம் கண்டு கொள்ள முடியும். எனவே அதைத் திருத்தியமைக்க நான் எடுக்கும் முயற்சி என்னை ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடங்களில் பின் தங்கிய நிலையில் இருக்கலாம். அல்லது பாடசாலைக்குவர விருப்பம் இல்லாமல் இருக்கலாம். அல்லது பாடசாலையில் எவரையுமே பிடிக்காமல் இருக்கலாம். ஓர் அமைதியான இடத்தைத் தெரிவு செய்து உங்கள் கடந்த கால வாழ்க்கையை ஒரு கதையாக எழுத முயற்சியுங் கள். உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சந்தோசமான நிகழ்வுகள், மறக்க முடியாத நிகழ்வுகள், உங்கள் மனதை மிகவும் பாதித்த நிகழ்வுகள், நீங்கள் சந்தித்த வித்தியாசமான நபர்கள், அவர் களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட சந்தோசமான அல்லது கசப்பான அனுபவங்கள் சகலவற்றையும் ஞாபகப்படுத்தி உங்களைப் பற்றி ஒருகதைஎழுதுங்கள்.அப்போதுநீங்கள்உங்களதுஉண்மை நிலையைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கையை எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க நீங்களே சிறந்தவர்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். நாட்குறிப்பு எழுதுவதை பலபேர் விரும்புவதில்லை. ஏனென்றால் எனக்காக, என்னைப் பற்றி எழுதுவதை நான் வெறுக்கிறேன் என்பார்கள். எழுதுவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். பல்துலக்குவதை எப்படிப் பழக்கப்படுத்தினீர்களோ, அவ்வாறே நாட்குறிப்பேட்டில் எழுதுவதையும் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் எழுதுவதானது உங்களை ஒரு சிறந்த எழுத்தாளன் ஆக்காது. ஒரு சிறந்த மனிதன் ஆக்கும். மனதில் என்னவெல்லாம் ஓடிக் கொண்டிருக்கிறதோ அவை சகலவற்றையும் கொட்டி எழுத வேண்டும். இது உங்கள் மனதைச் சுத்தப்படுத்தி, உங்களைப் புதிய ஆளாக மாற்றி உங்கள் அன்றாட அலுவல்களை நிறைவாகச் செய்ய உதவி செய்யும். மாணவர்களாகிய நீங்கள் படிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு நாள் முழுவதும் ஓடிக்கொண்டிருப்பதால் எனக்கு நேரம் இல்லை என்று சொல்லலாம். எனக்கு நேரம் இல்லை என்று சொல்வதானது, எனக்கு விருப்பம் இல்லை என்பதே ஆகும். ஒருவர் தன்னைப் பற்றி எழுத விளைகின்றபோது தனக்கு உண்மையாகவே நடக்க முற்படுகின்றார். இது நாளடைவில் அவரது நடத்தையை மாற்ற முயற்சிக்கிறது. உதாரணமாக எனது உடல் பருமன் எனக்கு அசௌகரியத்தைக் கொடுக்கிறது என்று நினைக்கின்ற ஒரு மாணவி, தன்னைப் பற்றி எழுத முயற்சிக்கின்றபோது உடற்பயிற்சி செய்ய எனக்கு நேரமில்லை, அல்லது விருப்பமில்லை, உணவுக் கட்டுப்பாட்டில் இருக்க எனக்கு விருப்பமில்லை. என்பவை போன்ற உண்மையான காரணங்களை எழுத முயற்சிக்கின்றபோது தனது பலவீனங்களைத் தானே விளங்கிக் கொள் வார். தன்னுடைய உடல் நிறையைக் குறைக்க எடுக்கின்ற முயற்சியில் நாளடைவில் அந்த மாணவி வெற்றி பெறுவார்.



எனவே மாணவர்களாகிய நீங்கள் மாணவப் பருவத்திலேயே நாட்குறிப்பேடு எழுதுவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். எழுத்தாற்றல் என்கிற சக்தி உங்கள் நடத்தையைச் சரிப்படுத்தி வெற்றிகரமான வாழ்க்கையை நோக்கி உங்களை வழிநடத்திச் செல்லும்.

*(கட்டுரையாளர்: மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஆசிரியை)*

# மாற்றத்தின் காலமிது மனந்திருந்தும் காலமுமிது

இன்றைய நவீன உலகிலே சாத்தானின் செயல்கள் தீவிரமடைந்துள்ளன. மனிதன் தன்னுடைய பாவ வலைக்குள் எப்போது விழுவான், எப்படி விழுத்தலாம் என ஏங்கிக் கொண்டு கொலை, கொள்ளை, களவு, காமம், வீண்பேச்சு, மதியாத குணம், மோகம், குடிவெறி, களியாட்டம் போன்ற பல்வேறு தீய குணங்களில் மனிதனை ஈடுபடவைத்து அதிலே மகிழ்ச்சி காண வேண்டும் என்னும் நோக்குடன் சாத்தான் கர்ச்சிக்கும் சிங்கம் போல் அலைந்து திரிகின்றான். எம் இறைவனாகிய இயேசுக்கிறிஸ்துவையே பல தடவைகள் சோதனைக்குட்படுத்தியது சாத்தான். ஆனால், எம் ஆண்டவர் இயேசு சாத்தானின் சோதனைகளை முறியடித்து அதில் வெற்றியும் கண்டார். இது கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் விசுவாசத்தின் முன்அடையாளமாக வெளிக்காட்டப்பட்டுள்ளது. தவசுக் காலத்தில் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் நோன்பு, மாமிசத் தவிர்ப்பு, சிலுவைப்பாதை என்பவற்றை கடைப்பிடிக்க எம்மை நாமே ஈடுபடுத்த வேண்டும். அத்தோடு உணவுகளைப் பிறருடன் பகிர்தல், ஆடை அற்றவர்களுக்கு ஆடை வழங்குதல், ஏழைகள் மீது அன்பு செலுத்தல் வீண் வம்புக்கு பிறரை தூண்டாமை, பிறரை வஞ்சிக்காமை, ஏழை எளியவர்களை அடிமைப்படுத்தாமல் எம் சகோதர, சகோதரிகளாக ஏற்று வாழுதல், அனைவருடனும் சமாதானத்துடன் உரையாடல் போன்ற நற்குணாம்சங்களை நாம் எம்மில் வளர்த்துக் கொள்ளவே இந்தக்காலம் எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறவற்றை நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள் என இயேசு கூறியுள்ளார். எனவே, நாமும் பிறருக்கு உதவுகின்ற நல்ல மனப்பாங்கை உருவாக்கிக்கொள்ள நம்மை நாம் இயேசுவினுடைய கரங்களிலே ஒப்புக்கொடுப்போம். இந்த மனமாற்றத்தின் காலத்தில் நாம் எமது ஒவ்வொரு செயல்களும் எமக்கு நன்மையானதாக அமையவும் எமது பல தீய நாட்டங்கள், விசுவாசமற்ற தன்மைகள் என்பவற்றை களைந்தவர்களாய் இறைவன் இயேசுவின் பாடுகளை எம் வாழ்வில் தியானிக்கவும், சாத்தானின் சூழ்ச்சிகளை முறியடித்து, பிறரை அன்பு செய்து வாழுகின்ற ஓர் அமைதியான இறை வாழ்வை நோக்கிப் பயணிப்போம்.




ஜெ.ஜெனிஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர். பெண்கள், நகைகளை இரவல் கொடுக்கவும் வாங்கவும் வேண்டாம்.

**இடபம்:** பிடிவாத குணத்தால், பிறரது அதிருப்திக்கு உள்ளாவீர்கள். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** நண்பர்களால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**கடகம்:** வழக்கத்துக்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் செலவுக்குப் பணமின்றித் திண்டாடுவர். விஷ ஜந்துக்களிடம் இருந்து விலகுவது நல்லது.

**சிங்கம்:** சுபச் செய்தி, மனதை உற்சாகப்படுத்தும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். கூடுதல் சொத்துச் சேர்க்கை உண்டாக வாய்ப்புண்டு. இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**கன்னி:** செயல்களில் திட்டமிடுதல் அவசியம். கடின உழைப்பால், தொழிலைச் சீர்படுத்துவீர்கள். சீரான இலாபம் கிடைக்கும். அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். உறவினர்களால் உதவி கிடைக்கும்.

**துலாம்:** முக்கியமான விடயத்தில் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்பத்தில் சுப விடயப் பேச்சு நடக்கும். பெண்கள், தாய்வீட்டு உதவியால் மகிழ்ச்சி அடைவர்.

**விருச்சிகம்:** உறவினரைச் சந்தித்து மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். குடும்பத்துடன், விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** எவரிடமும் வாக்குவாதம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். ஆதாயம் உயரும். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும் உத்யோகத்தில் முன்னேறுவீர்கள்.

**மகரம்:** உங்களின் நற்செயலை, மற்றவர்கள் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனத்துடன் பாதுகாக்கவும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கும்பம்:** உற்சாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் கூடும். பெண்களுக்கு, பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** சமூகத்தில் சிறந்த அந்தஸ்துப் பெறுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு, எதிரியால் இருந்த தொல்லை விலகும்.







# பாலு மகேந்திராவுக்காக 'அழியாத கோலங்கள்'

தங்களின் குருவுக்கு காணிக்கையாக எதை எதையோ செய்வார்கள் சிஷ்யர்கள். ஆனால், பாலுமகேந்திராவுக்கு சமர்ப்பணம் செய்யும் விதமாக, 'அழியாத கோலங்கள்' படத்தை உருவாக்கி வருகிறார்கள் அவரது மாணவர்களான நடிகைகள் அர்ச்சனா, ஈஸ்வரி ராவ், தேவ சின்ஹா. நடிகை அர்ச்சனாவுடன் முக்கியமான பாத்திரத்தில் நடிக்கிறார் ரேவதி. இன்னொருவர் பிரகாஷ்ராஜ், நாசர். இவர்களைச் சுற்றிப் பின்னப்பட்ட கதைதான் படம்.





## இது எவர் மனதையும் உறுத்தினால் நாங்கள் பொறுப்பில்லை...

ஒரு பெண்ணின் கணவன் உளவியல் நிபுணரைச் சந்தித்தபோது, நடந்த உரையாடல்...

**நிபுணர்:** நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்..?

**கணவர்:** ஒரு வங்கியில் கணக்காளராகப் பணிபுரிகிறேன்.

**நிபுணர்:** உங்கள் மனைவி..?

**கணவர்:** அவள் வேலை செய்வது கிடையாது. வீட்டில் தான் இருக்கிறாள்.

**நிபுணர்:** குடும்பத்தினர் சாப்பிடுவதற்கு காலை உணவை தினமும் யார் தயாரிக்கிறார்கள்...?

**கணவர்:** எனது மனைவி தான். ஏனென்றால் அவள்தான் வேலைக்குச் செல்வதில்லையே.

**நிபுணர்:** தினமும் காலை உணவு சமைப்பதற்காக உங்கள் மனைவி எப்போது எழுவார்....?

**கணவர்:** அவள் காலை 5 மணிக்கு எழுவாள். ஏனென்றால் சமைப்பதற்கு முன்பாக வீட்டைச் சுத்தம் செய்வாள். அவள் தான் சும்மா இருக்கிறாளே...!

**நிபுணர்:** உங்கள் பிள்ளைகளை யார் பாடசாலைக்கு அழைத்துச் செல்வார்கள்..?

**கணவர்:** எனது மனைவி தான் அழைத்துச் செல்வாள். அவளுக்குத் தான் வேலையில்லையே.

**நிபுணர்:** பாடசாலையால் வந்த பிறகு உங்கள் மனைவி என்ன செய்வார்...?

**கணவர்:** சந்தைக்குச் செல்வாள், பின்னர் வீட்டுக்கு வந்து சமைப்பாள், துணி துவைப்பாள். அவளுக்கு தான் வேலையில்லையே

**நிபுணர்:** மாலையில் வீடு திரும்பியதும் நீங்கள் என்ன செய்வீர்கள்....?

**கணவர்:** நாள் முழுக்க அலுவலகத்தில் இருப்பதால் மிகவும் களைப்பாக இருக்கும். அதனால் நான் ஓய்வு எடுப்பேன்.

**நிபுணர்:** பிறகு உங்கள் மனைவி என்ன செய்வார்...?

**கணவர்:** இரவு உணவு தயார் செய்வாள், பிள்ளைகளுக்கு ஊட்டுவாள், பிறகு எனக்கான உணவு தயார் செய்து பாத்திரங்களைக் கழுவி வைத்த பின், வீட்டைச் சுத்தம் செய்து பிள்ளைகளைத் தூங்க வைப்பாள்.

ம்... காலையில் எழுந்தது முதல் இரவு வரை வேலை வேலை வேலை... என ஓடும் பெண், 'வீட்டில் சும்மா தானே இருக்கா... வேலையே செய்யாம' என்று பேசுவது எத்தனை கொடுமை...? மனைவியைப் பாராட்டுங்கள், ஏனென்றால் அவளின் தியாகங்கள் எண்ணிலடங்காதவை.

படித்ததில் பிடித்தது

**எழில்** @ezhil769 · Feb 16

வெண் தோழி பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் பற்றிக் கொள்ளக் கூடாது என பஞ்சு நனைத்துக் கொண்டும் நெருப்பு அணைத்துக் கொண்டும் பேசிக்கொள்கின்றன நட்புடன்.

**கவுண்டமணி** @Writer_Naina · Feb

பஞ்சபூதங்களிலும் தி.மு.க. ஊழல்!
நிலம் – நிலம் கையகப்படுத்தல்,
நீர் – சேது சமுத்திரம்
காற்று – 2 ..
நெருப்பு – நிலக்கரி சுரங்கம்
ஆகாயம் – ஸ்பைஸ் ஜெட்

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 9 | | 5 | | 7 |
| 8 | | 9 | | | | | | |
| | 7 | | 4 | | | | 2 | 9 |
| | | 4 | | | | | | 6 |
| 3 | | | | | 4 | | | 5 |
| | | | | 5 | 9 | 4 | 1 | |
| 2 | | | | | 7 | | | |
| | | 7 | | | 1 | | 3 | 2 |
| 5 | | 1 | 3 | 2 | | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 1 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 4 | 2 | 1 | 6 | 9 | 7 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 7 | 5 | 3 | 4 | 1 | 2 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 2 | 1 | 8 | 7 | 9 |
| 2 | 1 | 9 | 3 | 7 | 8 | 6 | 5 | 4 |
| 8 | 7 | 4 | 9 | 5 | 6 | 3 | 1 | 2 |
| 1 | 4 | 5 | 7 | 6 | 9 | 2 | 3 | 8 |
| 6 | 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 4 | 5 |
| 7 | 3 | 2 | 8 | 4 | 5 | 9 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வண்டு பிடிக்காமல் இருக்க....


அரைத்து வைத்திருக்கும் மாவில் வண்டுகளோ, பூச்சிகளோ வராமலிருக்க ஒரு சிறு துணியில் உப்பை வைத்துக் கட்டி மாவுக்குள் போட்டு விடவேண்டும்.

அரிசியில் பூச்சி பிடிக்காமல் இருக்க அரிசி கொட்டும் பாத்திரத்தில் வேப்பிலைகளைப் போட்டு பின்னர் அரிசியைக் கொட்ட வேண்டும்.

எதையும் அப்படியே வைத்தால் பூச்சி பிடித்து விடும். அவ்வப்போது சூரிய ஒளியில் வைத்து எடுக்க வேண்டும்.

இது புதுசு






## குழந்தைகளுக்கான விரிப்பு

குழந்தைகளுக்கான விரிப்பு அறிமுகமாகியுள்ளது. இந்த விரிப்பு மென்மையான, இலேசான, கழுவிப்பாவிக்கக் கூடிய ஒன்றாகும். சிறிய காற்றுக் குமிழிகள் இருப்பதால், குழந்தைகளுக்கு மிகவும் இலேசான உணர்வை வழங்கக் கூடியதாகவும். பிளாஸ்ரிக் இறப்பரால் உருவாக்கப்பட்டதால், நீர் கசியும் வாய்ப்பற்றதாகவும் இது உள்ளது. அத்துடன் காற்றுக் குமிழிகள் இருப்பதால் நீர் தேங்கவும் மாட்டாது. இது, 3,000 ரூபாவில் இருந்து 3,600 ரூபாவரை விற்பனைசெய்யப்படுகிறது.

## நாளை

மாசி-14
வெள்ளிக்கிழமை
26.02.2016
திதி: சதுர்த்தி முழுவதும்
நட்சத்திரம்: அத்தம் பி.ப. 2.34
ராகுகாலம்: 10.59-12.29 வரை
சுபநேரம்: 06.29-07-59 வரை
சங்கடஹரசதுர்த்தி


## உருளைக் கிழங்கு போளி

### தேவையான பொருள்கள்:-

உருளைக்கிழங்கு – 10
உளுத்தம்பருப்பு – ஒரு தேக்கரண்டி
கடலைப்பருப்பு – ஒரு தேக்கரண்டி
(இரண்டையும் தனித்தனியாக வறுத்துப் பொடி செய்யவும்)
முந்திரிப் பருப்பு – 10
மைதா மா – 2 கப்
பச்சை மிளகாய் – 1 அல்லது 2
கடுகு – 1 தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
நல்லெண்ணெய் – தேவையான அளவு
கருவேப்பிலை சிறிது.

### செய்முறை

சட்டியில் எண்ணெயை ஊற்றி வெட்டிய பச்சை மிளகாய், கருவேப்பிலை, போட்டு வதக்கி அதனுடன் வேகவைத்த உரித்த உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள், பொடி செய்த தூள் கலந்து கிளறி இறக்கி வைக்கவும். மைதா மாவில் உப்புடன் சிறிது எண்ணெய், தண்ணீர் சேர்த்து போளிக்கு பிசைந்து கொள்வதுபோல் பிசைந்து கொள்ளவும். ஒவ்வொரு உருண்டையையும் எடுத்து அதனைத் தட்டி நடுவில் வைக்கவும். பிறகு சாதாரண போளி செய்வது போல் தோசைக் கல்லில் போளியைப் போட்டு நெய் ஊற்றி இரண்டு பக்கங்களையும் வேக வைத்து எடுக்கவும்.





## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 500 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 600 | 800 | – |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 450 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 250 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 200 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஒரா | 300 | 400 | – | – | 400 | – | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 150 | 350 |
| நகரை | 150 | 300 | – | 200 | 450 | 200 | 350 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 300 | 250 | – |
| மதனம் | 100 | 250 | 180 | 300 | 300 | 300 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 200 | 50 | – |
| பாலை | 300 | 200 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 300 | 250 |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 50 | 80 | 40 | 60 | 70 | 30 |
| கரட் | 150 | 180 | 160-200 | 160 | 100 | 240 | 120 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 80 | 80 | 120 | 60 | 80 |
| பாகல் | 80 | 80 | 80 | 80 | 100 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 60 | 50 | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 80 | 80 | 60 | 70 |
| பூசணி | 80 | 100 | 60 | 60 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 50 | 50 | 40 | 40 | 50 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 50 | 40 | 50 | 60 | 60 | 45 | 40 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 20 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 100 | 120 | 100 | 160 | 300 | 120 | 200 |
| புடோல் | 60 | 80 | 50 | 40 | 50 | 80 | 30 | 60 |
| கோவா | 70 | 70 | 60 | 80 | 60 | 120 | 70 | 60 |
| வெண்டி | 100 | 70 | 60 | 60 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 70 | 80 | 80 | 80 | 100 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 140 | 140 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 50 | 50 | 40–50 | 50 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 120 | 160 | 120 | 120 | 200 |
| இராசவள்ளி | 150 | 100 | 140 | 100 | 140 | 160 | 100 | 75 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300-500 | 350 | 400 | 300 | 400 | 500 |
| [illegible] | 05 | 02 | 05 | 02 | 07 | – | 02.50 | 02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்று

பணியும் நேற்று இடம்பெற்றிருக்கவில்லை. அரச திணைக்களங்களின் பணிகள் இடம்பெறவில்லை. சிறுமியின் இடமான வவுனியாவில் முழு அடைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மாணவியின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்து தண்டிக்கவும், இத்தகைய சம்பவங்கள் இனிமேல் இடம்பெறக்கூடாது என்று வலியுறுத்தியும் மாணவியின் சாவுக்கு நீதி வேண்டியும் இந்த அடைப்பு நேற்றுமுழு அளவில் முன்னெடுக்கப்பட்டது.

மாணவியின் சம்பவம் கடும் தாக்கத்தையும் மாணவர்கள், பெற்றோர் மத்தியில் பயத்தையும் ஏற்படுத்தியிருக்கும் நிலையில், இது போன்ற சம்பவங்கள் இனிமேல் இடம்பெறக்கூடாது என்பது அனைவரதும் பிரதான கோரிக்கையாகவுள்ளது.

இதனை வலியுறுத்திப் பொது அமைப்புக்களால் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டு நேற்றுப் பூரணமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் வன்முறைகள் எதுவும் பதிவாகவில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்.நகர் உட்பட வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகத்திலும் கடையடைப்பு முன்னெடுக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் மூடப்பட்ட வியாபார நிலையங்கள் நேற்று மீளவும் திறக்கப்படவில்லை. அரச பணியாளர்கள் உள்ளிட்ட சிலரின் நடமாட்டம் காலையில் இருந்தபோதும் பின்னர் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தனியார் பஸ்கள் பணியை முற்றாகவே புறக்கணித்திருந்தன. பொதுமக்களின் நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டதால் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் செயற்பாடுகளும் குறைவாகவே காணப்பட்டன. தனியார் நிறுவனங்களும் தொழிற்படவில்லை.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை மற்றும் உடுப்பிட்டிப் பகுதிகளிலுள்ள பிரதான சந்தைகள் இயங்கவில்லை. அரச திணைக்களங்கள் இயங்கியபோதும் பொது மக்களின் வருகை குறைவாகக் காணப்பட்டது.

பாடசாலைகளுக்கு அதிபர் ஆசிரியர்கள் வருகை தந்தபோதும் மாணவர்களின் வரவின்மையால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. யாழ்.பல்கலைக்கழக கல்விச் சமூகம் நேற்றைய அடைப்புக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினர். அரச, தனியார் வங்கிகள் தமது பணிகளை வழமைபோன்று மேற்கொண்டிருந்தன.

**வவுனியா**

வவுனியாவில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதுடன் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பொதுமக்களுக்கான சேவைகள் நிறுத்தப்பட்டுத் திட்டமிட்டவாறு முழு அடைப்பு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பெட்டிக் கடைகள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும், பாடசாலைகளும் மூடப்பட்டிருந்ததோடு, மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. அரச திணைக்களங்களில் பொதுமக்களுக்கான சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் மாவட்ட செயலகம் உட்பட்ட திணைக்களங்கள் வெறிச்சோடின. மேலும், திரையரங்குகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், தனியார் கல்விநிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அநேகமான வங்கிகளில் வாடிக்கையாளர் சேவைகள் இடம்பெறவில்லை. போக்குவரத்து சேவையில் வெளிமாவட்டங்களுக்கான பஸ்சேவைகள் மட்டும் இடம்பெற்றன. தனியார் பஸ்களோ, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களோ சேவையில் ஈடுபடவில்லை.

அத்துடன், வவுனியா – மன்னார் வீதி, குருமன்காட்டுச் சந்தி, வைரவப் புளியங்குளப்பகுதி வீதிகளில் காலையில் ரயர்கள் போட்டு கொளுத்தப்பட்டிருந்தன. பொலிஸார் அதனை அப்புறப்படுத்தினர். தொடர்ந்து பிரதான வீதிகளில் ரோந்து நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

மாணவியின் படுகொலையைக் கண்டித்துப் பதாகைகள் வீதிகளில் தொங்கவிடப்பட்டிருந்தன. அத்தோடு வவுனியா விவசாய கல்லூரி மாணவர்களால் வவுனியா சிறுமிக்கு நீதி வேண்டி கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றும் விவசாயக் கல்லூரி முன்பாக நடத்தப்பட்டிருந்தது.

**முல்லைத்தீவு**

முழு அடைப்புக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்குமுகமாக தமது வர்த்தக நிலையங்களை முழுமையாக மூடியதுடன் பாடசாலை மாணவர்கள் பாடசாலையை முழுமையாகப் புறக்கணித்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்துச் சேவையினர் தமது சேவைகளை முழுமையாக நிறுத்தியிருந்தனர். எனினும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் தமது வழமையான நேர அட்டவணைக்கு அமைய போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டன. அநேகமான பாடசாலைகள் ஆசிரியர் மற்றும் மாணவர் வரவின்றி மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன. முல்லைத்தீவு பொதுச் சந்தைகள் மூடப்பட்டிருந்தன. கூட்டுறவுத் துறையினரும் பூரண ஒத்துழைப்பை வழங்கினர்.

**மன்னார்**

காலை 6 மணிமுதல் மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் இருந்து உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்குமான சகலவிதமான போக்குவரத்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டன. இதனால் மாந்தை மேற்குப் பிரதேசச் செயலாளர் பிரிவு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்குப் போக்குவரத்தை மேற்கொள்ளவிருந்த அரச திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள், கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

தூர இடங்களில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் நேரம் தாமதித்தே பாடசாலைக்குச் சென்றனர். மாணவர் வரவு குறைவாக இருந்தபோதும் கற்றல் செயற்பாடுகள் வழமைபோன்று இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னர் மாவட்டச் சட்டத்தரணிகளும் தங்களது பணியைப் புறக்கணித்திருந்தனர். எனினும் மன்னார் பஸார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன.

**கிளிநொச்சி**

மாணவியின் கொலையைக் கண்டித்து நேற்று முன்தினம் கிளிநொச்சி பொதுச் சந்தையின் முன்பாக பொதுச்சந்தை வர்த்தகர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் உட்பட வர்த்தகர்கள் என அனைவரும் இணைந்து வடக்கின் முழு அடைப்பை கிளிநொச்சி மாவட்டத்திலும் கடைப்பிடித்திருந்தனர். மாவட்டத்தின் அனைத்து வர்த்தக நிலயங்களும் மூடப்பட்டிருந்ததுடன் பொதுச் சந்தையும் மூடப்பட்டு வியாபாரமும் நிறுத்தப்பட்டிருந்தது. பாடசாலைகள் இயங்கியபோதும் மாணவர்களுடைய வருகை குறைவால் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. அரச அலுவலகங்கள் இயங்கிய நிலையில் போக்குவரத்து நெருக்கடி காரணமாகப் பணியாளர்கள் அதிகளவில் வருகை தரவில்லை.

மேலும், வங்கிகளின் செயற்பாடுகளும் முடங்கியிருந்தன. இருப்பினும் சில வங்கிகள் இயங்கின. மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் தங்களது சேவையை நிறுத்தியிருந்தனர். இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் பணியில் ஈடுபட்டன. (த-வ-4-21-9-101-108-109-56-402-422-102-29-ரி7-ரி3)

## 25 வருடங்களின்

நளினி, 25 ஆண்டுகளுக்குப் பின் தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளப் பரோலில் நேற்று வெளியே வந்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு 25 ஆண்டுகளாக வேலூர் பெண்கள் தனிச் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பவர் நளினி. இவரது தந்தை சங்கர நாராயணன். ஓய்வுபெற்ற காவல் ஆய்வாளரான இவர், நெல்லை மாவட்டம் வி.கே.புரத்தில் வசித்து வந்தார்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் மாலை உடல் நலக்குறைவு காரணமாக 91 வயதான சங்கர நாராயணன் காலமானார். அவரின் உடல், சென்னை கோட்டூர்புரம் எல்லையம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது மகன் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு நேற்று அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக, தன்னை அனுமதிக்கவேண்டும் என்று நளினி சிறைத்துறையிடம் மனு அளித்தார். இதையடுத்து, நேற்றுமுன்தினம் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை 12 மணி நேரம் நளினிக்கு அனு மதி வழங்கியது சிறைத்துறை.

இதைத் தொடர்ந்து நேற்றுக் காலை, வேலூர் பெண்கள் தனிச் சிறையில் இருந்து, குற்றப்பிரிவு அதிகாரி, மகளிர் பொலிஸ் அதிகாரி மற்றும் துப்பாக்கி ஏந்திய 7 பொலிஸார் அடங்கிய பலத்த பாதுகாப்புடன் சென்னை கோட்டூர்புரத்துக்கு நளினி அழைத்துச் செல்லப்பட்டார்.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் தனது சகோதரர் இல்லத்துக்கு வந்த நளினி, தனது தந்தையின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி, உறவினர்களுடன் துயரத்தைப் பகிர்ந்து கொண்டார்.

நளினிக்கு ஆறுதல் கூறவும், அவரது தந்தைக்கு அஞ்சலி செலுத்தவும் நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் உள்ளிட்ட பல தலைவர்களும் வந்திருந்தனர். தந்தை சங்கர நாராயணன் இறுதிச் சடங்கு முடிந்ததும், நேற்று முன்தினமிரவு வேலூர் சிறைக்கு நளினி புறப்பட்டுச் சென்றார்.

இதற்கு முன் பலமுறை பரோலுக்கு நளினி விண்ணப்பித்தும் அது வழங்கப்படவில்லை. தற்போது, நளினி முதல் முறையாக வெளியே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## முழங்காவில்

தளிக்கப் பட உள்ளதாகப் பூநகரிப் பிரதேச செயலாளர் உதயனிடம் தெரிவித்தார்.

குறித்த விவசாயப் பண்ணையில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அங்கிருந்து வெளியேறி முழங்காவில் பிரதான இராணுவ முகாமுக்கு இடம் மாறினர்.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட குறித்தபண்ணையானது, கடந்த காலத்தில் பூநகரிப் பிரதேச செயலாளரினால் நடுத்தர வருமானமுடைய சுமார் 10 நபர்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டிருந்தது.

காலப்போக்கில் குறித்த நபர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றமையாலும், அந்தக் காணிகளைப் பராமரிக்காமல் விட்டமையாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகம், மாவீரர் லெப்டினன்ட் கேணல் சுமனின் பெயரில் குறித்த விவசாய பண்ணையை நடத்தி வந்தது. எனினும் கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினர் அந்தப் பண்ணையைக் கையகப்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் 7 ஆண்டுகளின் பின்னர் குறித்த பண்ணையை விடுவித்த இராணுவத்தினர், மீளவும் பூநகரிப் பிரதேச செயலகத்திடம் கையளித்துள்ளனர். குறித்த பண்ணை விடுவித்ததை அடுத்து வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டதோடு, பண்ணை தொடர்பான மேலதிக விவரங்களையும் ஆராய்ந்தார்.

அத்துடன், வன்னியில் இராணுவத்தினர் தம்வசமுள்ள காணிகள், பண்ணைகளை இதுபோன்று மீளக் கையளிப்பார்களேயானல் நாட்டின் நல்லாட்சி தொடர்பாக மக்கள் சிந்திக்க ஆரம்பிப்பார்கள் எனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

காணி விடுவிப்பு தொடர்பாகப் பூநகரிப் பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது, அதனை உறுதிப்படுத்திய பிரதேச செயலாளர், குறித்த காணிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய காணிகளை அடையாளப்படுத்தியுள்ளதாகவும் விரைவில் அவை பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (த-வ-21)

## புதிய அரசமைப்பு

வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றத்தை மாற்றுவதற்கான சட்டவரைவு மீதான விவாதத்தில் சர்ச்சை ஏற்பட்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி,

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் இணக்கப்பாடு இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு கருத்தைக் கூறுகின்றார். அமைச்சர் சுனில் பிரேமஜயந்த மற்றொரு கருத்தைக் கூறுகின்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் அரசிலுள்ள இரு கட்சிகளிடமும் இணக்கப்பாடு இல்லை என்பது இதனூடாகத்தெரிகின்றது. இதனால்தான் இந்தப் பணிகள் பிற்போடப்பட்டுள்ளன.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவதற்கு இன்று (நேற்று) இடம்பெறும் விவாதத்தை இன்றே முடித்து சட்டமூலத்தை நிறைவேற்றலாம். ஏன் அதைப் பிற்போடுகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். அப்படியானால் இதை நிறைவேற்றலாம் என்றும் தெரிவித்து சர்ச்சைக்குப் பிள்ளையார் சுழி போட்டார்.

இதையடுத்து, கருத்தொன்றை முன்வைத்த அமைச்சர் ஜோன் செனவிரட்ன,

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து பேச்சு நடத்துவதற்காக அனைவரின் இணக்கப்பாட்டைப் பெறுவதற்காக தற்போது விவாதிக்கப்படுகிறது. இந்நிலையில், இதுபற்றி அரசின் கருத்தை பிரதமரோ அல்லது சபை முதல்வரோ முன்வைப்பார் – என்றார்.

இதனிடையே கருத்தொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்,

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவதற்காகத்தான் நாம் இப்போது விவாதித்துக்கொண்டிருக்கின்றோம். 1978ஆம் ஆண்டு அரசமைப்பை கைவிடவேண்டும். அதிலுள்ள பல அம்சங்கள் ஏற்புடையவையல்ல. அதனால் புதிய அரசமைப்பை உருவாக்க 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கு நாம் இணங்கியுள்ளோம். புதிய அரசமைப்பினூடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இணக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும் நிறைவேற்று அதிகார முறை மையை நீக்குதல், புதிய தேர்தல் முறைமையை உருவாக்குவது குறித்தும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த நடவடிக்கையைக் குழப்பி தாமதப்படுத்தக் கூடாது" என்று வலியுறுத்தினார்.

இதையடுத்து, கருத்தொன்றை முன்வைத்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க,

கடந்த 9ஆம் திகதி காலையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டவரைவு குறித்து இப்போதுதான் விவாதிக்கப்படுகிறது. கட்சித் தலைவர் கூட்டத்திலும் இதுபற்றி பேசப்படவில்லை. மேலும், விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய சட்டவரைவையும் பிற்போட்டுத்தான் இது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தசட்ட வரைவை நிறைவேற்றுவதை ஏன் பிற்போடுகின்றீர்கள்? அரசுக்குள் இணக்கப்பாடு இன்றித்தான் இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது. காலத்தை வீண் விரயம் செய்யாமல் இந்தச்சட்டமூலத்தை இன்றே (நேற்று) நிறைவேற்ற வேண்டும் – என்றார்.

இதையடுத்து, தனது உரையில் மீண்டும் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, இந்தச் சட்ட மூலத்தை இன்று (நேற்று) நிறைவேற்றவேண்டும் – என்றார்.

இவ்வாறாக சர்ச்சை நீடித்துக் கொண்டிருந்த நிலையில் குறுக்கிட்ட பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால, விவாதத்தில் உங்களுக்கு (சுனில் ஹந்துன்நெத்தி ஒதுக்கியுள்ள நேரத்தில் நீங்கள் உரையாற்றலாம். உங்கள் கருத்துகளை முன்வைக்கலாம். ஆனால், திட்டமிடப்பட்ட தினப் பணியை உங்களால் மாற்ற முடியாது – என்றார்.

இதன்பின்னர் சர்ச்சை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோதும், தனது உரையைத் தொடர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, அரசமைப்பு மறுசீரமைப்பு விடயத்தை ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் தான் சீர்குலைக்கின்றன என்று குற்றஞ்சாட்டினார். (த-வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வமணி இராசா



தோற்றம் 28 . 04 . 1940

மறைவு 22 . 02 . 2016

பயிற்றோலை அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி இராசா (22.02.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாதர் - இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், இராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேசு மற்றும் விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் சகோதரியும், தவமலர், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், கனகமூர்த்தி (சுவிஸ்), மல்லிகாதேவி, காலஞ்சென்ற மாலதிதேவி மற்றும் பத்மதேவி, சுகுணாதேவி (லண்டன்), பாஸ்கரமூர்த்தி (இத்தாலி), கவிதாதேவி (கனடா), புரந்தரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்சினி, பதுமநிதி, ஸ்ரீகுகன், மகேந்திரன், துஷநந்தினி, பிரபாகரன், ஆரணி ஆகியோரின் அன்பு மாமியும், விதுஷன், விதுஷியா, சியாமா, கயானி, வினோதன், கணாளன், கோகுலன், அபிநயா, தர்ஷிகா, ஹர்ஷன், ஹர்சாந், துஷாணி, பிரணவி, பிரவின், ஜெனிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கண் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.


தகவல்:
**குடும்பத்தினர்.**

பத்மதேவி (இலங்கை - 021 791 2759), பாஸ்கரமூர்த்தி (இத்தாலி + 39334 8869755), புரந்தரன் (கனடா + 1647 2871 463), கவிதாதேவி (கனடா + 1416 5606 645), கனகமூர்த்தி (சுவிஸ் + 0041 2131 23589)

(ச.29515) (15.18.20)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் கந்தசாமி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி நேற்று (24.02.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், தவச்செல்வம் (தவா), சிவரூபன் (சிவா - London) தவரூபன் (ரூபன்), சாந்தரூபி (சாந்தி), சந்திரவதனி (ஆனந்தி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, நாகம்மா, நாகராசா, கணேசு, அன்ன லட்சுமி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருட்செல்வம் மற்றும் பஞ்சலிங்கம், காந்திமலர், வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும், சுதா, ராணி, பராசக்தி, பவளராஜா (மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்) விக்கினேஸ்வரன் (விக்கி) ஆகியோரின் அன்பு மாமனும், கஸ்தூரி, காலஞ்சென்ற செல்வன் திலீபன் மற்றும் அபிலோசனா, குகபரன், இவாஞ்ஜெலன் (London), சரண்யா (London), ரம்மியா, துளசி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

81/1, பிறவுண் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (69558) (15.18.20)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**(ரூபன் -மகன்)**

## திருமதி முத்துமணி பொன்னுத்துரை



**பிறப்பு: 26.02.1926 மறைவு: 24.02.2016**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நவாலி வள்ளிபுனம் தேவிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. முத்துமணி பொன்னுத்துரை நேற்று (24.02.2016) புதன்கிழமை முற்பகல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் (இ.போ.ச.சாரதி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சின்னப்பு-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், விமலா, தெய்வநாயகி, காலஞ்சென்ற ரமணி மற்றும் வரதராஜன், மங்களேஸ்வரி, தேவராஜா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் சங்கரத்தை வழுக்கை ஆற்று இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.பொ. வரதராஜன் (மகன்)
அதிபர் சாரத்திய பயிற்சி பாடசாலை,
இ.போ.ச. கோண்டாவில்.
077 618 1644

(69559) (10.17.18.20)

## திருமதி மேரி இரத்தினம் ஜெயராஜா



மலர்வு 05 . 10 . 1941

உதிர்வு 21 . 02 . 2016

யாழ். ஈவினை புன்னாலைக்கட்டுவனைப்பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிட மாகவும் கொண்ட மேரி இரத்தினம் ஜெயராஜா 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை இறை பதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஞானம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற அருள்நாயகம் ஜோர்ஜ் ஜெயராஜா அவர்களின் அன்பு மனைவியும் புனிதராஜாவின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சத்தியபாலன் மற்றும் சத்தியதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரி, யசோதரன், கிரிதரன், செந்தூரன், ஹரிதூரன் ஆயோரின் அன்பு மாமியாரும், ஜெயராம், ஹரிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.02.2016 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் 11.30 மணிவரை New Southgate Crematorium & cemetery Brunswick Park Road, London N11 1JJ எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு :

| | | |
|---|---|---|
| புனிதன் | - பிரித்தானியா | - 07861 261 820 |
| சத்தியதாசன் | - பிரித்தானியா | - 020 8911 8998 |
| யசோதரன் | - பிரித்தானியா | - 07939 432 802 |
| கிரிதரன் | - கனடா | - 416 898 0062 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சகுந்தலாதேவி சோமசுந்தரம்



தாவடி வடக்கைப் (பாகுதேவன் புலம்) பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி சோமசுந்தரம் 'நேற்று (24.02.2016) புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் சோமசுந்தரத்தின் பாசமிகு மனைவியும் முகுந்தன் (ஆசிரியர் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சாந்தினி (இத்தாலி), கரன் (தபால் ஊழியர் சுன்னாகம்), சரவணன், பிரபு (கணக்காளர் பிரதேச செயலகம் வெலிஓயா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மணிவண்ணன் (இத்தாலி), விஜயகுமாரி (சமூகசேவைகள் உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கோப்பாய்), ஜெயலக்குமி (ஆசிரியை மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷா, திவ்யன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தர்மலிங்கம் வீதி, இணுவில்.**
**தொ.பே: 077 655 2012**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி பாக்கியலட்சுமி தர்மலிங்கம்

**பிறப்பு: 03.03.1941** **மறைவு: 23.02.2016**



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி தர்மலிங்கம் 23.02.2016 செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பிகி-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகநாதன் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, துரைராசா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பகீரதி (ஆசிரியர்- கொழும்பு), பகீரதன் (சுவிஸ்), ஜங்கரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், சிவனேஸ்வரன் சிவப்பிரியா, சயாளினி ஆகியோரின் மாமியும் வித்தியாளினி, விதுசிகா, வியாசினி, விதுர்சன், சாளினி, சகானா, சாகிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2016) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் வடக்கு,**
**சண்டிலிப்பாய்.**

(69560)(10.17.18.20)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கந்தசாமி (செட்டியார்)

(ஓய்வுபெற்ற ஊழியர் - யாழ்போதனா வைத்தியசாலை)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (25.02.2016) வியாழக்கிழமை முற் பகல் 10.00 மணிக்கு சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**28, சின்னாலங்கண்டு ஒழுங்கை,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

(69553)
(14.18.20)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி
## புனர்பூசனி பூலோகேந்திரன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு புசல்லாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனர்பூசனி பூலோகேந்திரன் புசல்லாவையில் 22.02.2016 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா(முன்னாள் புகையிரத நிலைய அதிபர் - மலேசியா) - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அளவெட்டியைச் சேர்ந்த செல்லையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பூலோகேந்திரன் (முன்னாள் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான திருமதி க.பத்மாவதி, திருமதி ந.புஸ்பலீலா, த.குலசிங்கம் மற்றும் திருமதி க.தவமணி த.ஆலாலசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தேனுகா(ஜேர்மன்), சுதாகரன்(ஜேர்மன்), ஹேமலதா (ஆசிரியை இந்து தேசிய பாடசாலை - புசல்லாவை), சுலோஜனன்(லண்டன்), அமிர்தினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் குலேந்திரன்(ஜேர்மன்), ரஜனி (ஜேர்மன்), உதயராஜ்(ஆசிரிய ஆலோசகர் - கொத்மலை வலயம்), தமிழ்ச்செல்வி (லண்டன்), பகீரதன்(நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசிகன், பாவலன், தேசி, பூங்குழலி, கஜானன், கவின்,ரிதன், அகிரன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.02.2016) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**226, நுவரெலியா வீதி,**
**வகுவப்பிட்டிய, புசல்லாவ.**

தகவல் :
P. உதயராஜ்
திருமதி K.உதயராஜ்

**077 574 0094, 081 248 8028**



## ஓட்டோச் சாரதி- பொலிஸார் முறுகல் குறித்து
# கைபேசிகள் ஊடாகப் பகிரப்பட்டு பரபரப்பு ஏற்படுத்திய காணொலி

யாழ்ப்பாணம், பெப்.25


சுன்னாகம் நகர்ப் பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாருக்கும் ஓட்டோ சாரதிக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்புத் தொடர்பான காணொலி நேற்று கைத்தொலைபேசிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சுன்னாகம் நகரில் ஓட்டோச் சாரதி ஒருவரை வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்ய முற்பட்டபோது, இருவருக்கும் இடையே மோதல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு குறித்த சாரதி கைது செய்யப்படுவது போன்று குறித்த காணொலி அமைந்திருந்தது.

குறித்த காணொலி நேற்றுமாலை முதல் கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக பரிமாற்றப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. (வ-101)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1963
.
03
.
31



மறைவு
2016
.
01
.
26

அமரர்
## செல்லையா கணநாதன்

கடந்த 26.01.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா கணநாதன் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

**கைதடி வடக்கு,**
**கைதடி.**

**குடும்பத்தினர்.**

(C/29...)(...17.20)

# மரண அறிவித்தல்



## வேலன் முருகேசு (பாபு)

**தோற்றம்: 1 0.03.1947** **மறைவு: 23 .02.2016**

காரைநகர் அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் முருகேசு கடந்த (23.02.2016) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் (இலட்சுமணன்) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மீனாம்பிகையின் (பூம்பதி) அன்புக்கணவரும் யோகதாசன் (யோகா - D.S.I), கமலதாசன் (டோகா), குகதாசன் றஜிந்தினி (றசிதா - லண்டன்), அருள்தாசன் (நியூ நகுலா ஜுவல்லறி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிகலா, சசிவதனி, சுசீலா, பகீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷா, கபிசாந், நிசாந், காலஞ்சென்ற கிசாயினி மற்றும் கிஷாந், நிஷாயினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஐயாத்துரை, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சிவக்கொழுந்து (மணி), உருக்குமணி (குஞ்சு), சதாசிவம், கந்தசாமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அல்லின் வீதி,**

(69565)(15.17.20)

தகவல்: **குடும்பத்தினர்.**

**T.P: யோகா - 077 401 7041, அருள் - 077 880 3630**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

காரை. ஊரி. அ.மி.த.க.பாடசாலை மற்றும் நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.க பாடசாலை ஆகிய (வகை - 3) பாடசாலைகளுக்கு அதிபர் வெற்றிடம் நிலவுவதால் இலங்கை அதிபர் சேவை வகுப்பு III யைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தீவக வலயக் கல்வி அலுவலக நிர்வாகப்பிரிவில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி செலோட்டிஸ்கா ஜீவானந்தம் அன்றூ திவ்வியநேசன்

அவர்களின் அன்பு மாமி

**திருமதி சிவாம்பிகை ஜீவானந்தம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

(C/29521) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா மாணிக்கம் (உடையார்)



யாழ்ப்பாணம் அரியாலை இல.15, இராஜேஸ்வரி வீதியைச் சேர்ந்த செல்லையா மாணிக்கம் நேற்று (24.02.2016) புதன் கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் ஈஸ்வரராசா (யாழ் மாநகர சபை), தருமராசா (வவி), ரதி (யாழ் போதனா வைத்திய சாலை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னுத்துரையின் (முன்னாள் யாழ் மாநகர சபை ஊழியர்) மைத்துனரும் சாரதாவின் அன்பு மாமனாரும் தினேஸ், பத்மபிரியா, தனுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.15, இராஜேஸ்வரி வீதி,**
**அரியாலை. T.P: 077 056 3860** (69571) (15.17)

தகவல்: **குடும்பத்தினர்.**

### கார்த்திகேசு வைரமுத்து



*புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வைரமுத்து நேற்று (24.02.2016) புதன்கிழமை காலமானார்.*

*அன்னார் கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளை (அமரர்) அவர்களின் புத்திரனும், கணபதிப்பிள்ளை - தெய்வானை (அமரர்) ஆகியோரின் மருமகனும், சசிகலா (ஆசிரியை, யா/புற்றளைம.வி.), சாந்தி (சுவிஸ்), கணேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், இரங்கநாதன் (G.S.), சிவலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.02.2016) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

தகவல்: **குடும்பத்தினர்.**

### மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்

**மண்ணில் உதிராக: 03.09.1934** **இறைவனடியில் மலராக: 24.02.2016**



மூளாய் மேற்கைச் சேர்ந்த மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் நேற்று (24.02.2016) புதன்கிழமை மாலை 06.10 மணியளவில் சிவபதமடைந்தார். இவர் சங்கானை பிரதேச சபையின் ஓய்வு பெற்ற வருமானவரி மேற்பார்வை உத்தியோகத்தராவார் அத்துடன் சங்கானை ப.நோ.கூ சங்கம், யாழ் மாவட்ட நுகர்ச்சி சங்க சமாசம், இடம்பெயர்ந்த சங்கானை - காரைநகர் ப.நோ.கூ சங்கம் ஆகியவற்றின் தலைவரும் மூளாயைச்சேர்ந்த பல்வேறு சமூக அமைப்புக்களின் தலைவர், உப தலைவர், போசகராக இருந்தவராவார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ் சென்ற மயில்வாகனம் - நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற Dr. சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சி.சிவமோகன் (பூச்சியியல் உதவியாளர் - யாழ் பிராந்திய மலேரியா தடை இயக்கம், நிகழ்ச்சி இணைப் பாளர், யாழ் இராமகிருஷ்ண நலன்புரி நிலையம்), சி.சிவஞானவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. சி.கயமலா (ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் - கீரிமலை கிராமிய ஆயுர்வேத வைத் தியசாலை), சி.தனுசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சி.நிவேதிதையின் (யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று இறுதி ஊர்வலம் பிற்பகல் 2.00 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 077 239 7056** (c/29522)(15.17)

**தகவல்: பாசமிகு மகன்கள்**
**சி.சிவமோகன், சி.சிவஞானவேல்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவாம்பிகை ஜீவானந்தம்



(ஓய்வுபெற்ற ஆசிரியை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்-நல்லூர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாம்பிகை ஜீவானந்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் - நல்லூர்) 23.02.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பீற்றர் ஆறுமுகம்-சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர்-எஸ்தர் தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் S.P. ஜீவானந்தத்தின் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், Dr. பீற்றர் ஜெபநேசன் (வைத்தியர், அரசினர் வைத்தியசாலை - வவுனியா) ஜேம்ஸ் அருள்நேசன் (முன்னாள் உத்தியோகத்தர் Hatton National Bank-USA ) ஜோன் ஜீவநேசன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), அன்றூ திவ்யநேசன் (பொறியியலாளர் வீதி அபிவிருத்தி திணைக்களம்- கிளிநொச்சி) மேரி ஜெபரூபி ஜெயரூபன் (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) எலிசபெத் இந்திரரூபி தேவமித்திரன் (ஆசிரியை, சென் ஜோன்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், சுமதி கிறேஸ் ஜெபநேசன், காலஞ்சென்ற மஞ்சுளா அருள்நேசன் மற்றும் ஷிராணி ஜீவநேசன் சலோதிபீகா திவ்வியநேசன் (ஆசிரியை சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி), ஜெயரூபன் (தொழில்நுட்பவியலாளர்) அருட்பணி தேவமித்திரன் (உப அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான ஜோசப் ஜெபக்குமார், போல் அருட்குமார் மற்றும் டெபோறா ஜெபசுகிர்தா, எஸ்தர் ஜெபசுதந்திரனி (இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்- வவுனியா) ஜோசுவா ஜெபப்பிரகாசன், ஜோன் ஜெபவியூகன் (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்) சாம் தேவக்குமார், சொலமன், பிறேமக்குமார் (மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்) ஜன்ஸ்ரீன் ஜெபகிருஷாந்த் (HNDE) வோல்ட்டா ஜெபபிரசாந் (மாணவர் சென்ஜோன்ஸ் கல்லூரி) ஜீவித்தன் ஜீவானந்தம் (பல்கலைக்கழகம் கொழும்பு), சலோனிக்கா ஜீவானந்தம் (பிஷப்ஸ் கல்லூரி-கொழும்பு ) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற பிரதான கணக்காளர் இலங்கை தொலைத் தொடர்பு கூட்டுத்தாபனம்) காலஞ் சென்ற நவநீத கிருஷ்ணன், காலஞ்சென்ற இயேசுமலர் மற்றும் திருமதி ஜெயமலர் அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.02.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரி யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**37, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

**திருமதி ஜெயரூபி ஜெயரூபன்** 077 0366 211
**திருமதி இந்திரரூபி தேவமித்திரன்** 077 666 8968
**அருள்நேசன் ஜீவானந்தம்** 00192923 152 76 (USA)

தகவல்: **குடும்பத்தினர்**

(69570) (10.17)

---

**பிறப்பு**

**24**

**01**

**1949**



**இறப்பு**

**24**

**02**

**2016**

திருமதி.

### யசோதராம்பிகை நடராஜா

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு 04, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. யசோதராம்பிகை நடராஜா 24.02.2016 அன்று காலமானார். இவர் 47, பலாலி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு. திருமதி. தில்லையம்பலத்தின் மகளும், காலஞ்சென்ற கந்தையா நடராஜா (களபூமி, காரைநகர்) அவர்களின் அன்பு மனைவியும், பவித்ரா, செந்தில்குமார், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராஜ்ஜின் **(HNB)** அன்பு மாமியாரும், கோபிராஜின் பாசமிகு பேத்தியாரும், சுந்தராம்பிகை, காவேரியம்மா, சிறினிவாசன், காலஞ்சென்ற சிறிகிருஷ்ணராஜா, சிறிஸ்கந்தராஜா, சிறீவிசாகராஜா, காலஞ்சென்ற மாதவாம்பிகை, சிறிஜெயராஜா, சாரதாம்பிகை, சிறிகணேசராஜா, வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25.02.2016 வியாழக்கிழமை, பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் காலை 8.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 2.00 மணிக்கு ஈமக்கிரிகைகள் நடைபெற்று 3.30 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

**தொடர்பு : 071 4118462**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரம் ம.வியின் கால்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், பெப். 25

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும் பிரதி அதிபருமான திருமதி சந்திரகாந்தன் கமலாவதி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதன்படி இன்று காலை 8 மணிக்கு சிவநகர் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து பரந்தன் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி மு.ப. 11.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியுடன் மோதவுள்ளது.

காலை 9.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளி நொச்சி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து பளை மத்திய கல்லூரி அணி மோத வுள்ளது. மு.ப.10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திரு வையாறு மகா வித்தியாலய அணியை எதிர்த்து மகாஜனக்கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து வட்டக்கச்சி மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (ம-23)

# நியூசிலாந்தை வெள்ளையடித்தது ஆஸி. தோல்வியுடன் விடைபெற்றார் மக்கலம்

ஆஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் ஏழு இலக்குகளால் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா தொடரை 2:0 என வெள்ளையடிப்புச் செய்தது. ஆஸ்திரேலியாவின் இந்த வெற்றியின் மூலம் நியூசிலாந்தின் அணித்தலைவரான மக்கலத்தின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை தோல்வியுடன் முடிவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி நியூசிலாந்தின் இன்னிங்ஸ் 370 ஓட்டங்களுடன் நிறைவு கண்டது. அதிகபட்சமாக மக்கலம் 145 ஓட்டங்களையும், அண்டர்சன் 72 ஓட்டங்களையும், வற்லிங் 58 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன் 3 இலக்குகளையும், கசில்வூட், பற்றின்சன், பேட் மூவரும் தலா இரு இலக்குகளையும், மிச்செல் மார்ஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸிற்காக 505 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பேர்ண்ஸ் 170 ஓட்டங்களையும், ஸ்ரீவ் சிமித் 138 ஓட்டங்களையும், வோக்ஸ் 60 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக வாக்நெர் 6 இலக்குகளையும், போல்ட் 2 இலக்குகளையும், அண்டர்சன், வில்லியம்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கவேண்டுமாயின் 135 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து, சகல இலக்குகளையும் இழந்து 335 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 97 ஓட்டங்களையும், ஹென்றி 66 ஓட்டங்களையும், வற்லிங் 46 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக பேட் 5 இலக்குகளையும், பற்றின்சன் 4 இலக்குகளையும், கசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது கைகொடுக்க ஆஸ்திரேலியாவுக்கு இலக்காக 201 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது ஆஸ்திரேலியா. அதிகபட்சமாக பேர்ண்ஸ் 65 ஓட்டங்களையும், சிமித் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், கவாயா 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக போல்ட், சவுத்தி, ஹென்றி மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பேர்ண்ஸ் தெரிவானார். (ம)

## பயணிகளை

விதித்துத் தீர்ப்பளித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பொலிஸாருடன் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, பயணிகள் போக்குவரத்துக்கு உகந்தவையாக இல்லாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கு எதிராக, அதிரடியாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சேவையில் ஈடுபடும் 15 பஸ்களுக்கு எதிராகவே இவ்வாறு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, உடைந்த முன்பக்கக் கண்ணாடியைக் கொண்டிருந்தமை, தெளிவற்ற இலக்கத் தகடுகளைக் கொண்டிருந்தமை, தேய்ந்த ரயர்களுடன் சேவையில் ஈடுபட்டமை, வாகனத்தில் மேலதிக விளக்குகளைப் பொருத்தியிருந்தமை, அதிக புகையை வெளியேற்றியமை, தடுப்புக்கள் இன்றிப் பயணம் செய்தமை, கைத்தடுப்பு இல்லாமை, சமிக்கை விளக்குகள் இன்றிப் பயணம் செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, குறித்த பஸ்களின் சாரதிகள் மற்றும் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு, யாழ்.நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, பன்னிரண்டு மினிபஸ் உரிமையாளர்கள், குறித்த குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் குற்றவாளிகள் எனத் தெரிவித்தையடுத்து, அவர்களுக்கு நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கேற்ப 8 ஆயிரம் ரூபாவிலிருந்து 26 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் நீதிமன்றின் மறு உத்தரவு வரும்வரை அவர்களின் வழித்தட அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறும் வாகனங்களைப் பாவிக்கக்கூடாது என்றும் நீதிவான் சதீஸ்தரன் உத்தரவிட்டார். நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காத ஏனைய பஸ் உரிமையாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் பயணிகள் போக்குவரத்துக்கு உகந்த நிலையில் இல்லாத மினி பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில், விபத்துக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவும் அதன் மூலமாக விபத்துக்களைக் குறைக்கவும் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4-103)

## ஐங்கரநேசனை

டுள்ளது.

இந்தப் பிரேரணை இன்றைய தின அமர்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுகின்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக, மாகாண சபையின் கடந்த அமர்வில் பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்தது. பதினொரு குற்றச்சாட்டுக்கள் அந்தப் பிரேரணையில் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்று கொண்டு வரப்பட்டு, மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை ஒழுங்கு முறைகளின் பிரகாரம் பத்து நாள்களுக்கு முன்னர் சமர்பிக்கப்படாமல் திடீரெனக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும் போது அமைச்சர்கள், முதலமைச்சர் சபையில் இருக்கவில்லை.

இதனால் குறித்த பிரேரணை மற்றும் அதனுடன் தொடர்புடைய விவாதங்களை சபைப் பதிவேட்டிலிருந்து நீக்குமாறு கோரி, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் கையெழுத்திட்டு முதலமைச்சரிடம் கையளித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களாக ம.தியாகராசா, இ.இந்திரராசா, எம்.பி.நடராஜ், திருமதி அனந்தி சசிதரன், க.விந்தன், பசுபதிப்பிள்ளை, க.சிவநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரேரணையை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சபையில் இன்றைய தினம் எடுத்துக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## ஐ.நா. தீர்மானத்தில்

அரசு செயற்படுத்தவேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செப்ரெம்பர் மாதக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்துவதாக இலங்கை அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே, சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளதாவது:-

குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகள் செயன்முறைப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ள நிலையில் அந்தத் தீர்மானப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்ற போதிலும், சொற்பளவான நடவடிக்கைகளே இதுவரை எடுக்கப்பட்டுள்ளன.

கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட சில மனித உரிமை விவகாரங்களில் இலங்கையில் முன்னேற்றம் பதிவாகியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை என்றபோதிலும், இன்னமும் பல்வேறு விடயங்களில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது-என்றுள்ளது. (த-வ-5)

## பஸ்ஸில்

கொள்ள விரும்புகின்றோம். எங்களுடைய நிறுவனத்தில் பணிபுரியும் பஸ்ஸின் சாரதியால் மேற்கொள்ளப்பட்ட தவறான நடவடிக்கை இது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிறுவனம் என்ற ரீதியில், எல்லா இனங்களும் சமனானவை என்றே நாம் நம்புகின்றோம். இந்த ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டமையால் வேதனை அடைந்துள்ள அனைத்து உள்ளங்களிடமும் வருத்தம் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த விடயம் பத்திரிகையில் வெளிவந்தமையை எமது கவனத்துக்குக் கொண்டு வந்த லயன் கிருபாகரனுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பஸ்சில் இருந்து தற்போது 'சிங்க லே' ஸ்ரிக்கர் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## சமந்தாவுடன்

பவருடனான சந்திப்பின் பின்னர் மங்கள சமரவீர ஐக்கிய நாடுகளுக்கான சுவீடனின் நிரந்தரப் பிரதிநிதியுடனும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஐ.நா. ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுடனும் பேச்சில் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையில் போருக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியிலும் சமாதானத்தால் வரும் நற்பயன்களை உணர்ந்துகொள்ளும் பணியிலும் இரு நாடுகளும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது. (த-சி)

## யாழ்ப்பாணம்

விசாரணை மேற்கொள்ளும் முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு 2014 ஆம் ஆண்டிலிருந்து பகிரங்க அமர்வுகளை நடத்தி வந்தது. கடந்த டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் தனது அமர்வுகளை இரண்டாவது தடவையாகவும் நடத்தியிருந்தது.

இந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதியுடன் அந்த ஆணைக்குழுவின் காலம் முடிவடைந்திருந்தது. அதன் பின்னர் ஜனாதிபதியினால் மூன்று மாதங்களுக்குக் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழு நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம், செவ்வாய்க்கிழமை வரை அமர்வு நடத்தவுள்ளது. இது இறுதிக் கட்டச் சாட்சியப் பதிவாக நடைபெறவுள்ளது.

இது நாளைமறுதினம் 27 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்திலும், 28 ஆம் திகதி வேலணை பிரதேச செயலகத்திலும் நடைபெறுவதுடன், 29 ஆம் திகதியும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் அமர்வு நடைபெறவுள்ளது.

இந்த அமர்வுகளில் சாட்சியமளிக்க வரும் காணாமற்போனோரின் உறவுகள், தமது முறைப்பாடு தொடர்பான ஏதேனும் ஆவணங்கள் இருப்பின் அமர்வுகள் நடைபெறும் தினத்தில் அவற்றை மேலதிக பிரதியுடன் எடுத்து வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்ட தரவுப் படிவம் இதுவரையில் திருப்பி அனுப்பி வைக்கப்படாவிட்டால் அமர்வுக்கு வருகை தரும்போது பூர்த்தி செய்து எடுத்து வருமாறும் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5-ரி5-9)

## நல்லாட்சி

ச்சினால் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது, படுகொலைகள், வன்புணர்வுகள், ஆள்கடத்தல்கள், கொள்ளைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சட்டம் ஒழுங்கு அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

குறித்த கேள்விகளுக்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சு சபாபீடத்தில் சமர்ப்பித்த பதிலிலேயே மேற்படி தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2014 ஜனவரி முதலாம் திகதி முதல் 2014 ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டில் 473 கொலைகள், ஆயிரத்து 75 பாலியல் வன்புணர்வுகள், 245 ஆள்கடத்தல்கள், 25 கப்பம் கோரல்கள், 3 ஆயிரத்து 554 கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், 2015 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2015 ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 407 கொலைகள், ஆயிரத்து 78 பாலியல் வன்புணர்வுகள், 208 கடத்தல்கள், 27 கப்பம் கோரல்கள், 3 ஆயிரத்து 259 கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 25

***யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்***

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்தி அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

***வைகறை வி.கழகத் தொடர்***

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மயிலிட்டி பாரதி அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் சுன்னாகம் ஐயனார் அணியை எதிர்த்து மானிப்பாய் பெஸ்ட்கோம் அணி மோதவுள்ளது.

***வவுனியா கால்பந்தாட்டம்***

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை காலை தொடக்கம்மாலைவரை நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-23)



# சம்பியனானது பருத்தித்துறை மெதடிஸ் வடமராட்சி வலய மேசைப்பந்தாட்டத்தில்

கரணவாய், பெப். 25

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் மற்றும் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை சம்பியனாகியுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டங்களில் 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணியும் வல்வை மகளிர் அணியும் மோதின. இதில் பலத்த போராட்டத்தின் பின் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை வடஇந்து மகளிர் கல்லூரி பெற்றது.

15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும் மோதின.

இதில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை சம்பியனாகியது. மூன்றாமிடத்தை வல்வை மகளிர் கல்லூரி பெற்றது. (ம-108)

## வெற்றி மழையில் ஹாட்லி அணி

கரணவாய், பெப். 25

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டத்தில் 19 வயது மற்றும் 15 வயது பிரிவுகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அணிகள் இந்த வருடத்தின் வலயச் சம்பியனாகின.

ஹாட்லிக் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

19 வயதுப்பிரிவில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி மோதியது. இதில் ஹாட்லிக் கல்லூரி அணி வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை புற்றளை மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

15 வயதுப்பிரிவில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி மோதியது.

இதிலும் ஹாட்லிக்கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (ம-108)

## பருத்தித்துறை கோட்ட மெய்வன்மை

கரணவாய், பெப். 25

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (ம-422-108)

## மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை அசத்தல்

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட நகர கல்விக் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணி சம்பியனானது. நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில், மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அணி 4:0 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி, பெப். 25

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளி சிறார்களின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு குறித்த பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. முன்பள்ளி முகாமைத்துவக்குழு தலைவர் திருமதி ச.நற் குணதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-9)

## அல் இக்பால் அபார வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 25

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல் இக்பால் அணி வெற்றிபெற்றுள்ளது.

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல் இக்பால் அணியை எதிர்த்து அம்மன் அணி மோதிக் கொண்டது.

இதில் அல் இக்பால் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# எறிபந்தாட்டத்தில் சாதித்தது நெல்லியடி மத்தி



வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக் குட்பட்ட இருபாலாருக்குமான எறிபந்தாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், கலட்டி றோ.க.த.க. பாடசாலை அணியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் 25:23, 25:22 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர்செற் கணக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியனானது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின. இதில் 25:23 26:24 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 நேர்செற் கணக்கில் சம்பியனாகியது நெல்லியடி மத்திய கல்லூரி அணி. மூன்றாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி பெற்றது. (ம-422-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதற்றமற்ற வெற்றியை பதிந்தது இந்தியா சொந்த மண்ணில் வீழ்ந்தது பங்களாதேஷ்



ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 45 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

ஆடுகளத்தில் புற்கள் இருந்தமையால் பந்து வீச்சாளர்களின் சாதகத்தன்மைக்காக நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவுசெய்தது. இந்தியாவின் ஆரம்ப இணைப்பாட்டம் நீடிக்கவில்லை. ஒவ்வொரு பந்தும் பந்துவீச்சாளரின் பெரிதான ம்யற்சியில்லாமல் நன்றாக உள்ளும் வெளியுமாகத் திரும்பி வந்தது. இதற்கேற்ப இரண்டே ஓட்டங்களுடன் போல்ட் ஆனார் தவான். கோக்லியும் நீடிக்கவில்லை. ரோகித்துடன் இணைந்தார் யுவராஜ். அதிரடி என்று சொல்லும் அளவுக்கு ஆட்டம் இல்லையென்றாலும் இலக்குச் சரிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

ரி-20 ஆட்டங்களில் தனது ஆயிரமாவது ஓட்டத்தை எட்டினார் யுவராஜ். பந்துக்ள் பழக்கப்பட ரோகித் தனது விளாசலைப் படிப்படியாக ஆரம்பித்தார்.



ரோகித் சர்மாவின் வாய்ப்பு ஒன்றும் சகிப் அல் கசனால் நழுவவிடப்பட இந்தியாவின் பலம் இரட்டிப்பானது. 15 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் யுவராஜ். பாண்டியா களமிறங்க ஆடுகளம் பந்துவீச்சுக்குச் சாதகமானது என்ற எண்ணமே இல்லாமல் போனது. 125 என எதிர்வுகூறப்பட்ட இந்தியாவின் இறுதி ஓட்ட எண்ணிக்கை 160 இனைத் தாண்டும் என கணிப்பிடப்பட்டது. அரைச்சதம் கடந்தார் ரோகித். ரோகித் சர்மாவின் துடுப்பில் இருந்துஅவ்வப் பொழுது சிக்சர்களும் இருந்தன. இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 83 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ரோகித் சர்மா. அதே பந்துப்பரிமாற்றத்தில் 31 ஓட்டங்களுடன் பாண்டியாவின் ஆட்டமும் நிறைவுக்கு வந்தாலும் சிக்சருடன் இன்னிங்ஸை முடித்தார் டோனி. முடிவில் இந்தியா 166-6.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக அல் அமின் ஹுசைன் 3 இலக்குகளையும், மோர்ரசா, முகமதுல்லா, சகிப் அல் ஹசன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக்களமிறங்கிய பங்களாதேஷை முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே மிரட்டியெடுத்தார் நெக்ரா. நெக்ரா பும்ரா இணை முதல் ஆறு பந்துப்பரிமாற்றங்கள் வரை கச்சிதமாக வீசினர். அவ்வப்பொழுது இலக்குகளும் சரிய முதல் பத்து பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் பங்களாதேஷ் 51-3. இறுதிப் பத்துப் பந்துப்பரிமாற்றங்களில் 116 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. இயலாத காரியமாக இருப்பினும் சிறிது போராட்டம் காட்டினார் சப்பிர் ரகுமான். அரைச் சதத்தை பதிவு செய்யவிடாமல் ரகுமானை வெளியேற்றினார் பாண்டியா. பின் வரிசை வீரர்களாலும் எவையும் இயலாமல் போனது. அத்தனை பந்துவீச்சாளர்களும் கச்சிதமாக வீச 20 பந்துப்பரிமாற் றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 121 ஓட்டங்களை மட்டுமே பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக நெக்ரா 3 இலக்குகளையும், பும்ரா, பாண்டியா, அஸ்வின் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ரோகித் சர்மா ஆட்டநாயகனானார்.

(ம)

A/L PERSONAL CLASS
Biology
Chemistry
Theory & 37 வருட Past Papers கற்பிக்கப்படும்.
Ms.S.சிவசண்முகானந்தசர்மா B.Sc(che.sp)
TP No: 076 654 1292

## கசில்வூட்டுக்கு அபராதம்

நியூசிலாந்து-ஆஸ்திரேலியா அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட்டில், தவறான நடத்தை காரணமாக ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளரான கசில்வூட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் நியூசிலாந்து அணியின் வீரர் வில் லியம்சன் 88 ஓட்டங்களில் ஆடிக் கொண்டிருந்த போது, கசில்வூட் வீசிய தாழ்வான பந்து அவரது காலில் பட்டதாகக் கருதி ஆஸ்திரேலிய அணியினர் எல்.பி.டபிள்யூ. கேட்டு முறையிட்டனர். ஆனால் நடுவர் மார்ட்டின்ஸ், வில்லியம்சன் ஆட்டமிழக்கவில்லை என்று அறிவித்தார்.

இந்த முடிவை எதிர்த்து ஆஸ்திரேலிய தலைவர் சிமித், டி.ஆர்.எஸ். முறைப்படி முறையிட்டார். இதைத்தொடர்ந்து வீடியோவை ஆய்வு செய்ததில் பந்து துடுப்பு மட்டையில் உரசிச் செல்வதாகத் தெரிந்தது. இதனால் ஆட்டமிழப்பு அல்ல என்று தீர்வானது. இதை ஏற்க மறுத்த கசில்வூட் நடுவரின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்குவாதம் செய் தார். இதனையடுத்து அவருக்கு 15 சத வீதம் அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

(ம)

## இலங்கை - அரபு இராச்சியம் இன்று எதிர்த்து மோதுகின்றன

ஆசியக் கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்த்து இலங்கை அணி மோதுகின்றது.

தொடரில் ஐந்து அணிகள் என்பதால் லீக் ஆட்டங்களின் பெறுபேற்றினைப் பொறுத்து இறுதியில் விளையாடும் அணிகள் தீர்மானிக்கப்படும். ஆதலால் இந்தியா, பாகிஸ்தான் போன்ற அணிகள் பலவீனமான அணியான ஐக்கிய அரபு இராச்சியத்தைப் பெரும் வெற்றி பெற்று புள்ளிகள் தரவரிசையில் தமது இருப்பை தக்க வைக்க திட்டமிருக்கும். இந்த அடிப்படையில் இலங்கையும் அரபு இராச்சியத்தை பெருவெற்றி பெறவேண்டும் என்பது கட்டாயமாகின்றது. (ம)




மாபெரும் ஏல விற்பனை
பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கு
மார்ச் 03ஆம் திகதி
புகையிரத நிலைய வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா
அஜித் - 0773 - 136404
நெலும் - 011 - 5923880
பார்வைக்கு - மார்ச்
01ஆம், 2ஆம் திகதிகளில்
(10.17.20)
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 124 Years of Service Excellence.
Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom:
290, Havelock Road, Colombo 5.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588170
Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com

## பாக். லீக் ரி-20 தொடரில் இஸ்லாமாபாத் யுனைற்ரெட் சம்பியன்

பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரின் இறுதி ஆட்டத்தில் 6 இலக்குகளால் குவெட்டா கிளாடியேட்டஸ் அணியை வீழ்த்திய இஸ்லாமாபாத் யுனைற்ரெட் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் இந்த இறுதி ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய குவெட்டா கிளாடியேட்டஸ் அணி சங்கக்கார, செசாட் அதிரடியால் 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக செசாட் 64 ஓட்டங்களையும், சங்கக்கார 55 ஓட்டங்களையும் பெற்றனர். சிறிது கடினமான இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இஸ்லாமாபாத் யுனைற்ரெட் அணிக்கு தொடக்க வீரர் டுவைன் ஸ்மித் அதிரடி காட்டினார். அவர் 51 பந்துகளில் 7 பவுண்டரிகள் 4 சிக்சர்கள் என 73 ஓட்டங்கள் எடுத்தார். இதன் பிறகு வந்த பிராட் ஹடினும் தன் பங்கிற்கு [illegible] தள்ள, இஸ்லாமாபாத் அணி 18.4 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கை அடைந்தது. பிராட் ஹடின் 39 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.